விலை: ரூ.100/-

மாதாந்த பல்சுவை சஞ்சிகை

# பனங்கூடல்

Panangkoodal

இதழ் 02 தை 2014




எம் மண் எமக்களித்த அருஞ் செல்வமே பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம நிலைக் கோல்




ஆசிரியர்குழு
எஸ்.அருளானந்தம்
சு.சசிரேகா
க.அபராசுதன்
இ.இலங்கன்


தொடர்புகளுக்கு:
பனங்கூடல் சஞ்சிகை
ஜீவ பவனம், மல்வம், உடுவில்.
தொலைபேசி: 0779114549 / 0775304317/ 0777568734
மின்னஞ்சல் : panangkoodal@gmail.com


# பனங்கூடல்


இதழ் 02 தை 2014

அட்டைப்படம் – எழுவைதீவு சிறுவர்












| | |
|---|---|
| பனை அபிவிருத்தி சபை, விரிவாக்கல் பகுதியின் பனங்கைப்பணிச் செயற்பாடு –கே.கோபாலகிருஷ்ணன் | 06 |
| பனை அபிவிருத்தி சபை, தலைவர் திரு.பசுபதி சீவரத்தினத்துடனான நேர்காணல் தொடர்ச்சி | 09 |
| என்னினத்தவரே!.. கவிதை – கரவை க.பவானி | 12 |
| தவிச்ச வாய்க்கு தண்ணீர் கொடுங்கள் | 13 |
| மக்கள் பிரதிநிதிகளின் .. – –அமலியா கைஷனி அருண் | 16 |
| அனந்தி, ராதிகா சர்வதேச.. –எஸ்.அருளானந்தம் | 18 |
| செய்திக்கூடல் | 22 |
| வெள்ளரி நிலத்தில் பிள்ளைப்பேறு – சிறுகதை | 27 |
| புகழ்பூத்த கடற் கொள்ளையர்கள்– கட்டுரை | 30 |
| ஒரு ஜனநாயகவாதியின் புத்திமதி– சுபத்திரன் கவிதை | 32 |
| காற்றில் 78–80 வீதம் நைட்ரஜன் | 34 |
| பொய் சொல்ல வேண்டாம் – சிறுகதை (சிங்கள மூலம்) | 38 |
| சினிமா விமர்சனம் – வெங்காயம் | 46 |
| சிசுவைத்தான் தின்றிடுமா– கவிதை – அபராசுதன் | 48 |


ஆக்கபூர்வமான விமர்சனங்களையும், சொந்த ஆக்கங்களையும் அனுப்பி உங்கள் ஆதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
-ஆசிரியர்குழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூக, பொருளாதார, அரசியல் தளத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டு, இன்று தமது வாழ்விற்கான உரிமையை வேண்டி நிற்கும் மக்களின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதே எமது இலக்கு.**

## "அனைத்து ஆயுததாரிகளும் மனித அழிப்பில் ஈடுபட்டார்கள்"

"தமிழ் மக்கள் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு இலக்கானார்கள்" என்ற சொற்பதம் வட மாகாண சபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கத்தவர்களுக்கிடையில் பெரும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியது. ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கிடையில் ஜனவரி 27ஆம் திகதி இந்த வாதப் பிரதிவாதம் இடம்பெற்றது. புலிகள் இயக்கத்தினால் மேஜர் எழிலன் என்றழைக்கப்பட்ட சசிதரனின் மனைவி அனந்தி சசிதரன் மற்றும் பழைய ஆயுதக் குழுவான ரெலோ இயக்கத்தின் முக்கியஸ்தர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் "தமிழ் இன அழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன" என்று தமது பிரேரணைகளை சமர்ப்பித்து உரையாற்றும்போது குறிப்பிட்டனர். வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் "இன ஒழிப்புக்கு ஒப்பான நடவடிக்கை" என்ற பதத்தைப் பயன்படுத்துமாறு உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டார். ஏனைய உறுப்பினர்களும் அந்தத் திருத்தத்திற்கு இணக்கம் தெரிவித்தனர். இது குறித்து முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில் இலங்கையில் இன அழிப்பு இடம்பெறவில்லை என்று கூறவில்லை. ஆனால் இந்த இன அழிப்பு தொடர்பாக இன்று சர்வதேச விசாரணை ஒன்று நடைபெற்று அதற்கு போதிய சாட்சியங்கள் கிடைக்காவிட்டால் இங்கு இடம்பெற்றது மனித அழிப்பு என்றுதான் வரும். அப்போது நாம் பொய் தகவல் வழங்கிவிட்டோம் என்று கூறப்படும். எனவே இன அழிப்புக்கு ஒப்பானது என்று பதத்தை மாற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரான இந்நாள் முதலமைச்சருக்கு அனைத்து ஆயுததாரிகளுமே மாற்று இனத்தவர்களை வேட்டையாடினார்கள் என்பது நன்கு தெரிந்ததுதான். எனவேதான் இவ்வாறான ஒரு மாற்றத்தை அவர் கோரியிருக்கிறார். இலங்கையில் மூன்று சகாப்த கால யுத்தத்தில் சம்பந்தப்பட்ட சகல ஆயுததாரிகளுமே மாற்று இன மக்களைக் கொன்று குவித்துள்ளார்கள். அவர்களின் உயிர்கள் உடைமைகளைக் காவு கொண்டிருக்கிறார்கள். புலிகள் தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்கள, முஸ்லிம் மக்களையும் பலியெடுத்திருக்கிறார்கள். அரச இயந்திரத்தின் பாதுகாப்புப் படைகளும் தமிழ், முஸ்லிம் மக்களை மட்டுமல்ல அப்பாவி சிங்கள மக்களையும் கொன்று குவித்திருக்கிறது. இந்த நாட்டிற்கு வருகை தந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையும் தனது பங்கிற்கு தமிழ் முஸ்லிம் மக்களை வேட்டையாடியிருக்கிறது. எனவே இன அழிப்புக்கு ஒப்பான சகல நடவடிக்கைகளையும் இந்த சகல ஆயுததாரிகளும் மேற்கொண்டார்கள் என்பதே உண்மை. மனிதத்தைக் கொன்று போட்டார்கள் இந்த அனைத்து ஆயுததாரிகளும் என்பது வரலாற்றைப் பின்னால் நோக்கிப் பார்த்தால் தெரியவரும்.


# பனங்கூடல்

இதழ் 02 தை 2014 விலை:ரூ.100/-



## விளம்பரக் கட்டணம்

முழுப்பக்கம் [18.5செ.மீ. x 27செ.மீ.]

**முழுக்கலர்**

| | |
|---|---|
| பின் அட்டை | : ரூ.15,000/- |
| முன்அட்டை உட்பக்கம் | : ரூ.10,000/- |
| பின் அட்டை உட்பக்கம் | : ரூ. 8,000/- |

**கறுப்பு வெள்ளை**


| | |
|---|---|
| முன்அட்டை உட்பக்கம் | : ரூ. 8,000/- |
| பின் அட்டை உட்பக்கம் | : ரூ. 6,000/- |

**கறுப்பு வெள்ளை [ உட்பக்கங்கள்]**

| | | |
|---|---|---|
| முழுப்பக்கம் | 16செ.மீ. x 24செ.மீ. | : ரூ. 5,000/- |
| அரைப்பக்கம் | 16செ.மீ. x 12செ.மீ. | : ரூ. 3,000/- |
| | 16செ.மீ. x 4செ.மீ. | : ரூ. 1,000/- |

விளம்பரம் / விநியோகம் தொடர்புகளுக்கு:
பனங்கூடல் சஞ்சிகை, ஜீவ பவனம், மல்வம், உடுவில்
தொலைபேசி: 0779114549 / 0777568734
மின்னஞ்சல் : panangkoodal@gmail


## எறும்பு




ஓர் எறும்பின் சடலத்தைப்
பற்றியா பேசுகிறாய்?
அதுதான் -
அந்தப் பசும்புல் தரைமீது
உலகம்
மனிதனுக்காகப் படைக்கப்பட்டது
என நாம் நன்கறிவோம்
விதியின் தவறுகளை
நாம்
துடைத்தெறிய வேண்டும்
மனிதனின் புரிதலுக்கும் அப்பால்
ஊர்ந்து செல்லும்
அச்சமூட்டும் பிராணிகளே
உங்களை மீண்டும்
விண்ணுலகிற்கே அனுப்ப வேண்டும்
ஓ! நீங்கள்
ஆயிரம் மடங்கு
உயரமாக இருந்து
துப்பாக்கியும் ஏந்தியிருந்தீர்கள் எனில்
உங்களுக்கு மரியாதை கிடைத்திருக்கும்
கொதிநீருக்குப் பதிலாக

பிரெஞ்சுக் கவிஞர் கியவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பனை பரம்பல் வீதம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ் அவர்களின் வாழ்த்துச் செய்தி



பனை அபிவிருத்தி சபைத் தலைவரின் சிந்தனையில் உதயமாகிய, சஞ்சிகை வடிவம் பெற்று வெளிவரும் பனங்கூடல் எனும் இந்த மாதாந்த இதழுக்கு வாழ்த்து தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றேன். பனை வளத்தை ஆதாரமாகக் கொண்ட யாழ்ப்பாண பண்டைத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களையும் கலாசாரப் பின்னணிகளையும் பறைசாற்றும் ஓர் நூலாக பனங்கூடல் திகழ்வது போற்றுதலுக்குரியது.

கடந்த இரு தசாப்தங்களாக தமிழர்கள் எதிர்நோக்கிய அசாதாரண சூழ்நிலைகளில் இருந்து விடுபட்டு சுபீட்சமான ஓர் வாழ்க்கை முறைக்குள் எமது சமூகம் அடியெடுத்து வைத்துள்ளது. மக்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கான பல்வேறு ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இவ்வாறான வேளையிலே மக்களது மனங்களில் உள்ள ஐயங்களை நீக்கி நாட்பட்ட ரணங்களை ஆற்றுப்படுத்தி நேரிய சிந்தனைகளையும் ஆக்கபூர்வமான எண்ணங்களையும் மக்கள் மனங்களில் உண்டாக்குவது காலத்தின் கட்டாயமாகும்.

இவ்வாறான ஒரு கைங்கரியத்தை பனங்கூடல் எனும் இந்த பல்சுவை சஞ்சிகை மூலம் செயற்படுத்த விளைகின்றமை மகிழ்ச்சிக்குரியது. இச் சஞ்சிகையானது வெறுமனே வாசிக்கப்படும் ஒரு இதழாக அன்றி மக்கள் மனங்களில் விழுது போல் ஆழமாகப் பதிந்து சமூக மாற்றங்களை உருவாக்கும் ஓர் நன்நூலாக விளங்க வேண்டும் என வாழ்த்துகிறேன். மேலும் பனை அபிவிருத்திச் சபை தலைவர் மற்றும் ஆசிரியர் குழுமத்திற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ்,
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி



பனங்கூடல் எனும் பனையின் பெருமை கூறும் இம் மடலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ் மக்களின் "கற்பகதரு" எனும் பெரும் பொக்கிஷமான பனையை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறிவுப் பெட்டகமாக பனங்கூடல் எனும் இம்மலர் மாறியிருப்பது பாராட்டுக்குரியதாகும். காலத்தின் தேவையும் கட்டியமும் கருதி வெளிவரும் பனங்கூடல் பல பயனுள்ள ஆக்கங்களையும் நவீன செய்திகளையும் அடக்கியதாக அமைந்திருப்பது தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். தற்காலத்தில் மாதாந்தமோ அல்லது காலாண்டுக்கு ஒரு முறையோ வெளிவரும் பல சஞ்சிகைகள் இருந்தாலும், மண்வாசனையுடன் கூடியதும் எமது கலை, கலாசார மற்றும் பண்பாட்டு விழுமியங்களுடன் கூடியதுமான பனங்கூடல் சஞ்சிகைக்கு தனியிடம் உண்டு என்பதை எல்லோரும் அறிவர்.

எமது நாட்டில் பனை அபிவிருத்திச் சபையானது பனை அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவரும் காரணத்தால் அச் செய்திகளை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய நிலையில் இருப்பதை எல்லோரும் அறிவர். இதுவரை காலமும் பொதுமக்கள் தெரிந்து கொள்ளாத பல தகவல்களைத் தாங்கியதாக வெளிவருகின்ற "பனங்கூடல்" சஞ்சிகை பொது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை. இச் சஞ்சிகை இலங்கையில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியில் விநியோகிக்கப்பட வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். எமது எதிர்கால சந்ததியினர் பனையின் பெருமைகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் பனங்கூடல் சஞ்சிகை சந்தைப்படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன் இதன் வெளியீட்டுக்கு உழைத்த அனைவருக்கும் உளங்கனிந்த பாராட்டுக்களைத் தெரிவுத்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர்.க.தேவராஜா.
தலைவர்,
வணிகத்துறை,
யாழ் பல்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பனை அபிவிருத்திச் சபை, விரிவாக்கல் பகுதியின் பனங்கைப்பணிச் செயற்பாடு

*"உண்ணும் உணவிற்கும், உடுக்கும் உடைக்குமாதல் உழைத்துவாழ்"*

என்பது அனைத்து அறிஞர்களும் உரைக்கும் கூற்று. உழைக்கும் வழியை கண்டறிய எமது சூழலில் உள்ள மூலவளத்தினைப் பயன்படுத்துதல் முதல் வாய்ப்பாகும். எமது பிரதேசங்களின் மூலவளமாகவும், அநேகர் தொழில்புரிய ஏதுவானதாகவும், சந்தையில் அதிகூடிய கேள்வியுடைய பொருட்களை உற்பத்தி செய்யகூடியதாகவும் பனை உள்ளது.

பனை அபிவிருத்திச் சபை மக்களின் வாழ்வெழிற்சிக்கு ஆதாரம் ஏற்படுத்தும் வழியில் பல சுயதொழில் செயற்பாடுகளை விரிவாக்கல் பகுதியினூடாக முன்னெடுத்துள்ளது. பனைக்கு அழிவில்லாவகையில் சுயதொழில் பயிற்சி ஊடான உற்பத்தி மேம்பாட்டினை நோக்காகவும், அதுசார் தொழிலாளர்களின் வாழிவியல் சமுக பொருளாதார அபிவிருத்தியினை இலக்காகவும் கொண்டு அதற்குரிய வழிகளை அமைத்து செயறப்டுகின்றது.

### பயிற்சி நடவடிக்கை



திரு.கே.கோபாலகிருஷ்ணன்
முகாமையாளர் – விரிவாக்கம்
பனை அபிவிருத்தி சபை

ஒரு நாட்டின் முதுகெலும்பு கிராமமாகும். பனைவளம் உள்ள கிராமங்கள் தோறும் பனஞ்சாற்று உற்பத்தியினை குறிப்பிட்ட சமுகத்திலுள்ள ஆண்களும், பனங்கைப்பணி உற்பத்தியினை பெண்களும் குடிசைக் கைத்தொழிலாக பாரம்பரியமுறையில் செய்து வருகின்றனர். இவர்களின் உற்பத்திகள் யாவும் அன்றாட பாவனைப் பொருட்களாகவும், உருமாற்றம் பெறாதவையாகவும் தேவையின் நிமித்தமும் உற்பத்தி செய்யப்பட்டன.

1980ஆம் ஆண்டு முதல் பனை அபிவிருத்திச் சபை, போதனாசிரியர்களூடாக கிராமிய அமைப்புக்களையும், கிராமங்களையும் நுழைவாயிலாகக்கொண்டு பனைசார் பயிற்சிகளை வழங்கிவந்தது. இப்பயிற்சிகளூடாக அழகிய வீட்டு அலங்காரப் பொருட்கள், அன்றாட பாவனைப் பொருட்களின் உற்பத்திக்கு பயிற்றப்பட்டன. பெட்டி, பாய், கடகம் பின்னுவது மட்டுமே பனங்கைப்பணியென எண்ணியோர் இப்படியும் செய்யலாம் என வியந்தனர். ஆயினும் இந்த தொழிலில் பயிற்சி பெறுவோர் குறைவாகவே இருந்தனர். இதனை சீர் செய்வதற்கு சபை பயிற்சிப் படிமுறை ஒன்றினை உருவாக்கியது.

### பயிற்சிப் படிமுறை

01. ஆரம்பப்பயிற்சி–
இப்பயிற்சிக் காலம் மூன்று மாதமாகும். கைப்பணிக்கு தேவையான அடிப்படை விடயங்களை கற்றுக் கொள்ளல்.

02. தொழில்நுட்பத்திறன் பயிற்சி–
உற்பத்தியாளர்களின் தொழில்நுட்பத்திறனை அதிகரிக்க போதனாசிரியர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி வழங்கி அத் தொழில்நுட்பத்தினை பயிற்றுவித்தல்.

03. உற்பத்திப் பயிற்சி
அறு மாதங்களுக்கு வழங்கப்படும் பயிற்சி

04. வடிவமைப்புப் பயிற்சி –
ஒரு வருடத்திற்கு வழங்கப்படும் பயிற்சி.

05. மேலதிக பயிற்சி
வடிவமைப்பு பயிற்சி பெற்றவர்களுக்கு புதிய தொழில்நுட்பப் பகிர்வை ஏற்படுத்தல் ஆகும். வருடத்தில் மூன்று முறைகள் துறைசார்ந்தோரால் பயிற்சி வழங்கப்படும். தேசிய அருங்கலைகள் நிலையம், சிறுகைத்தொழில் அபிவிருத்திச் சபை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய வடிவமைப்பு நிலையம் ஆகியவற்றுடன் இணைந்ததாக இப்பயிற்சி அமைகின்றது.


2010ஆம் வருடம் செப்ரெம்பர் மாதம் முதல் சபைத் தலைவர் அவர்கள் மேலும் பயிற்சிகளை அதிகரிப்பதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து உச்சப்பயன் அடைவதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து அதற்கு முன்னுரிமை வழங்கி செயற்பட ஆலோசனைகள் வழங்கினார். விரிவாக்கல்பகுதி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து செயற்படுத்தியது.

ஆரம்ப காலங்களில் பயிற்சி பெற்றவர்களில் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவோர் இருபது சதவீதமாகவே காணப்பட்டனர். உற்பத்தியாளர்களை இணைப்பதற்காக பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இத் திட்டத்தின் கருப்பொருளாக "சுயதொழில் செய்யும் பெண்களை நிறுவனப்படுத்தல்" என்ற நோக்கில் 1988ம் ஆண்டு "உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம்" ஆரம்பிக்கப்பட்டது.

அமைப்பு நிறுவப்பட்டது. இவ் அமைப்பிற்கான யாப்பு எழுதப்பட்டு சபையின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் தலைவர் அவர்களின் ஆலோசனையில் செயற்படுத்தப்படுகிறது. இச் சிறுசுவடுகள் சிறு சிறு குழுக்களாலான கட்டமைப்பைக் கொண்டதாகும். சிறுசுவடுகள் 1040 உற்பத்தியாளர்களைக் கொண்டுள்ளது.

பனைசார் நடவடிக்கையுள்ள ஒவ்வொரு

**பயிலுனர்**






தாய்லாந்தில் நடைபெற்ற Bangkok International Gift Fair -2013 கண்காட்சியில் கலந்துகொண்ட 19 போதனாசிரியர்களுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சின் செயலாளர் திரு. சிவஞானசோதி, பனை அபிவிருத்தி சபையின் தலைவர் திரு. பசுபதி சீவரத்தினம் பொதுமுகாமையாளர் திரு. லோகநாதன் ஆகியோர்.

இந் நிறுவனமானது சுயதொழிலை நோக்காகக் கொண்டமையினால் இதே நோக்கம் கொண்ட வேறுசில நிறுவனங்களின் ஆதிக்கத்துள் முடக்கப்பட்டு, சபையின் ஆளுகையிலிருந்து ஒதுக்கப்பட்டுவிட்டது.

2010 ஒக்ரோபர் மாதத்தின் பின்னர் பனைசார் சுயதொழிலாளர்களை தனித்துவமாக நிறுவனப்படுத்தும் நோக்கில் "சிறுசுவடுகள்" எனும் மாவட்டங்களிலும் மேற்படி நடவடிக்கைகள் வருடம் தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் வடிவமைப்பு நிலையம் ஒன்றும், பனங் கைப்பணி மாதிரிக் கிராமங்கள் இரண்டும் உருவாக்கப்பட்டுள்ளன.

### வெளிநாட்டுப் பயிற்சி:

கண்காட்சிகள் மற்றும் பயிற்சிகள் பார்வையிடல், புதிய தொழில்நுட்ப அறிவைப் பெறல் Bangkok



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரிவாக்கல் பகுதி - பனங்கைப்பணி சுயதொழில் முயற்சி**


| விபரம் | 2011 | | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|---|---|
| | பயனாளிகள் | உற்பத்தி விற்பனை (மில்) | பயனாளிகள் | உற்பத்தி விற்பனை (மில்) | பயனாளிகள் | உற்பத்தி விற்பனை (மில்) |
| பனங்கைப்பணிப் பயிற்சி (ப.அ.சபை) | 1024 | 4.98 | 1292 | 8.60 | 1511 | 12.40 |
| மேலதிக பயிற்சி | 20 | | 275 | | 575 | |
| போதனாசிரியர் பயிற்சி (தாய்லாந்து, அநுராதபுரம்) | 20 | | 30 | | 30 | |
| திவிநெகும | | | 540 | | 618 | |
| உபகரணம் வழங்கல் (திவிநெகும) | | | 288 | | 411 | |
| மாதிரி பனங்கைப்பணிக் கிராமம் | | | 275 | | 07 கிராமம் | |
| மறைமுக உற்பத்தியாளர் விற்பனை | 872 | 13.52 | 916 | 17.17 | 1725 | 34.50 |

அட்டவணை-1

International Gift Fair -2013 தாய்லாந்துக்கு 19 போதனாசிரியர்கள் சென்று வந்தனர், அநுராதபுரம் -08 போதனாசிரியர்கள் ஒருவார பயிற்சி பெற்றனர் ) சென்று வந்த போதனாசிரியர்களால் பனங்கைப்பணிப் பொருட்களில் புதிய வடிவமைப்புக்கள் 61 உருவாக்கப்பட்டுள்ளன.

#### சந்தைப்படுத்தல்:

பனங்கைப்பணிப் பொருட்கள் யாவும் கற்பகம் விற்பனை நிலையம் ஊடாக சந்தைப்படுத்தப்படுகிறது. வடிவமைப்பு நிறுவனம் (Accademy of Design) ஊடாகவும், தனியார் ஊடாகவும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வெளிநாட்டு சந்தைவாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் யாவும் கொள்வனவுக் கட்டளைகள் பெற்று வழங்கப்படுவதால், விற்பனைத் தடங்கல் இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.




அட்டவணை-2

#### விளம்பரம்:

www.katpakachcholai.com எனும் இணையத்தளம் "பனையோலைக் கைவினைப் பொருட்கள்" என்ற கையேடு மற்றும் கண்காட்சிகள் என்பனவற்றின் வாயிலாக விளம்பரப்படுத்தப்படுகிறது

#### விரிவாக்கல் பகுதி - பனங்கைப்பணி சுயதொழில் முயற்சி

அட்டவணை-1 மற்றும் அட்டவணை-2 ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள தரவிலிருந்து மூன்று ஆண்டுகளில் பயிற்சி நடவடிக்கை ஊடான வளர்ச்சி தெளிவாகியுள்ளது. விரிவாக்கல்பகுதியூடாக பயிற்சி, உற்பத்தி, விற்பனை, விளம்பரம் எனும் பாதையில் நடைபயின்று மூன்று வருடங்களில் 4877 உற்பத்தியாளர்களை உருவாக்கியுள்ளது. இவர்களின் உற்பத்தி நடவடிக்கையினால் பனந்தொழில் வல்லுனர்கள், பனை உரிமையாளர், பாவனையாளர், சூழல் பாதுகாப்பு என்பன பயனடைந்துள்ளன. சபை தனது சேவையை விஸ்தரித்துள்ளது என்பது கண்கூடு.

#### வடிவமைப்பு நிலையம்

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களால் 2011ஆம் ஆண்டு மே ஐந்தாம் திகதி யாழ்ப்பாணத்தில் பனைசார் உற்பத்திகளுக்கான வடிவமைப்பு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பனை அபிவிருத்தி சபையின் தலைவர் திரு.பசுபதி சீவரத்தினம் அவர்களுடனான நேர்காணலின் தொடர்ச்சி**

**எதிர்காலத்தில் கொண்டுவரவுள்ள திட்டங்கள் தொடர்பாகக் கூறுங்கள்?**

மாதிரிப் பனம் தோட்டங்களை அமைத்தல், பனைசார் தொழிலை இயந்திர மயப்படுத்தல் மூலம் இலங்கையில் காணப்படும் பனை வளத்தை முழுமையாகப் பயன்படுத்தல். பனை வெல்லம், பனங்களி, பனம்பானம் என்பவற்றை "ரின்களில்" அடைத்து ஏற்றுமதி செய்தல், பனை வள ஆராய்ச்சிக்கூடாக புதிய உற்பத்திப் பொருட்களைக் கண்டுபிடித்தல், காரைநகர் பனைசார் பல்தொழில் தொகுப்பு நிலையத்தை இயங்க வைத்தல், பனைசார் கைத்தொழில் பேட்டையை உருவாக்கல், கைதடியில் "பனை எழில் நகர்" ஒன்றை உருவாக்கி அதில் விற்பனைக் காட்சியகம் ஒன்றை அமைத்தல், சுற்றுலாப் பயணிகளிற்கான பனை அருங் காட்சியகம் ஒன்றை அமைத்தல் என்பன எமது எதிர்கால திட்டமாக உள்ளது.

# "பனை அம்மை பனை அப்பர் பல காலம் காப்பர் எமை"



**சபையின் மேலதிக வேலைத்திட்டங்களுக்காக கிடைக்கும் நிதி உதவிகள் தொடர்பாக கூறுங்கள்?**

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டு நிதியை விட அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக பனைசார் கைத்தொழில் பயிற்சிக்கான உதவிகளைப் பெற்றுத்தரல், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிற் கூடாக அரசாங்கத்திடமிருந்தும் இந்திய அரசிடமிருந்தும் உதவிகளை பெற்றுத் தருவதோடு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க தொழிலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பனை அபிவிருத்திச் சபையின் ஊடாக அவர்களது தொழிலுக்குத் தேவையான உபகரணங்களை அன்பளிப்பு செய்தல் போன்றவையாகும்.

**பனையிலிருந்து பெறப்படும் கள் மற்றும் கருப்பணியினை அனைத்து சமூகத்தினரும் விரும்பி உண்ணும்போதும் அதனைப் பெற்றுக் கொடுக்கும் தொழிலாளர்கள் சமூகத்தில் தாழ்ந்த நிலையில் நோக்கப்படுகிறார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பனை சார்ந்த இத் தொழிலானது ஏனையவர்களால் செய்ய முடியாத ஒரு கடினமான தொழிலாகவும், ஒரு சமூகம் சார்ந்த தொழிலாகவும் இருப்பதால் இப் பிரச்சினையை சற்று விரிவாகவும், ஆழமாகவும் பார்க்க வேண்டியுள்ளது. தமிழினத்தின் விடுதலையை கோரி நின்ற தமிழ் காங்கிரஸ் கட்சி தமிழரசுக்கட்சி போன்ற தமிழ்கட்சிகள் மிக நீண்ட காலமாக தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி வருகின்றோம் எனக் கூறிவருகின்றபோதும் கள் உற்பத்தி தொழிலாளர்கள் முகம் கொடுத்து வந்த ஒடுக்குமுறைகள் பற்றி அவர்கள் எப்பவுமே சிந்தித்ததில்லை. அத் தொழில்சார் சமூகம் தமிழ் மேட்டுக் குடியினரால் அடக்கி ஒடுக்கப்பட்டு அடிமைகள் போலவே நடாத்தப்பட்டு வந்தார்கள். கள் இறக்கும் தொழிலாளர்கள் மிகச் சிறந்த உழைப்பாளர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதும் அவர்களது குடும்பங்கள் 1972ம் ஆண்டு வரை பெரும்பாலும் வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்ந்து வந்தார்கள். ஆனால் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் தேசிய விடுதலைக்காக போராடி இம் மக்கள் வாழ்ந்த சில கிராமங்களில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட சிங்கள இடதுசாரித் தலைவர்களே இந்த மக்களின் மோசமான வாழ்நிலை பற்றி சிந்தித்தார்கள். ஒடுக்கப்பட்ட இவர்களின் கடை நிலை வாழ்வு பற்றிச் சிந்தித்த சிங்கள தலைவர்கள் அரச அதிகாரத்திற்கு வந்த போதுதான் இந்த மக்களின் வாழ்வில் ஒளி பிறக்க ஆரம்பித்தது என்ற வரலாற்று உண்மையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆம்! 1972ம் ஆண்டு சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கத்தில் நிதி மந்திரியாக இருந்த கலாநிதி என்.எம்.பெரேரா அவர்கள் கள் உற்பத்தி தொழிலை கூட்டுறவு மயப்படுத்தினார். அதன் பின்புதான் இந்த மக்களின் பொருளாதார கலாசார வாழ்வில் ஓர் பெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டது என்ற வரலாற்று உண்மையை யாராலும் மறுக்க முடியாது. நீண்ட காலமாக இவர்களை அடக்கி ஆண்ட யாழ்ப்பாணத்து மேட்டுக்குடியினரால் இந்த மக்களின் முன்னேற்றத்தை ஜீரணிக்க முடியவில்லை இதனால் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் தொடர்ந்தும் பல்வேறு தடைகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். கள் விற்பனை நிலையங்களை நவீன மயப்படுத்தி, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக கட்டமைப்பை மேலும் பலப்படுத்தி முகாமைத்துவச் சீர்கேடுகளை சீரமைத்து, கள்ளில் உள்ள ஊட்டச் சத்துக்களையும், மருத்துவக் குணங்களையும் ஆராய்ச்சி நிறுவனத்தினூடே கண்டறிந்து பிரச்சாரப்படுத்தி, கள்ளை ஓர் ஏற்றுமதிப் பானமாக மாற்றுவதன் மூலம் கள் இறக்கும் தொழிலாளர்களின் தேசியப் பெறுமானத்தை உயர்த்தும் நடவடிக்கைகள் என்னால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனது இந்தச் செயற்பாட்டிற்கு ஊடகங்களினதும், ஆய்வாளர்களினதும், புத்திஜீவிகளினதும் மேலான ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன்.

**பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் செயற்பாடுகளுடன் பனை அபிவிருத்திச் சபை எத்தகைய தொடர்புகளை கொண்டிருக்கிறது?**

பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களிற்கான தொழில்நுட்ப ஆலோசனையை வழங்குவதுடன், உபகரண அன்பளிப்பு, சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல் எனப் பல்வேறு வகைப்பட்ட உதவிகளை செய்து வருவதுடன், அச்சங்கங்கள் சமூக ரீதியாக முகங்கொடுக்கும் பிரச்சினைகளிற்குத் தீர்வு காண்பதற்கான உதவிகளையும் செய்து வருகின்றோம்.

**வறிய மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு பனை அபிவிருத்திச் சபை எந்த வகையில் உதவுகிறது?**

இக்கேள்விக்கான எமது நடைமுறை உதவிகள் பற்றி ஏற்கனவே என்னால் கூறப்பட்ட போதிலும் மக்களின் வாழ்வாதார வசதிகள் உயரவேண்டுமெனில் தேசிய ரீதியிலான உள்நாட்டு உற்பத்திகள் வளர வேண்டும், குடிசைக் கைத்தொழில்கள் பெருக வேண்டும், இவை இரண்டும் உணர்வு பூர்வமாக நடைபெற வேண்டுமெனில் மக்கள் மத்தியிலே தேசப் பற்று வளர வேண்டும். ஆனால் எமது நாட்டில் நீண்ட காலமாக வளர்க்கப்பட்டு வந்த இனவாத அரசியலும், அதனால் உருவான எதிர்ப்பு அரசியலும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன, இனப்பிரச்சனை! இனப்பிரச்சனை! எனக் கூறி தேசிய வளங்களை அழிப்பதும தேசப்பற்றை இல்லாமல் செய்யும் அரசியல் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இனப் பிரச்சனை என்பது சாரம்சத்தில் ஓர் தேசியப் பிரச்சினை என்பதை நாம் உணரும் வரை, மக்களின் வாழ்வாதார வசதிகளை வேகமாக அபிவிருத்தி செய்வதென்பது மிக மிகக் கடினமான காரியமாகவே யதார்த்தத்தில் உள்ளது.

**சபையின் ஆளணி வளம் தொடர்பாக கூறுங்கள்?**

சபையின் மாவட்ட அலுவலகங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம், கொழும்பு, அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் அமைந்துள்ளதோடு, உற்பத்தி நிலையங்கள் யாழ் மாவட்டத்தில் யாழ்ப்பாணம், சிங்கைநகர், சரசாலை, நெடுந்தீவிலும் மன்னார் மாவட்டத்தில் கட்டுக்காரன் குடியிருப்பு, செல்வாரி, படப்படி, தரவன்கோட்டை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைத்தொடுவாயிலும் திருகோணமலை மாவட்டத்தில் வரோதயநகரிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் முகத்துவாரத்திலும் புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டியிலும் அமைந்துள்ளன. இவற்றை விட 54 பனங் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் இலங்கை முழுவதும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பனைவள அபிவிருத்தியில் ஒரு திருப்புமுனையாக நீண்டகாலமாக இயங்க முடியாமல் சேதமடைந்திருந்த பனைவள ஆராய்ச்சி நிறுவனம் கடந்த 20.07.2012 அன்று புனருத்தாரணம் செய்யப்பட்டு மீள இயங்க ஆரம்பித்துள்ளது. இவ் ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சி தொழிற்பாட்டிற்கான சகல உபகரணங்களும் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கற்பகம் விற்பனை நிலையங்கள் யாழ் மாவட்டத்தில் நெல்லியடி, நல்லூர், கண்டி வீதி - யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி- யாழ்ப்பாணம், பஸ் நிலையம் - யாழ்பாணம், கொழும்பு மாவட்டத்தில் பம்பலப்பிட்டியிலும், மன்னார் மாவட்டத்தில் பெரியகடையிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டு நகர், வெளிச்சவீட்டிலும், திருமலை மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும், அம்பாறை மாவட்டத்தில் கல்முனையிலும், புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டியிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமகராமையிலும் அமைந்துள்ளன.

சபையின் கற்பகச்சோலைகள் (மாதிரி பனந்தோட்டங்கள்) யாழ் மாவட்டத்தில் மாமுன்ன, சிங்கைநகர், நெடுந்தீவு, குடத்தனையிலும் வவுனியா மாவட்டத்தில் புளியங்குளத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஊற்றுப்புலம், கௌதாரிமுனை, முழங்காவில், அறிவியல்நகரிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனிக்குளத்திலும் மன்னாரில் நறுவிலிக்குளத்திலும் அம்பாந்தோட்டையில் வீரவிலவிலும் அமைந்துள்ளன.

மனிதவள மேம்பாடு தொடர்பில் காலத்துக்குக் காலம் பல்வேறுபட்ட பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படுவதோடு வெளிநாட்டு பயிற்சி நெறிகளுக்கும் பணியாளர்கள் அனுப்பிவைக்கப்படுகின்றனர். மனித வளத்தின் உச்சப் பயன்பாடு எமது சபையின் இலக்கினை நோக்கிய பயணத்துக்கு ஓர் ஊன்றுகோலாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேதும் கிடையாது என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டும். பனை சார்ந்த உற்பத்திப் பொருட்களிற்கான சந்தை வாய்ப்பும் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

ஒரு தேசத்தின் தற்சார்புப் பொருளாதாரம் மேம்படுத்தப்பட வேண்டுமெனில் அத்தேசத்தின் சூழலை பாதுகாக்க வேண்டியது மிக மிக அவசியமானதாகும். ஆனால் இன்றைய நிலையில், பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையானது எமது சூழலை மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாக்கி வருகின்றன. தற்போது பனை ஓலைப் பொருட்களின் பாவனை அதிகரிப்பால் மாசடைந்த சூழல் வளப்படுத்தப்படுகின்றது.

எனவே "பனை அப்பர் பனை அம்மை பல காலம் காப்பர எமை" என்ற அடிப்படையிலேயே எமது செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

பனையின் அடியிலிருந்து நுனிவரை 801 வகையான பொருட்களை உற்பத்தி செய்ய முடியுமென எமது முன்னோர்கள் தாலவிலாசம், பஞ்சம்போக்கி, பனைக் காவியம் என்ற நூல்களில் எழுதி வைத்துள்ளார்கள். இவற்றையெல்லாம் ஆராய்ந்து எமது உற்பத்தி நடவடிக்கையை மேற்கொள்வதுடன் பனை ஓலை, பனைநார், தும்பு போன்றவற்றைக் கொண்டு நவீன பொருட்களை தயாரிக்கும் கைப்பணிப் பயிற்சியையும், பனை சார் உணவு வகைகளை உற்பத்தி செய்வதற்கான பயிற்சிகளையும் வழங்கி வருவதன் மூலமும் எமது தற்சார்புப் பொருளாதாரத்தை ஊக்குவித்து வருகின்றோம்.

**பனை அபிவிருத்தி சபையின் செயற்பாடுகளில் காணப்படும் தற்போதைய வளர்ச்சிப் போக்கிற்கு நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை?**


1978ஆம் ஆண்டு நல்நோக்குடனும், சிறந்த நிர்வாகக் கட்டமைப்புடனும் திரு.கே.சி.நித்தியானந்தா தலைமையில் பனை அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டது. ஆனால் நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலை, சபையினால் சீராகச் செயற்பட முடியவில்லை. தற்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் அனுபவம் பனை வளத்தின் மீதும், பனை வளம் சார் மக்களின் மீதும் அவர் கொண்ட அபிமானம், சிறந்த திட்டமிடல், அதை நடைமுறைப்படுத்துவதற்கான வழி காட்டல் என்பன ஓர் இறுக்கமான நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தி அதன் தொழில் விரிவாக்கத் திறனை அதிகரிக்கச் செய்துள்ளது.

(கலந்துரையாடல் தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னினத்தவரே!



நெடிந்துயர்ந்து நிற்கும்நான்
கொடுந்துயர் தீர்ப்பேன் வாரீர்
படித்தவர் நாமென பதவி தேடி
பணிக்காக அலைகிறீர் நாளும்
உழைப்பென்றால் உத்தியோகம்
ஒன்றென சிறப்பாக கருதுகிறீர்

என்தலை நோக்கிப் பாருங்கள்
எத்தனை தொழில்கள் உண்டு
அத்தனையும் பணிக்கான மூலங்கள்
மிச்சமின்றி பயன்பெறும் வழிகண்டால்
மேதினியில் தொழிலதிபராவீர்கள்
மேன்மையுறு வாழ்வு தேடிவரும்



வடக்கின் பெருவளம் என்கிறீர்
கடிதத் தலைப்பிலும் எம் படம்
விதியே என எனை விட்டு விட்டு
வீரமாய் வரலாறு பேசுகிறீர்
பாதியில் வெட்டி அழிக்கிறீர்
பாதுகாப்பு ஏதுமின்றி வாழ்கிறோம்

உங்களுக்கு உதவும் எம்வாழ்வு
உயர்வது உமது இல்வாழ்வு
சிறப்பது எய்த சிந்தனை செய்
வந்தனை செய்கிறோம் வாழவை
பண்ணையாய் எம்மை பராமரி
பதினொரு மில்லியனும் பயன்தரும்

– கரவை மத்தி த.பவானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தவிச்ச வாய்க்கு தண்ணீர் கொடுங்கள்!

– மனோஷா–

2006ஆம் ஆண்டு மாவிலாற்று நீரை மறித்து ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட சிங்கள மக்களைப் பரிதவிக்கவிட்டதால் யுத்தம் மீண்டும் வெடித்தது. இது நான்காம் கட்ட ஈழப்போர் என அழைக்கப்பட்டது. இதன் முடிவு பல்லாயிரக்கணக்கான மக்களின் இரத்த ஆறும், உயிர் குடிப்புமாய் முடிந்தது. 2009 மே 18இல் ஆயுதப்போர் முடிந்துவிட்டது என்ற மன அமைதியுடன் ஒரு பகுதியும் மன அங்கலாய்ப்புடன் மறு பகுதியுமாய் மனிதர்கள் பிரிந்து விட்டார்கள்.

இன்றைய காலகட்டத்தில் மீண்டும் தண்ணீர் குறித்த சர்ச்சை எழுந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடு குளத்திலிருந்து யாழ் குடாநாட்டுக்கு தண்ணீர் தர முடியாது என்று போர்க்கொடி தூக்கியுள்ளார்கள் சில அரசியல்வாதிகள். இரணைமடு நீர் விநியோகத் திட்டம் 2007ஆம் ஆண்டு வகுக்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. இதன் பிரதான நோக்கம் யாழ் குடாநாட்டிற்கான குடிநீர் விநியோகம். தீவகம் காரைநகர் மற்றும் பூநகரி போன்ற பிரதேசங்களில் வாழும் மக்கள் குடிநீருக்காக பெரும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் கிணறுகளில் தண்ணீர் மாசடைந்துள்ளதாகவும் ஆய்வுகளிலிருந்து சுட்டிக் காட்டப்படுகின்றது. யாழ் குடாநாடு எதிர்காலத்தில் கடுமையான தண்ணீர் பிரச்சினையை எதிர்கொள்ள நேரிடும் எனவும் சொல்லப்படுகிறது. இதனடிப்படையிலேயே இரணைமடு நீர் விநியோகத் திட்டம் வரையப்பட்டுள்ளது. மத்திய மலை நாட்டிலுள்ள மொரஹாகந்த நீர்த் தேக்கத்திலிருந்து இரணைமடு குளத்திற்கு நீர் கொண்டுவரப்பட்டு அங்கிருந்து யாழ் குடாநாட்டிற்கு குழாய்கள் மூலம் நீரை விநியோகிப்பதே இத் திட்டம் என அரசாங்கம் தெரிவிக்கிறது.

1920 இல் 19 இலட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவில் இரணைமடுக்குளம் முதல் கட்டமாக முழுமையாக்கப்பட்டது. அப்போது இரணைமடுவின் கொள்ளளவு 44 ஆயிரம் ஏக்கர் அடி, ஆழம் 22 அடி. 1954ல் இரண்டாம் கட்டக் கொள்ளளவு அதிகரிப்பு நடைபெற்றது. அப்போது கொள்ளளவு 82 ஆயிரம் ஏக்கர் அடியாகும். இதன் மூலம் குளத்தின் நீர்மட்ட ஆழம் 30 அடியாக உயர்த்தப்பட்டது. மூன்றாம் கட்டமாக கொள்ளளவு அதிகரிப்பு 1975ல் நடைபெற்றது. 1977ல் முழுமையடைந்த அக்கொள்ளளவு அதிகரிப்பின்போது இரணைமடுவின் கொள்ளளவு 1 இலட்சத்து 6500 ஏக்கர் அடியாக அதிகமானது ஆழம் 34 அடியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977இல் முடிவடைந்த இந்தப் பணிக்குப் பின் இரணைமடு முழுப் புனரமைப்புக்கு இதுவரை உட்படுத்தப்படவில்லை. 1977ல் தான் இப்போதுள்ள வான் கதவுகள் கொண்ட தோற்றத்தை இரணைமடு பெற்றது. 227 சதுரமைல்கள் நீரேந்து பரப்புக் கொண்ட இரணைமடு, கனகராயன் ஆறு, கரமாரி ஆறு என இரு ஆறுகளின் மூலம் நீரைப் பெறுகின்றது. இரணைமடுக்குளம் 9 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. இதன் அணை 2 கிலோ மீற்றர் நீளமுடையது. இதன்மூலம் 20 ஆயிரத்து 882 ஏக்கர் நிலப்பரப்பு பயன் பெற்றுள்ளது. மொத்தம் 32.5 மைல்கள் நீள வாய்க்கால்கள் மூலம் இரணைமடு கிளிநொச்சியை வளப்படுத்துகின்றது. இரணைமடு மூலமே கிளிநொச்சியில் பெருமளவில் குடியேற்றங்கள் நடந்தன.

இரணைமடுக்குளம் புனரமைப்பு மற்றும் நீர் விநியோகத்திட்டம் தொடர்பான அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்ட ஆலோசகர் திரு.குரூஸ் பின்வரும் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இரணைமடுக்குளம் புனரமைக்கப்பட்டதன் பின்னர் நீரின் அளவு 13 ஆயிரத்து 529 ஏக்கர் அடியால் அதிகரிக்கும். இதில் குடிநீர் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் நீரின் அளவைத் தவிர 400 ஏக்கருக்கு நீரை மேலதிகமாக வழங்கமுடியும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, பளை பிரதேசத்துடன், யாழ்ப்பாண மாவட்டத்தையும் உள்ளடக்கி 90 ஆயிரம் குடும்பங்களுக்கு குடிநீர் இணைப்புக்களை வழங்க முடியும். இத் திட்டத்தின்படி, முதல் வருடத்தில் 10 ஆயிரம் இணைப்புக்களும், இரண்டாம் வருடத்தில் 8 ஆயிரம் இணைப்புக்களும், பின்னர் 5 ஆயிரம் இணைப்புக்களும் என சராசரி 20 வருடங்களாக அதனுடைய கால எல்லை அமையும் என்றும் அவர் சொன்னார்.

குளத்தினுடைய நீரின் அளவு 34 கன.அடியாக உயர்த்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில், குடிநீருக்காக பயன்படுத்தப்படும். நீரின் ஆவியாதல் போன்ற விரையமாகும் காரணங்கள் உள்ளடங்கலாக, 630 ஏக்கர் அடி நீரே, நடைமுறைப்படுத்தப்படவுள்ள குடிநீர் விநியோகத்திற்காக பயன்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குளத்தில் தற்போதுள்ள நீரின் கொள்ளளவு ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 500 ஏக்கர் அடியே ஆகும். ஆனால் குளத்தின் நீர் மட்டத்தை 36 அடியாக உயர்த்துகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 975 ஏக்கர் அடி மேலதிகமாக கிடைப்பதுடன் நீரின் அளவு 13 ஆயிரத்து 529 ஏக்கர் அடியாக அதிகரிக்கும். எனவே இதனடிப்படையில் 400 ஏக்கருக்கு நீரை மேலதிகமாக வழங்கமுடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். எனவே இத்திட்டத்தின் மூலம் கிளிநொச்சி மக்கள் நன்மைகளையே எட்டுவர் எனவும் திரு.குரூஸ் குறிப்பிட்டிருந்தார்.

12ஆம் நூற்றாண்டிலே இலங்கையில் ஆட்சி செய்த பராக்கிரமபாகு மன்னன், மாபெரும் பராக்கிரமபாகு சமுத்திரம் என்ற நீர்த்தேக்கத்தை அமைத்திருக்கிறான். "மழை நீரில் ஒரு துளி கூட மக்களுக்குப் பயன்படாமல் கடலுக்குள் போக அனுமதிக்கக் கூடாது" என்பது பராக்கிரமபாகு மன்னனின் உத்தரவு. உலகில் தற்போது ஆண்டுக்கு 170 அணைகள் என்ற வீதத்தில் அணைக்கட்டுகள் கட்டப்படுகின்றன.

உலகளாவிய ரீதியில் ஏறத்தாழ முப்பது நாடுகள் நீர் பற்றாக்குறையால் வாடுகின்றன. நீர்வளமுள்ள நாடுகளிலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதால் நீர் மாசடைதல், உவர்ப்பாதல் போன்ற பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகின்றன.

பூமியிலுள்ள நீரின் பெரும் பகுதி விவசாயத்திற்கே பயன்படுத்தப்படுகிறது. அடுத்த தாக தொழிற்சாலைகளிலும், அனல், அணுசக்தி உற்பத்தி நிலையங்களிலும் அதிகளவு நீர் பயன்படுத்தப்படுகிறது. மூன்றாமுலக நாடுகளில் பாதுகாப்பான குடிநீர் பயன்படுத்தப்படாமையால் தொற்று நோய்களால் இந்த மக்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். இங்கு ஏற்படும் எண்பது சதவீதமான நோய்கள் அசுத்தமான நீரினாலேயே ஏற்படுவதாக தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இன்றைய நிலையில் நீர் முகாமைத்துவம் தொடர்பில் இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகள் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அரசியலுக்காக நீரைப் பயன்படுத்துவதற்கு மக்கள் அனுமதிக்கக்கூடாது. விவசாயத்திலும், தொழிற்துறையிலும் நீரை எவ்வாறு சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பது பற்றி மக்களும் அரசும் சிந்திக்க வேண்டும். இயற்கை வளங்களை தான்தோன்றித்தனமாக அழித்தல் கூடாது. இதுவே எதிர்கால நீர் பற்றாக்குறைக்கான தீர்வாக அமைய முடியும்.

உணவுக்காகப் போரிட்ட உலகம்,
மண்ணுக்காகப் போரிட்ட உலகம்,
எண்ணெய்க்காகப் போரிடும் உலகம்;
இனி நீருக்காகப் போரிடுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலக்குறியம் என்பது மனித சமுதாயத்தின் ஆரம்பமான ஆதி பழங்குடிகளுக்கு உரிய கருத்துநிலையாகக் காணப்பட்டது என்கிறார் ஜார்ஜ் தாம்சன் என்ற அறிஞர்.

மனித சமுதாயத்தின் உருவாக்கத்தில் மையக்கூறாக இருந்தது சிறு நாடோடிக் கூட்டமாகும். இந்த மனிதர்கள் எளிய பொறிமுறையுடன் கருவிகளையும் நெருப்பையும் பயன்படுத்தினார்கள். இதன் மூலமே மனிதக் குரங்குகளிலிருந்து இவர்கள் வேறுபட்டார்கள்.



இந்த நாடோடிகள் நிரந்தரமாக ஒரு இடத்தில் தரித்து நிற்கத் தொடங்கினார்கள். உறவுகள் உறுதியாகின. இதன் வளர்ச்சியில் இந்தக் கூட்டம் இரு சமபாதிகளாகப் பிளவுண்டது. ஒரு பாதியிலுள்ள ஆண்கள் மறுபாதியிலுள்ள பெண்களை மணம் புரிந்தார்கள். பிறக்கும் குழந்தைகள் தாயின் பாதியைச் சேர்ந்தன. இரண்டு சமபாதிகளும் மீண்டும் பிளவுண்டு நான்கு சம



# குலக்குறியம்

பாதிகளாக உருப்பெற்றன. இது ஒரு பழங்குடிக் கட்டமைப்பாக தோற்றம் பெற்றது.

ஈட்டி உருவாக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் வேட்டையாடுவதில் வளர்ச்சியேற்பட்டபோதுதான் கடைசிப்பிரிவு ஏற்பட்டது. இது உழைப்பு அடிப்படையிலும், பால் அடிப்படையிலும் முதல் பிரிவு என்றும் அழைக்கப்பட்டது. அக் காலகட்டத்தில் பெண்கள் வேட்டையாடுவதிலிருந்து விலகி உணவு சேகரிப்பதில் மட்டும் ஈடுபட்டிருந்தார்கள். விலங்குகளை வேட்டையாடுவது ஒழுங்கமைக்கப்பட்டது. ஒவ்வொரு குலமும் ஒரு குறிப்பிட்ட விலங்கையோ அல்லது தாவரத்தையோ தன்னுடன் பிரதானமாகத் தொடர்புபடுத்திக் கொண்டது. அதுவே அக்குலத்தின் குலக்குறியாகியது.

உணவு தேடுதலில்தான் குலக்குறித் தொடர்புகளுக்கான அர்த்தமும் தேவையும் இருந்தது. என்றாலும் அவை நீங்கிய பிறகும் அத் தொடர்புகள் பல்வேறு வடிவங்களில் நீடித்து வந்தது. தமக்கென்று தனித்தனியான குலக்குறிகளைக் கொண்ட குலங்களாக பழங்குடி மக்கள் பிரிக்கப்பட்டதுபோல, பழங்குடி மக்களைச் சேர்ந்த ஒவ்வொருவனும் தன்னையும் பிறரையும் அந்தந்தக் குறிப்பிட்ட விலங்குடனோ அல்லது தாவரத்துடனோ அடையாளப்படுத்தியே தனக்கும் பிறருக்குமுள்ள உறவுகளை வரையறுத்தான். உதாரணமாக, கங்காருவை குலக்குறியமாகக் கொண்ட ஒரு அவுஸ்திரேலியக் பழங்குடி மனிதன் கங்காருவின் படத்தை தன்னைப் போலிருப்பதாகக் காண்கிறான். இவ்வாறு பொருட்களைத் தொகுத்துப் பார்க்கும் சிந்தனை முறைகளுக்கான கட்டமைப்பை குலக்குறி அடிப்படையில் அமைந்த குழுக்கள் வழங்கின. குலக்குறியம் என்னும் சமூக வகைப்பாடு பொருட்களைத் தொகுத்துப் பார்க்கும் சிந்தனை வகைப்பாடாக மாறியது.

இவ்வாறு விலங்கு உலகிலிருந்து மனித சமுதாயம் தோன்றிய தொடக்கக் காலத்திலேயே குலக்குறியம் என்னும் கருத்துநிலை உருவாகிவிட்டதை நாம் அறிகிறோம்.




# 119-999

எமது நாட்டின் நடைமுறையின்படி, ஏதாவது ஆபத்து அல்லது அசம்பாவிதங்கள் என்றால் உடனடியாக 119 தொலைபேசி எண்ணைச் சுழற்றிப் பொலிசாருக்கு அறிவிக்கிறோம்.

இந்த அவசர அழைப்பு முறைமை 75 ஆண்டுகளுக்கு முன்னமேயே பிரிட்டனில் அமுலுக்கு வந்துவிட்டது. பிரிட்டன் அறிமுகப்படுத்திய இந்த அவசர அழைப்பு இலக்கம் 999.

தொலைபேசி அழைப்பொன்று வரும்போது, உடனடியாகவே தொலைபேசி இயக்குனரின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே இந்த இலக்கம் அறிமுகப் படுத்தப்பட்டது.

உலகிலேயே முதன்முதலாக இவ்வாறான அவசர தொலைபேசி அழைப்பு முறையை அறிமுகப்படுத்திய நாடு பிரிட்டன்தான். 1937ஆம் ஆண்டு ஜுன் மாதம் முப்பதாம் திகதி முதன்முதலாக இந்த முறைமை அங்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

## வரட்டு இருமல் குணமாக பனங்கற்கண்டு

வரட்டு இருமலுக்கு ஒரு டம்ளர் பாலில் 10 மிளகுகளைப் போட்டு நன்கு காய்ச்சி பனங்கற்கண்டோடு பருகிவர ஒரு வாரத்தில் வரட்டு இருமல் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் பிரதிநிதிகளின் பாலியல் வக்கிரப் பேச்சுக்களால் நாடாளுமன்றம் நாற்றமெடுத்தது

**– அமலியா ஷைனி அருண்**

மகளிர் விவகார அமைச்சராக இருப்பவர் ஆண். திஸ்ஸ கரலியத்த என்பது இவரது பெயர். பெண்கள் தொடர்பாக அண்மைக் காலங்களில் இவர் தெரிவித்துவந்த அவதூறான கருத்துகள் மகளிர் அமைப்புகள் மற்றும் பெண்கள் தொடர்பான வெகுஜன அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கடும் கண்டனங்களுக்கு இலக்காகின. இதனையடுத்து இப்போது ஓரளவுக்கேனும் அவர் அடக்கி வாசிக்கிறார் போலத் தெரிகிறது. கடந்த டிசம்பர் மாதம் தேசிய தொலைக்காட்சியின் சிங்கள நிகழ்ச்சியொன்றில் கருத்துத் தெரிவித்த அவர், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் வேலை செய்யும் பெண்கள் ஒழுக்கமோ, கற்போ இல்லாதவர்களென்று பச்சையாகவே கூறினார். இதேபோன்று பாராளுமன்றத்திலும் பெண்கள் பற்றிப் பல அவதூறான கருத்துக்களை முன்வைத்து வந்திருக்கிறார்.

முன்னாள் அழகுராணியும் இன்னாள் எம்.பி.யுமான றோசி சேனநாயக்கா பாராளுமன்றத்தில் பல ஆண் எம்.பி.க்களின் கேலி கிண்டல், அவதூறான பேச்சுக்களுக்கு இலக்காகியிருக்கிறார். இந்தப் பாலியல் அவதூறுச் சேஷ்டைகளுக்குப் பாராளுமன்றத்தில் வைத்தே றோசி சேனநாயக்கா பல தடவைகள் பதிலடி கொடுத்திருக்கிறார். “இலங்கைப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அடிப்படை அறிவுகூட அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவுக்கு கிடையாது” என்று பாராளுமன்றத்தில் வைத்தே றோசி சாட்டையடி கொடுத்தார். “மகளிர் விவகார அமைச்சராகப் பெண்களே நியமிக்கப்பட வேண்டும்” என்றும் அவர் வலியுறுத்தினார். இது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சருடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு கேட்டபோது, செய்திகளை உற்பத்தி செய்ய வேண்டாமென்று ஏசியபடியே தொலைபேசியை அடித்துத் தனது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டார்.

இலங்கை மகளிர் தன்னார்வத் தொண்டர் அமைப்பின் ஸ்தாபக அமைப்பாளரான டாக்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேபால கோட்டகொட இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "மகளிர் சம்பந்தமான தீர்மானம் எடுக்கும் பதவி நிலையில் இருக்கும் ஆண் இவர். மிகவும் தவறான முன்னுதாரணம் மிக்கவராகத் திகழ்கிறார். அமைச்சரின் இந்தப் போக்குக் குறித்து நாட்டின் உயரிய மேல்மட்டம் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் எடுத்துக் கூறியபோதும் எந்தப் பலனும் ஏற்படவில்லை" என்று பொரிந்து தள்ளினார். "அமைச்சர் தனது வாயைக் கட்டுப்படுத்தத் தவறினால் சர்வதேச அரங்குக்குப் பிரச்சினையைக் கொண்டு செல்வோம்" என்றும் அவர் எச்சரித்தார்.

ஐ.தே.க.வின் பெண் எம்.பி.யான தலதா அத்துக்கோரளவும் பாராளுமன்றத்தில் வைத்தே ஆண் எம்.பி.க்களின் பாலியல் கேலிகளுக்கும் கிண்டல்களுக்கும் பல தடவை இலக்காகியுள்ளார். "மகளிர் விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சரொருவர் மிகவும் பொறுப்பு வாய்ந்தவராக இருக்க வேண்டும். ஆண் எம்.பி.க்களின் பாலியல் கிண்டல்கள் கட்சி வேறுபாடின்றிப் பரவலாகவே இடம்பெறுகின்றன" என்றும் அவர் சொன்னார்.

உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட சுமார் இருநூறுக்கு மேற்பட்ட துர்ப்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றால் பாருங்களேன். ஆணாதிக்க அதிகாரத்தின் ஓர் விளைவுதான் இது.

இதற்கிடையில் இந்தியத் தலைநகரான டில்லியில் 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸுக்குள் வைத்து ஐந்து காமுகர்களால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு, கொல்லப்பட்ட 23 வயதான மருத்துவ மாணவியின் விவகாரம் முழு இந்தியாவையுமே உசுப்பியது. இதனையடுத்து இந்திய அரசு வன்புணர்வுக் குற்றம் புரிவோரைத் தண்டிக்கும் சட்டத்தினைக் கடுமையாக்கியது. அத்துடன் இவ்வாறானவர்கள் தொடர்பாகக் கடும் நடவடிக்கைகள் எடுப்பதற்காக நீதித்துறை மற்றும் பொலிஸ் சீர்திருத்தங்களையும் கடுமையாக்கியது. அத்துடன் மரணித்த இந்த மாணவியின் ஞாபகார்த்தமாக இந்திய அரசுக்குச் சொந்தமான ஆயுதத் தொழிற்சாலையொன்று மென்ரக.32 கலிபர் கைத்துப்பாக்கியொன்றினைத் தயாரித்துச் சந்தைக்கு விட்டுள்ளது. சிறிய பர்ஸுக்குள் அல்லது கைப்பைக்குள் வைத்துப் பெண்கள் கொண்டு செல்ல முடியும். ஒரு கைத்துப்பாக்கியின் விலை 122,360 இந்திய ரூபாய்கள். கடந்த டிசம்பர் மாதம் இந்தத் துப்பாக்கி சந்தைக்கு விடப்பட்டது. இந்தத் துப்பாக்கியைக் கொள்வனவு செய்வதற்காகப் பதிவு செய்தவர்களில் எண்பது சதவீதமானவர்கள் பெண்களாவர். இந்தத் துப்பாக்கிக்கு இந்தி மொழியில் "நிர்பீக்" என்று பெயரிடப்பட்டுள்ளது. நிர்பீக் என்றால் பயமற்றவள் என்று அர்த்தம்.

**இலங்கைப் பாராளுமன்றத்தில் மிகவும் கேவலமான ஒரு நிகழ்வுப் போக்கு கடந்த இரண்டு வருடங்களாக இடம்பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதாவது பெண்கள் தொடர்பாக கேலிகளும், கிண்டல்களும் அவதூறான கருத்துக்களும் மிகத் தாராளமாக இடம்பெற்று வருகின்றன. சில அமைச்சர்கள் மட்டுமல்ல சில எம்.பீ. க்களும் கூட மிக மிகக் கேவலமாக வக்கிர உணர்வுடன் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.**

புதுடில்லியில் 2012ஆம் ஆண்டு ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸுக்குள் வைத்துக் காமுகர்களால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட மருத்துவ பீட மாணவியை "பயமற்றவள்" என்றே பெயர் சூட்டி அழைத்தார்கள். அதனாலேயே அந்தப் பெயரையே இந்தத் துப்பாக்கிக்குச் சூட்டியுள்ளார்கள். இவ்வாறு பெயர் சூட்டப்பட்டமை உண்மையில் அந்த மாணவிக்குச் செய்யப்பட்ட அவமானமாகும் என்று கண்டனம் தெரிவித்துள்ளார் மணிப்பூரைச் சேர்ந்த பினாலக்ஷ்மி நெப்ராம் என்ற பெண்மணி. இவர் "துப்பாக்கித் தாக்குதல்களிலிருந்து உயிர் தப்பிய மகளிர் அமைப்பு" என்ற அமைப்பின் ஸ்தாபகராவார். பெண்களை ஆயுதபாணிகளாக்குவது என்பது அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை ஏற்படுத்துவதற்குப் பொறுப்புவாய்ந்த வழிமுறையாக அமையாது என்கிறார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனந்தி, ராதிகா: தேசிய, சர்வதேச மட்டங்களில் புயல் கிளப்பும் யாழ்ப்பாணப் பெண்கள்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இரண்டு தமிழ்ப் பெண்களின் பெயர்கள் அண்மைக் காலமாகத் தேசிய மட்டத்திலும், புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் பரவலாக அடிபடுகின்றன. இருவருமே அரசியல்வாதிகள். ஒருவர் செல்வி ராதிகா சிற்சபேசன். மற்றவர் திருமதி அனந்தி சசிதரன். முன்னையவர் கனடியப் பாராளுமன்ற எம்.பி. மற்றையவர் வட மாகாண சபை உறுப்பினர். ராதிகாவுக்கு வயது 32. அனந்திக்கு வயது 42. ராதிகா கனடாவில் வாழும் புலம்பெயர்வாழ் இலங்கைத் தமிழர்களின் ஆதரவோடு கனடிய காமன்ஸ் சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர். அனந்தி முன்னாள் திருகோணமலை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் என்றஇயக்கப் பெயரால் அழைக்கப்பட்ட சின்னத்துரை சசிதரனின் மனைவி. எழிலன் வவுனியா மாவட்டத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகச் செயற்பட்டவர்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகச் செயற்பட்ட சுப்பையா பரமு தமிழ்ச்செல்வனின் நெருங்கிய சகாவாகச் செயற்பட்டதால் எழிலன் முதலில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் 2002ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்கவின் ஐ.தே.க. அரசாங்கத்துக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையடுத்து எழிலன் திருகோணமலையில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகச் செயற்பட்டார்.


எஸ்.அருளானந்தம்

அனந்தி 1971ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ் மாவட்டத்திலுள்ள சுழிபுரம் என்னும் இடத்தில் பிறந்தவர். ஆறு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் ஐந்தாவதாகப் பிறந்தவர் அனந்தி. இவரது மூத்த சகோதரியான வசந்தி, ஈழமக்கள் புரட்சிகர இயக்கத்தில் இணைந்து செயற்பட்டார். வசந்தி ஈ.பி.ஆர்.எல்.எப். இல் இணைந்து பணியாற்றிக் கொண்டிருந்த போது குரும்பசிட்டி என்னும் இடத்தில் வைத்துப் புலிகளால் கொல்லப்பட்டார். வசந்தி கொல்லப்பட்டுச் சில வருடங்களின் பின்னர் அனந்தியின் இளைய சகோதரன், அக்காவைக் கொன்ற புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார். இவருக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை மர்மமாகவே உள்ளது. மோதலொன்றின்போது இவர் கொல்லப்பட்டிருக்கலாமென்று கருதப்படுகிறது.

1995ஆம் ஆண்டு "ஒப்பரேசன் ரிவிரச" என்ற தாக்குதல் நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாணத்தைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து இராணுவம் கைப்பற்றிக் கொண்டது. அப்போது எழிலன் வன்னிக்குச் சென்றுவிட்டார். அனந்தி 1997ஆம் ஆண்டு முதல் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இலிகிதராகக் கடமையாற்றத் தொடங்கினார். 2003ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரியத் தொடங்கினார். 2013ஆம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற வட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக கடந்த வருடம் இவர் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். இவரைத் தேர்தலில் நிற்குமாறு வலியுறுத்தியவர் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை விடுதலைப் போராளியாக வர்ணித்து பகிரங்கமாகப் பேசிய சிறிதரன் எம்.பி. ஆவார். இதற்கு தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவும், முன்னாள் எம்.பி. சிவாஜிலிங்கமும் பின்புலமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்ந்தனர். திருமலை மாவட்ட எம்.பி.யும் தமிழரசுக் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் எம்.பி. இதற்கு ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்தார்.

ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள், தேர்தல் காலத்தில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் அனந்தி சசிதரனுக்குமிடையிலான கோஷ்டிகளாக வாதப் பிரதிவாதங்களும் இடம்பெறத் தொடங்கின. அனந்தி தேர்தலில் போட்டியிடுவதை விக்னேஸ்வரனும் விரும்பவில்லை. இருந்தும் திரு. விக்னேஸ்வரன் 132,355 வாக்குகளைப் பெற்று முதலாமிடத்தையும், அவருக்கு அடுத்தபடியாக 87,770 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.



திருமதி.அனந்தி சசிதரன்

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் பழைய மாணவியான அனந்தி, 1998ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆறாம் திகதி எழிலனைத் திருமணம் செய்து கொண்டார். இது காதல் திருமணம். இவர்களின் திருமணம் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளியவளை என்ற இடத்தில் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. அப்போது வன்னிப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இவர்களுக்கு மூன்று பெண் பிள்ளைகள். நல்விழி, எழில்விழி, கயல்விழி என்பது அவர்களின் பெயர்கள். மூத்த பிள்ளைக்கு இப்போது 15 வயது. மற்றப் பிள்ளைக்குப் 13 வயது. கடைசிப் பிள்ளைக்கு பத்து வயது.



செல்வி.ராதிகா சிற்சபேசன் கிளிநொச்சியில் நடத்திய சந்திப்பு

திருமலை மாவட்டத்தின் புலி இயக்கப் பொறுப்பாளராக எழிலன் செயற்பட்டபோது 2006ஆம் ஆண்டு ஆகஸ்டில் மாவிலாறு அணைக்கட்டினை மூடி அப்பாலுள்ள சிங்களப் பகுதிகளுக்கு ஆற்று நீர் செல்ல விடாதவாறு தடுத்தார். இதனால் சுமார் முப்பதாயிரம் குடும்பங்கள் நீர் கிடைக்காமல் பெருத்த கஷ்டங்களை எதிர்நோக்கின. இதுவே 2006ஆம் ஆண்டு நான்காவது ஈழப் போருக்கு அத்திவாரமிட்டது. முதலில் கிழக்கைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவித்த படையினர் 2009ஆம் ஆண்டு மே மாதம் வன்னிப் பகுதியின் முள்ளிவாய்க்காலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் மூலம் புலிகளைத் தோற்கடித்தனர். இறுதி யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பு ஆயுததாரிகளும் அடாவடித்தன நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் யுத்தத்தோடு சம்பந்தப்படாத அப்பாவி மக்களே பெரும் உயிரிழப்புகளையும், அவஸ்தைகளையும் சந்திக்க நேரிட்டது. அகதிகளாகத் தஞ்சமடைந்த அப்பாவி மக்களுக்குள் மறைந்து நின்று கொண்டு புலிகள் படையினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். அப்பாவி மக்களென்றும் பாராமல் படையினர் மக்கள்மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். இதுதான் உண்மை. இந்த உண்மைகளை மறைத்துக் கொண்டு இரு தரப்புகளுமே தங்களைப் புனிதர்களாகக் காட்டிக் கொள்ளும் பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டன.

2009 மே மாத இறுதி யுத்தத்தின்போது முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் பகுதியிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தன்னுடனும் பிள்ளைகளுடனும் வரும்போது தனது கணவர் எழிலனைப் படையினர் கைது செய்தனர் என்கிறார் அனந்தி. அன்றிலிருந்து எழிலன் காணாமல் போய்விட்டாரென்றும் சொல்கிறார் அவர். ஆனால் எழிலனைத் தாங்கள் கைது செய்யவில்லை என்று படைத் தரப்பு அடித்துக் கூறுகிறது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிண க்க ஆணைக்குழு முன் 2010ஆம் ஆண்டு ஆஜராகிச் சாட்சியமளித்த அனந்தி, படையினரே தனது கணவரைக் கைது செய்தனரெனக் கூறினார். மீண்டும் கிளிநொச்சியில் காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஜனவரி 20ஆம் திகதி ஆஜராகி அதனையே தெரிவித்தார். பி.பி.ஸி. தமிழ்ச்சேவைக்கு அளித்த பேட்டியிலும் இதனையே அனந்தி கூறினார்.

காணாமல் போனவர்கள் தொடர்பான நல்லிணக்க ஆணைக்குழு முன் தோன்றிச் சாட்சியமளித்ததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாகக் கூறி சுவிற்சலாந்து செல்ல அனந்தி கோரிய அரசியல் தஞ்சமும் சுவிஸ் அரசால் நிராகரிக்கப்பட்டது. இந்தப் பின்புலங்களுடன்தான் அனந்திக்கு அரசியல் முகம் வழங்கப்பட்டது. இது மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பாகவும் அமைந்துவிட்டது. எழிலன் சாதாரண ஒருவரல்லர். ஆயிரக் கணக்கான அப்பாவி முஸ்லிம், சிங்கள மக்களையும் தமக்கு எதிராகச் செயற்பட்ட தமிழ் மக்களையும் கொன்றொழித்த புலிகள் இயக்கத்தினரால் "மேஜர்" பதவியும், பட்டமும் வழங்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

செல்வி.ராதிகா சிற்சபேசன் 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி சுற்றுலா விசாவில் கனடாவிலிருந்து இலங்கை வந்தார். நேரடியாக யாழ்ப்பாணம் சென்ற அவர், யாழ் நகரிலுள்ள றில்கோ ஹோட்டலில் தங்கியிருந்தார். சுற்றுலா விசாவில் வருபவர்கள் அரசியல், வர்த்தகம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. இருந்தபோதும் ராதிகா யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்ததே அரசியல் நோக்கத்துடன்தான். அத்துடன் அவர் கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் தமிழ் அரசியல்வாதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். புலி இயக்கத் தலைவர் பிரபாகரனை மாவீரரென்று பகிரங்கமாகப் பேசிப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சிறிதரனையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

**அனந்தியும் சரி, ராதிகாவும் சரி புலிச்சார்புப் பூச்சாண்டி காட்டித் தேர்தலில் வெற்றிபெறும் சுயநல அரசியல் நோக்குடன்தான் செயற்பட்டார்கள். ஒருவர் அகதி அந்தஸ்துப் பெற முயன்று தோற்றுப் போனவர். மற்றவர் அகதியாகச் சென்று இலங்கைப் பிரச்சினையைப் பயன்படுத்தி அரசியல் செய்கிறார்.**

**அம்மணிகளே! அரச படையினராலும் தமிழ் மக்கள் வேட்டையாடப்பட்டார்கள் என்பதை நாம் உரத்துச் சொல்கிறோம். புலிகளால் கடத்தப்பட்ட, சிறுவர் போராளிகளாக இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆயிரக் கணக்கானவர்கள் எங்கேயென்று உங்களால் கூறமுடியுமா?**

ராதிகா 2011ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற கனடிய காமன்ஸ் சபைத் தேர்தலில் கனடாவில் தமிழ் மக்கள் பெருமளவு வாழும் ரொறன்ரோ ஸ்காபரோவிலுள்ள றோக் றிவர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். புதிய ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்டு நாற்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். கனடிய பாராளுமன்றத் தேர்தலில் தெரிவான முதலாவது இலங்கையர் மட்டுமல்ல, முதலாவது யாழ்ப்பாணத்தவரும் இவர்தான். யாழ்ப்பாணம் பருத்தித்துறை எனுமிடத்தில் இவர் பிறந்தார். 1983இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க. அரசின் அனுசரணையோடு இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன சங்காரத்தையடுத்து 1986இல் ராதிகாவின் குடும்பத்தினர் கனடாவுக்கு அகதிகளாகச் சென்றனர். அப்போது ராதிகாவுக்கு ஐந்து வயது. ஆனால் ராதிகாவின் குடும்பத்தவர் எவரும் 1983ஆம் ஆண்டு இனவன்செயலில் பாதிக்கப்படவில்லை.

கனடாவில் புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தபோதிலும் புலிச்சார்பு நடவடிக்கைகள் வெளிப்படையாகவும் தாராளமாகவும் இடம்பெறுகின்றன.

ரொறன்ரோவின் மேற்குப் பகுதியான மிஸிஸாகுவாவில் ராதிகாவின் குடும்பம் வாழ்ந்து வருகிறது. குடும்பத்தில் நான்கு பெண் பிள்ளைகள். ராதிகாவே கடைசிப் பெண் ஆவார். விபத்தில் காயமுற்றதால் தந்தையால் தொழில் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. ரொறன்ரோ பல் கலைக்கழகத்தில் இரண்டு வருடங்கள் கல்வி கற்றார். அங்கு தமிழ் மாணவர் சங்கத்தின் உப தலைவியாகப் பணி புரிந்தார். பின்னர் கார்ல்ரன் பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர்ந்த அவர் அங்கு வர்த்தகவியலில் பட்டம் பெற்றார். 2004ஆம் ஆண்டு முதல் புதிய ஜனநாயகக் கட்சியுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட இவர், அக் கட்சியின் தலைவரான ஜக் செய்ட்டனுக்குத் தமிழ் விவகாரங்கள் தொடர்பான ஆலோசகராகவும் செயற்படுகிறார். 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான அத்துமீறல்கள் இடம்பெற்றனவென்று இவர் வெளிப்படையாகவே பிரச்சாரம் செய்துள்ளார். இவர் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள புலிச்சார்பு இயக்கங்களுடன் இணைந்து செயற்பட்டார். அவற்றின் பின்புலத்துடன்தான் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றார்.

ராதிகாவின் தொகுதியில் மிகப் பெருமளவில் தமிழ் வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவதற்காக ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியும், தொழிற்கட்சியும், புதிய ஜனநாயகக் கட்சியும் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன. கனடிய கன்சர்வேட்டிவ் கட்சியின் எம்.பி.யான தீபக் ஒபரோய் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களைச் சந்தித்துப் பேசினார். கூட்டமைப்பு எம்.பி.ஈ.சரவணபவனின் உதயன் பத்திரிகைக் காரியாலயத்துக்கும் சென்று பேசினார். அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் யாழ்ப்பாண மக்களை அடக்கியாளுகிறது என்ற கருத்தையும் பகிரங்கமாகவே வெளியிட்டார். இலங்கை விவகாரங்களைப் பயன்படுத்திக் கனடியத் தமிழ் வாக்குகளைப் பெறுவதே கன்சர்வேட்டிவ் எம்.பி.யின் நோக்கமாகும். இதனை முறியடிப்பதற்காகவே தீபக் ஒபரோய் எம்.பி. யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பிய கையோடு ராதிகா எம்.பி.யும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து அரசியல்வாதிகளோடு அளவளாவினார். எனவே விரைவில் நடைபெறவிருக்கும் கனடிய தேர்தலை மனதில் வைத்தே ராதிகா யாழ்ப்பாணம் வந்து போனார் என்பதே அப்பட்டமான உண்மையாகும்.

அனந்தியும் சரி, ராதிகாவும் சரி புலிச்சார்புப் பூச்சாண்டி காட்டித் தேர்தலில் வெற்றிபெறும் சுயநல அரசியல் நோக்குடன்தான் செயற்பட்டார்கள். ஒருவர் அகதி அந்தஸ்துப் பெற முயன்று தோற்றுப் போனவர். மற்றவர் அகதியாகச் சென்று இலங்கைப் பிரச்சினையைப் பயன்படுத்தி அரசியல் செய்கிறார். அம்மணிகளே! அரச படையினராலும் தமிழ் மக்கள் வேட்டையாடப்பட்டார்கள் என்பதை நாம் உரத்துச் சொல்கிறோம். புலிகளால் கடத்தப்பட்ட, சிறுவர் போராளிகளாக இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆயிரக் கணக்கானவர்கள் எங்கே யென்று உங்களால் கூறமுடியுமா?

நாம் ஆயுததாரிகளின் அடாவடித்தனங்களுக்கு எதிரானவர்கள். அரச படையினர் என்றாலும் சரி, ஏனைய தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆயுத இயக்கங்கள் என்றாலும் சரி, அப்பாவி மக்கள் மீது அடாவடித்தனங்களைக் கட்டவிழ்த்து விடக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு ■

***மன்னார் மனிதப் புதைகுழியில் இதுவரை 53 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு***






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடுகள் ஜனநாயகத்தின் ஆதாரம் அதேநேரம் ஒற்றுமையே அமைதியைக் கொண்டுவரும்

முரண்பாடுகள் ஜனநாயகத்தின் ஆதாரம் எனினும் வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான ஒரு ஒன்றுபட்ட பாதையை அமைத்தவா் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச.

## – அமைச்சர் வாசு

எமது நாட்டில் இருக்கின்ற பாரதூரமான பிரச்சினை ஒற்றுமையின்மையே என அரச கரும மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். யாழ் பல்கலைக்கழகத்தில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான ஒற்றுமையைக் கட்டியெழுப்ப தெரிவு செய்யப்பட்டவர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாலேயே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். எனினும் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு ஒற்றுமையைக் காண்பது சுலபமான விடயமல்ல. அதற்காக இருதரப்பும் அதிகளவு பேசிக் கலந்துரையாடி விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு நாம் அனைவரும் சிங்களம், தமிழ் இரு மொழிகளையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனூடாகவே சாந்தியும் சமாதானமும் ஏற்படும் எனவும் அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

# 200 சிறிய இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டன

புதிய இராணுவ கட்டளைத் தளபதியின் கீழ் 200 சிறிய முகாம்கள் அகற்றப்பட்டுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். யாழ் மாவட்டத்தின் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் உதய பெரேரா ஜனவரி 10ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டார். ஜனவரி 10ஆம் திகதி முதல் ஜனவரி 29ஆம் திகதி வரை யாழ் மாவட்டத்திலுள்ள 200 சிறிய இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன.

மேலும் வலி வடக்கில் இன்னமும் முகாம்களில் வாழும் 24 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களையும் மீள் குடியமர்த்த வேண்டும். இது சம்பந்தமாக யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியுடன் பேசவுள்ளேன் என யாழ் மாவட்ட அரச அதிபர் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கிறார்.

## சவுதியில் அனுமதியின்றி தங்கியிருக்கும் இலங்கையரும் நாடுகடத்தப்படவுள்ளனர்

இலங்கைப் பிரஜைகள் உட்பட சவுதி அரேபியாவில் சட்ட விரோதமாகத் தங்கியிருக்கும் 2000ற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் நாடுகடத்தப்படவுள்ளனர்.

தொழில் அனுமதிப் பத்திரம் இல்லாதவர்கள் மற்றும் அதனை புதுப்பிக்காதவர்கள் இவ்வாறு நாடு கடத்தப்பட உள்ளனர். இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான், சூடான், எகிப்து மற்றும் யேமன் நாடுகளை சேர்ந்தவர்களே இவ்வாறு நாடுகடத்தப்பட வுள்ளனர்.

சவுதி அரேபியர்கள் 12 வீதமானோர் தொழில் வாய்ப்பின்றி உள்ளனர். 28 மில்லியன் சவுதி அரேபிய மக்கள் தொகையில் 9.1 மில்லியன் பேர் வெளிநாட்டு தொழிலாளர்கள் என ஐக்கிய நாடுகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் மாவட்டத்திற்கு 25000 வீடுகள் தேவை

யாழ் மாவட்டத்தில் மீள்குடியேறி யவர்கள் மற்றும் வீடற்றவர்கள் என்ற அடிப்படையில் மேலும் 25ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான உதவி தேவைப்படுவதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிக்கிறார். இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள வீடுகளுக்கு மேலதிகமாகவே இந்த 25000 வீடுகளும் வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## இலங்கையின் கல்வி நிலையில் தேசிய சமத்துவம் இல்லை

தெற்காசியாவில் ஒப்பீட்டளவில் இலங்கையில் கல்வி நிலை மேம்பட்டிருந்தாலும் தேசிய மட்டத்தில் சமத்துவ நிலை பேணப்படவில்லை என யுனெஸ்கோ அமைப்பு கூறுகிறது. ஏனைய பிரதேசங்களை விட மலையகம் கல்வியில் 50 வீதம் பின்தங்கியுள்ளதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மலையகப் பகுதிகளில் ஆரம்பக் கல்வியின் நிலை மிகவும் கவலையளிக்கும் வகையில் உள்ளது என்று பல தரப்பினரும் கூறுகின்றனர்.

மலையகப் பகுதிகளில் 800க்கும் மேலான பள்ளிக்கூடங்கள் இருந்தாலும், ஐந்து அல்லது ஆறு பள்ளிக்கூடங்களே தரம் வாய்ந்ததாக உள்ளன என்றும் பி.பி.சி. செய்தி தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் ஆர்ப்பாட்டம்: இந்திய வீட்டுத்திட்ட தெரிவில் மோசடி

இந்திய வீட்டுத் திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவில் மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டாத கிராம மக்கள் வவுனியாவில் கடந்த 29ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு "எமக்கு வீட்டுத் திட்டத்தை தா", "அமைச்சரே! அதிகாரிகள் உனது கைக்கூலிகளா?", "இந்திய அரசே! வீட்டுத்திட்டத்தை யாருக்கு வழங்கினாய்?", "அமைச்சர் பாராபட்சம் காட்டுகின்றார்", "ஜனாதிபதி செயலணியின் செயலாளரே நீர் அமைச்சருக்கு வக்காளத்து வாங்காதே" என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜர் ஒன்றையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வவுனியா அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

## பாவனைக்குதவாத 4000 தொன் பருப்பு கண்டுபிடிப்பு

பாவனைக்குதவாத சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான பருப்பு, வெல்லம்பிட்டிய பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபை கடந்த 28ஆம் திகதி வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது அங்குள்ள களஞ்சிய சாலையில் இதனைக் கண்டுபிடித்துள்ளது.

இக் களஞ்சியசாலையில் தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் பழுதடைந்த பருப்பிற்கு நிறங்கள் மற்றும் எண்ணெயைப் பயன்படுத்தி புதிய தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

வண்டுகள் தாக்கிய பருப்பை சுத்தப்படுத்துவதற்கான இயந்திரமும் அங்கு காணப்பட்டது. இந்தக் களஞ்சியசாலை பிரபல இறக்குமதி வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய மோசடி நடவடிக்கை தொடர்பில் ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

## தேசிய சுதந்திர தின நிகழ்வில் 30000 பொதுமக்கள்

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி கேகாலையில் கொண்டாடப்படவுள்ள தேசிய சுதந்திர தின நிகழ்வில் சுமார் 30,000 பொதுமக்கள் கலந்துகொள்வார்கள் என அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டப்ளியூ.ஜி.ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டுவரை கொழும்பில் மட்டுமே சுதந்திரதினம் கொண்டாடப்பட்டுவந்தது.

2013ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டபோது 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தனர் எனவும் அமைச்சர் சொன்னார்.

## ஜெனிவா செல்ல அனந்தி தகுதியானவர் - சி.வி.விக்னேஸ்வரன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பா.உ.க்களுடன் அனந்தியும் ஜெனீவா செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் "இந்த விடயம் தொடர்பில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவராகவுள்ள சகோதரி அனந்தி தகுதியானவர் என நினைக்கின்றேன்" என்றார்.

இதனை ஏற்றுக்கொண்ட சபை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்கு அனந்தி சசிதரனுக்கு அனுமதியளித்தது.

## இலங்கையில் போதைக்கு அடிமையானவர் 45000 பேர்

இலங்கையில் சுமார் 45 ஆயிரம் பேர் ஹெரோயின் போன்ற போதைப் பொருட்களை பயன்படுத்துவதாக ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் புள்ளிவிபரங்கள் தெரிவிப்பதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது. கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருளை பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் 16 வீதமானவர்கள் 15 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் அமைச்சு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல் போனவர்கள் தொடர்பில் கருணா, பிள்ளையானிடம் விசாரணை நடத்த வேண்டும்

காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழு, பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரிடமும் விசாரணை நடத்த வேண்டும் என்று நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம், காத்தான்குடி நகரசபையில் பிரேரணையொன்றை முன்வைத்துள்ளது.

- கடத்தப்பட்டோர் புதைக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் இடங்களை அடையாளங்கண்டு அவைகளைத் தோண்டுதல்.
- கடத்தப்பட்டு கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளவர்களின் எலும்புக்கூடுகளை அடையாளங்கண்டு அவர்களுக்கான மரணச் சடங்குகளை உரிய சமய ஆசாரங்களின் அடிப்படையில் மேற் கொள்ளல்.
- அவ்வாறு கடத்திக் கொல்லப்பட்டோர் மற்றும் காணாமற் போனோரின் குடும்பங்களுக்கு உரிய நஷ்ட ஈடுகளை வழங்குதல்.
- மேற்படி கடத்தல், கொள்ளைச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படுவோரினை அடையாளங் கண்டு விசாரணைக்கு உட்படுத்தவும், உரிய தண்டனைகளை வழங்கவும் கோருதல். ஆகிய கோரிக்கைகள் இப் பிரேரணையில் அடங்கியுள்ளது.

## ஆட்கடத்தல்காரர்கள் ஐவர் பிரிட்டனில் கைது

இலங்கையர்களை பிரான்ஸில் இருந்து பிரிட்டனுக்குள் கடத்தி வந்த ஐந்து பேர் கொண்ட குழு பிரிட்டனில் கைதாகியுள்ளது.

கென்ட் பொலிசார் மற்றும் தேசிய குற்றவியல்துறை, சுவிஸ், ஜேர்மனி பிரான்ஸ் ஆகியவற்றின் பொலிசார், யூரோபோல் ஆகியவற்றின் உதவியுடன் பிரிட்டனின் ஹோம் ஆபிஸ் தலைமையில் நடத்தப்பட்ட புலனாய்வில் இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சுதர்சன் ஜெயக்கொடி, கமலநேசன் கந்தையா, சுப்ரமணியம் விக்னராஜா, அமர்ஜித் முதர், ஜோண் அக்னஸ் சௌந்தரராஜன் உவைஸ் ஆகிய இந்த ஐவருக்கும் மெயிட்ஸ்டோன் கிரவுண் நீதிமன்றம் 23 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

ஒவ்வொருவரையும் பிரிட்டனுக்கு கடத்தி வர 4500 ஸ்டேர்லிங் பவுண்களை இவர்கள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

## பலசரக்கு கடைகளில் மருந்துப்பொருட்கள் விற்கத்தடை

காத்தான்குடி நகர சபை பிரிவிலுள்ள பலசரக்கு விற்பனை நிலையங்களில் பனடோல் மற்றும் பரசிட்டமோல் வில்லைகளைத் தவிர்ந்த வேறெந்த மருந்துப் பொருட்களும் விற்பனை செய்யக்கூடாது என காத்தான்குடி நகர சபையில் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## ராமேஸ்வரம் மீனவர்களின் போராட்டம் வாபஸ்

தமிழக - இலங்கை இரு நாட்டு மீனவர்கள் பேச்சுவார்த்தையில் இரு நாட்டு மீனவர்களும் எவ்வித நிபந்தனைமின்றி விடுவிப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து ராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்கள் கடந்த நான்கு நாட்களாக மேற்கொண்டிருந்த தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளனர்.

## புலிகள் அமைப்பின் செயற்பாட்டாளர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள்?

பிரான்ஸில் கைது செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் செயற்பாட்டாளர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜயந்தன் தர்மலிங்கம் என்பவரை இலங்கைக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவினை அந்நாட்டு நீதிமன்றத்திடம் கோரியுள்ள நிலையில், குறித்த சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று பிரான்ஸ் செய்திகள் தெரிவிக்கின்றன. பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை கொலை செய்ய முயற்சித்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இவர் மீது முன்வைக்கப்பட்டுள்ளன.

## வட மாகாண சபை தீர்மானத்திற்கு கண்டனம்

இலங்கை குறித்து சர்வதேச விசாரணை வேண்டுமென வட மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை அரசியலமைப்புக்கு முரணானது என எதிர்க்கட்சியுடன் சர்வமதத் தலைவர்களும் கண்டித்துள்ளனர்.

## புத்தளம்-முந்தல் பகுதியில் மூன்று துப்பாக்கிகள் மீட்பு

முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவதன்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள காட்டுப் பகுதி ஒன்றில் போடப்பட்டிருந்த மூன்று துப்பாக்கிகளைக் கண்டெடுத்துள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர். கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கிகளுள் ஒன்று வெளிநாட்டுத் தயாரிப்பிலான துப்பாக்கி எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தமிழக மீனவர்கள் இலங்கைக் கடல் பரப்பில் மீன்பிடிக்கக் கூடாது" -சென்னை தீர்மானம்

தமிழக மீனவர்கள் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை இலங்கையில் நடக்கும்வரை, இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிக்கக்கூடாது என்றும், சர்ச்சைக்குரிய ட்ராலர்கள் மற்றும் இழுவை வலை, இரட்டை மடிப்பு வலை போன்ற உபகரணங்களை பயன்படுத்தக்கூடாது என்றும் தீர்மானங்கள் இரு தரப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாக இலங்கை மீனவர்கள் தரப்பிலிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் செல்வதும் இலங்கைக் கடற்படையினால் தாங்கள் தாக்கப்படுவதாகவும் கூறி வந்துள்ளனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண, இரு நாட்டு மீனவர்கள் பிரதிநிதிகள் மற்றும் இரு தரப்பு அரசாங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கூட்டம் ஒன்று ஜனவரி 27ஆம் திகதி திங்கட்கிழமை சென்னையில் நடைபெற்றது. "சுமுகமாகவும், பயனுள்ளதாகவும், முன்னேற்றமளிக்கும் வகையிலும் நடைபெற்றது" என்று இரு தரப்பு மீனவர் தலைவர்கள் கூட்ட முடிவில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கூறினர்.

கூட்ட முடிவுகள் குறித்து இலங்கை மீன்வள அமைச்சின் ஆலோசக சபை உறுப்பினர் எஸ்.பி.அந்தோனிமுத்து தெரிவிக்கையில், கூட்டத்தில் நடந்து சுமார் ஆறு மணி நேரப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்றார்.

1. இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் சிறை பிடிக்கப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட அவர்களது படகுகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்.

2 மேலும் அவர் கூறுகையில், தமிழக மீனவர்கள் இலங்கைக்கு வந்து இது குறித்த பேச்சு வார்த்தைகளைத் தொடர உள்ள நிலையில், அது வரை,இலங்கை கடல் பரப்பில் மீன் பிடிப்பதையும், இலங்கை அரசால் தடை செய்யப்பட்ட ட்ராலர் போன்ற படகுகளையோ அல்லது சர்ச்சைக்குரிய இழுவை வலை போன்ற உபகரணங்களையோ பயன்படுத்துவதை நிறுத்துமாறும் இரு நாட்டு அரசுகளுக்கும் அறிவுறுத்தப்பட வேண்டும். தமிழக மீனவர்களும் இதற்கு ஒப்புக்கொண்டனர் என்றும் அவர் கூறினார்.

## வடக்கில் அத்துமீறிய இந்திய மீனவர்கள் கைது

சென்னையில் மீனவர்கள் கூடிப் பேசி தீர்மானம் மேற்கொண்ட இரண்டு நாட்களின் பின்னர் இலங்கைக் கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறியுள்ளனர். யாழ்.நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 38 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை பணிப்பாளர் என்.கணேஷமூர்த்தி தெரிவித்தார்.

38 மீனவர்களும் பின்னர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டனர். ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதியினால் விடுக்கப்பட்ட உத்தரவுக்கமைய இந்திய மீனவர்கள் அனைவரும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## பனங்கள்ளுக்குப் பதிலாக பதநீர் உற்பத்தி

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் இந்த ஆண்டு முதல் பனங்கள்ளிற்கு பதிலாக கருப்பனி என்று அழைக்கப்படும் பதநீரை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் க.அருணகிரிநாதன் தெரிவித்தார். கீரிமலை கூவில் பகுதியில் மீள்குடியேறிய மக்களின் வேலைவாய்ப்பினைக் கருத்திில்கொண்டு பதநீர் உற்பத்தி செய்து அதனை சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சங்கம் மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வரவு -செலவுத்திட்ட தோல்விக்கு காரணமானவர்கள் மீது விசாரணை - மாவை சேனாதிராஜா தெரிவிப்பு

2014 ஆம் ஆண்டின் வரவு - செலவுத்திட்டத்தை தோற்கடிக்க காரணமாக இருந்த அனைத்து உறுப்பினர்களும் விசாரணையின் பின் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று தமிழரசுக் கட்சியின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழ் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்கக் கூடாது. ஆதரித்து வாக்களிக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் புணிப்புரை வழங்கப்பட்டிருந்தது. அதனை மீறி வரவு -செலவுத்திட்டத்தை தோற்கடிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் எதிராக வாக்களித்து தோற்கடித்த உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என செய்தியாளர்களிடம் தமிழரசுக்கட்சியினரால் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆம் நூற்றாண்டில் சோசலிசம் தயாரிப்பு நிலையில் உள்ளது!



ஈக்குவடோர் துணை அதிபர் ஜோர்ஜ் க்ளாஜ் எஸ்பினல

21ஆம் நூற்றாண்டில் சோஷலிசம் சாத்தியமா? என்ற கேள்விக்கு ஈக்குவடோர் துணை அதிபர் ஜோர்ஜ் டேவிட் க்ளாஜ் எஸ்பினல், சந்தேகமே வேண்டாம், 21-ம் நூற்றாண்டின் சோஷலிசம் தயாரிப்பு நிலையில் இருக்கிறது எனப் பதிலளித்திருக்கிறார். ஈக்குவடோர் துணை அதிபர் இந்தியாவில் வைத்து புரொன்ட்லைன் சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தனித்த வழிமுறை என்று ஏதும் கிடையாது. எங்கள் நாட்டு மக்கள் அவர்களுடைய தேவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கும் சூழலில் வாழ்வதையே நாங்கள் விரும்புகிறோம். இந்த நோக்கம் ஜனநாயகத்தின் அடிப்படையிலே செயல்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இதுதான் மிக முக்கியமான அளவுகோல். மறுவிநியோகக் கொள்கைகளை நாங்கள் அனுசரித்துவரும் அதே நேரத்தில், தனியார் சொத்துரிமைக்கும் தனியார் தொழில் முயற்சிகளுக்கும் நாங்கள் உரிய மரியாதை கொடுத்து வருகிறோம்.

மருத்துவப் பராமரிப்பையும் கல்வியையும் பெறும் வழிமுறைகளை எளிதாக்குவதுதான் எங்கள் இலக்கு. சந்தை என்பது சமூகத்தின் நலனுக்காகத்தான் இருக்க வேண்டுமே ஒழிய, சந்தையின் நலனுக்காக சமூகம் என்ற நிலை இருக்கக் கூடாது. மூலதனம் என்பது மனிதர்களைவிட உயர்ந்ததல்ல என்பதுதான் முக்கியமான விஷயம். புரட்சி, வளர்ச்சி ஆகிய நிரந்தரக் கோட்பாடுகளுடன் நாம் 21ஆம் நூற்றாண்டில் நுழைந்திருக்கிறோம் எனவும் ஈக்குவடோர் துணை அதிபர் குறிப்பிட்டார்.

விக்கிலீக்ஸ் ஜூலியன் அசாஞ்சேக்கு லண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சமளித்தது. அமேசன் காடுகளை மிக மோசமாக மாசு படுத்தியதற்காக அமெரிக்க எண்ணெய்க் குழுமத்தின் மீது ஈக்குவடோர் நீதிமன்றம் பல நூறு கோடி அபராதத்தை விதித்துள்ளது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## ஈரான் மீது கூடுதல் பொருளாதாரத் தடை விதித்தால் தடுப்பேன்:



அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா

ஈரான் மீது கூடுதல் பொருளாதாரத் தடை விதிக்க அமெரிக்க நாடாளுமன்றம் தீர்மானம் கொண்டு வந்தால், வீட்டோ அதிகாரத்தின் மூலம் அதனைத் தடுப்பேன் என்று அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில்:

ஆசிய-பசிபிக் பிராந்தியப் பகுதிகளின் மீது அமெரிக்காவின் கவனம் தொடர்ந்து இருக்கும். அந்தப் பிராந்தியத்தில் எங்களின் நட்பு நாடுகளுக்கு நாங்கள் துணையாக இருப்போம். அதன் மூலம் கூடுதல் பாதுகாப்பை உறுதிசெய்வோம்.

பனிப்போர் காலத்திய அணு ஆயுதங்களின் இருப்பை குறைக்கவும், அவை தவறானவர்களின் கைகளுக்கு சென்று விடாமல் தடுப்பதற்காகவும் 50க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இணைந்து செயலாற்றி வருகிறோம்.

ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதார தடை மட்டுமின்றி அமெரிக்கா நடத்தி வந்த பேச்சுவார்த்தைதான், அந்த நாட்டுடன் முதன்முறையாக அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்த உதவியது. ஒருவேளை அந்தப் பேச்சுவார்த்தையில் இருந்து ஈரான் விலக நேரிட்டு, அந்த நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடை விதிப்பதற்கான மசோதாவை அமெரிக்க நாடாளுமன்றம் எனக்கு அனுப்பினால், "வீட்டோ" அதிகாரத்தைப் பயன்படுத்தி அதை தடுப்பேன். பேச்சவார்த்தைகள் வெற்றியடைவதற்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீஸ் கர்பாதவ் எழுதிய ரஷ்ய சிறுகதையின் தமிழாக்கம். 1990களில் சோவியத்யூனியனில் வெளிவந்தது. ரஷ்யப் பெயர்கள் உங்கள் வாய்களில் நுழையாவிட்டாலும், பரபரப்பும், உறுதியும், உள்ளார்ந்த நேசமும் இழையோடும் இக்கதையை வாசித்து இதயத்தை இதமாக்குவீர் என்றே நம்புகிறோம்.

இதழ் 01 இன் தொடர்ச்சி

# வெள்ளரி நிலத்தில் பிள்ளைப் பேறு...



மருத்துவர் வியப்படைந்து, "பொறுங்கள், பொறுங்கள், ஐயா! உதவ வேண்டும் என்கிறீர்கள். ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நோயாளியை இங்கே அழைத்து வாருங்கள். தாராளமாக. எங்கேயோ, ஊம்! வான வெளியில் நிகழும் பிரசவத்தில் நான் எப்படி மருத்துவம் பார்க்க முடியும்?" என்றார்.

"இருந்தாலும் நாம் உதவத்தான் வேண்டும்" என மீண்டும் வற்புறுத்தினான் கட்சிச் செயலாளன்.

"ஆக, அற்புதந்தான் போங்கள்!" என்று டாக்டர் கைகளை உயரே ஆட்டியவாறு கெக்கலித்தார். "ஆயிரம் கிலோமீட்டர் நீளமுள்ள கைகள் எனக்குக் கொடுங்கள் - கர்ப்பிணிவரை எட்டும்படி. அதோடு தொலைநோக்கி விழிகளும் தாருங்கள், ஆயிரம் கிலோமீட்டருக்கு அப்பால் உள்ளதைப் பார்க்க வசதியாக. அப்போது நான் சேவைக்குத் தயாராயிருக்கிறேன், ஆயத்தமாயிருக்கிறேன்."

"ரொம்ப சரி. அம்மாதிரிக் கரங்களும் கண்களும் கூடத் தங்களுக்கு அளிக்கிறோம், டாக்டர். அப்போது..."

"நீங்கள் சொல்வது விளங்க வில்லையே! எம்மாதிரிக் கைகள்? எவ்விதக் கண்கள்?"

"வானொலி. கர்ப்பிணியின் நிலைமையையும், மருத்துவர்கள் சொல்வது போலக் கருப்பையில் குழந்தையின் கிடக்கையையும் பற்றி அங்கிருந்து தகவல் தெரிவிப்பார்கள். என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் இங்கிருந்து சொல்லி நடத்தி வையுங்கள்."

ஸெர்கேய் மாத்வேயிச் எழுந்தார், மேலங்கியை அணிந்து கொண்டார், உறுதியான தோரணையில் வாயிலை நோக்கி அடி எடுத்து வைத்தார்.

"கர்ப்பிணியைப் பார்க்கப் போகலாம் வாருங்கள்" என்றார் திடீரென நின்று, "ஆனால், இதற்கு மேலங்கி எதற்காக? கிடக்கிறது, எல்லாம் ஒன்றுதான். உலகத்தில் எத்தனையோ விந்தைகள் நிகழ்கின்றன. இம்மாதிரி! ம்ம்.. அஞ்சல் மூலம் பிரசவம் பார்க்கும் வாய்ப்பு இப்போதுதான் முதல் தடவையாகக் கிடைத்திருக்கிறது" அதாவது வானொலி மூலம் பிரசவ மருத்துவம். என் சக மருத்துவர்கள் இதைக் கேட்டு எவ்வளவு வியப்பு அடைவார்கள் என்பதைக் கற்பனை செய்து கொள்கிறேன்! போகட்டும், எல்லாம் ஒன்றுதான். வாருங்கள், போகலாம்" என்றார்.

வெள்ளரி நிலத்துடன் வானொலித் தொடர்பு கிடைத்தது. "வெள்ளரி நிலத்துடன் வானொலித் தொடர்பு வெகு நேரம் நீடிக்கவிருப்பதால், பிரசவம் ஆகும் வரை மற்ற எல்லா நிலையத் தொடர்புகளும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்றன" என வானொலி இயக்குநர் அறிவித்தான்.

"நல்லது, ஆரம்பிக்கலாம்" என்று மேலங்கி பைக்குள் கைகளை நுழைத்துக்கொண்டு கூறத் தொடங்கியவர், மேலே என்ன சொல்வதென்று தயங்கினார். "இன்றைக்கு உடம்பு எப்படியிருக்கிறது உங்களுக்கு?" என்று வழக்கம் காரணமாகக் கேட்க வாயெடுத்தவர், தனக்கு எதிரே நோயாளி இல்லை என்பதை நினைவுகூர்ந்து அடக்கிக் கொண்டார். எதிரே இருந்தது வெறுமை. ஆகாயம். ஒரு விதத்தில், வானவெளி.

அவரது சங்கடமான சூழ்நிலை தெளிவாகப் புலப்பட்டது. தான் வேலை செய்து பழகிய சூழ்நிலை, தனக்கு இன்றியமையாத நிதானத்தை ஏற்படுத்த இயலாததை உணர்ந்தார். கர்ப்பிணியைக் காண்பது, அவளது முனகல்களையும் முறையீடுகளையும் கேட்பது, அவளுடைய வலியைப்பற்றி அனுதாபம் தெரிவிப்பது, பேசினில் இரத்தத்தைப் பார்ப்பது, கருவை, அந்தச் சின்னஞ்சிறு, வழவழப்பான, நிர்க்கதியான பிஞ்சு மேனியைத் தம் கைகளால் தொட்டு உணர்வது அவருக்கு அவசியமாயிருந்தது.

இப்போதோ, இவற்றில் எதுவுமே இல்லை. குண்டுமாரி பொழிகையில் கலங்காத படைவீரன், மறைகுழியின் பயங்கர மௌனத்தில் நடுநடுங்குவது போலவும், எந்திர இரைச்சலில் அமைதியாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கும் அரைவை மில்காரன், சந்தடி அடங்கியதுமே திடுக்கிட்டு விழித்துக் கொள்வது போலவும் தமது நிலைமை இருப்பதை உணர்ந்தார்.

இங்கே, நோயாளி கிடையாது, முனகல்கள் கிடையாது, வேதனை கிடையாது. வேதனை கிடையாதா? ஆனால் அவள் எங்கேயோ வானவெளியில் வேதனையை உணர்ந்து, உதவியை எதிர்நோக்கியிருந்தாள். மருத்துவர் என்ன செய்யப் போகிறார் என்பதை அறிய நாற்புறமும் மற்ற எல்லோரும் ஆவலாகக் காத்திருந்தார்கள்.

வானொலி இயக்குநரின் பக்கம் குனிந்தார். "பாரு, குழந்தை எந்த வாகில் கிடக்கிறது என்று மருத்துவரிடம் கேளேன்" என்றார்.

தமது சொற்கள் சிதறும் பட்டாணிக் கடலைகள் போலப் புள்ளிகளும் கோடுகளுமாகத் தெறித்து வானில் மிதந்து செல்வதை ஆவலுடன் நோக்கினார். சில நிமிடங்களில் பதில் வந்தது.

அதைப் படித்துவிட்டு நெற்றியைச் சுருக்கிக்கொண்டார். இவ்வாறு தொடங்கியது இந்த அசாதாரணமான "அஞ்சல் மருத்துவம்."

"ஹும். குழந்தை குறுக்காகக் கிடக்கிறதாக்கும். ஊம். கஷ்டமான பிரசவம்தான், ஆமாம்! என்று தமது எண்ணங்களை வாய்விட்டுச் சொல்லி விட்டு வானொலி இயக்குநரைப் பார்த்து, "இந்தா, என் துணை மருத்துவரிடம் கேள், பிராக்ஸ்டன்-ஹிக்ஸ் முறைப்படி குழந்தையைத் திருப்புவது அவருக்குத் தெரியுமா, அல்லது குறைந்த பட்சம் அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாரா என்று" எனக் கூறினார்.

"ஆனால் அவருக்கு எங்கே தெரிந்திருக்கப் போகிறது? இளைஞர், போதாக்குறைக்கு மருத்துவச் சிகிச்சையாளர் வேறு" என்று நினைத்துக் கொண்டார். எல்லா அறுவை மருத்துவர்களையும் போலவே மருத்துவச் சிகிச்சையாளர்களிடம் அவருக்கு அவநம்பிக்கை.

ஸெர்கேய் மாத்வேயிச் எதிர்பார்த்ததே போன்ற பதில் வந்தது: "கேள்விப்பட்டிருக்கிறேன், இருந்தாலும் என்ன செய்ய வேண்டும் என்று தயங்காமல் எனக்குச் சொல்லுங்கள்."

"ஸ்பிரிட்டாலும் அயோடினாலும் கைகளைக் கழுவிக்கொள்ளுங்கள். விரல்களில் எல்லாம் அயோடின் பூசிக் கொள்ளுங்கள். கைகளைப் பத்து நிமிடம் தொடர்ந்தாற் போலக் கழுவிக் கொண்டிருங்கள்" என்றார் டாக்டர். ஏதோ புண்ணியமான தொண்டில் துணை செய்வது போன்ற பாவனையுடன் வானொலி இயக்குநர் அவரது சொற்களை எல்லாம், முனகல்கள் உட்பட, அஞ்சல் செய்தான்.

கைகளை முறைப்படி கழுவிக் கொண்டாகிவிட்டது என்று வெள்ளரி நில மருத்துவர் பணிவுடன் அறிக்கை செய்தார்.

"சரி" என்று திருப்தியுடன் தலை அசைத்தார் ஸெர்கேய் மாத்வேயிச். "இப்போது, கர்ப்பிணிக்கு நோயணு நீக்கம் செய்வது எப்படி என்று சொல்கிறேன்." இவ்வாறு கூறி, விவரமான குறிப்புக்களைக் காகிதத்தில் எழுதி வானொலி இயக்குநரிடம் கொடுத்தார். தமது மூளைக்குள் ஒரு நிமிடத்துக்கு முன்வரை மறைந்திருந்த எண்ணங்கள் ஆயிரம் கிலோமீட்டருக்கு அப்பால் மாய வித்தை போல அனுப்பப்படுவதை ஆவலும் வியப்பும் ததும்ப மீண்டும் கவனித்தார் ஸெர்கேய் மாத்வேயிச். வானொலி இயக்குநர் மீது அவர் உள்ளத்தில் முதன் முதலாக மரியாதை பிறந்தது.

சந்தர்ப்பத்தின் முக்கியத்துவத்தால் கிளர்ச்சியுற்ற இயக்குநர் தன் முயற்சி காரணமாக இறுக்கமடைந்து முகமெல்லாம் சிவந்து போனான். தவறு நேர்ந்து விடுமோ என்ற அச்சத்தால் அவன் ஒவ்வோர் எழுத்தையும் அழுத்தி அடித்தான். பதிலைக் குறித்துக் கொள்ளும் போதும் இயல்புக்கு ஏற்பக் கிறுக்கித் தள்ளாமல், சிந்தனையுடன் நிறுத்தி எழுதினான்.

"மெல்லச் சொல்லு. ஓர் எழுத்து தப்பானாலும் குழந்தையும் தாயும் ஆபத்துக்கு உள்ளாகிவிடுவார்கள்" என்று வெள்ளரி நிலத்து வானொலி இயக்குநரை எச்சரித்தான்.

"ஆயிற்றா? இப்போது உள் சோதனை தொடங்குங்கள். இடது கையை நுழையுங்கள்.." என்று சொல்லிக் கொண்டு போனார் டாக்டர்.

உறுதியான இறுதிக் கணம் நெருங்கிவிட்டது.

"கருப்பையின் வாய் போதிய அளவு திறந்திருக்கவில்லை என்றால்... மருத்துவர் கவலையுடன் சிந்தித்தார். "நான் மட்டும் அருகே இருக்க முடிந்தால்! கண்ணால் பாராத ஒன்றுக்கு நான் பொறுப்பு ஏற்க முடியாது அல்லவா?"

பதிலுக்காகக் காத்திருக்கையில் அவர் ஒருபோது மில்லாதவாறு பதற்றமடைந்தார். நிதானத்துக்கு வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்னல் அருகே சென்று தெருவில் பார்வையைச் செலுத்தினார். தெருவா? அங்கே ஏது தெரு? சன்னலுக்குக் கீழே வெண்பனி குவிந்திருந்தது. அதற்கு அப்பால் களஞ்சியம், விரிகுடா. இன்னும் தொலைவில் கண்ணுக்கு எட்டிய வரையில் ஒரே வெண்பனிமயம். கிட்டங்கிகளின் முகடுகள் மேலும், விரிகுடா மீதும், தூந்திர வெளியிலும் எங்கும் வெண்பனி. பசுமை படிந்த வெண்பனியும் நிலவும்.

"நெடுந் தொலைவு வந்திருக்கிறாய், அல்லவா, ஸெர்கேய் மாத்வேயிச்?" எனத் திடீரென்று எண்ணும் போதே வியப்பில் மூழ்கினார். தாம் இவ்வளவு தூரம் வந்திருப்பது பற்றிய நினைவு அவரை மலைக்க வைத்தது. ஏதோ இந்த எண்ணம் முதன் முதல் இப்போதுதான் உதித்தது போலவும், தாம் இங்கே கழித்திருப்பது இரண்டு ஆண்டுகள் அல்ல, முதல் நாள்தான் போலவும் பிரமித்தார்.

"ஸெர்கேய் மாத்வேயிச்!" என்று யாரோ தணிந்த குரலில் அழைத்தார்கள்.

சடக்கெனத் திரும்பியவர் இரண்டு மாதரைக் கண்டார். ஒருத்தி வானொலி இயக்குநரின் மனைவி, மற்றவள் புவிப்பௌதிகவியலரின் வீட்டுக்காரி.

"டாக்டர் ஐயா, என்ன சேதி?" என்று, அவர்களில் அதிகத் துணிச்சல் உள்ளவளான வானொலி இயக்குநரின் மனைவி பதற்றத்துடன் கேட்டாள்.

மருத்துவருக்கு கோபம் வந்துவிட்டது. "என்ன சேதியாவது கீதியாவது? உங்கள் வீட்டுக்காரரிடம் கேளுங்கள். அதோ வானொலிப் பெட்டியருகே ஏதோ மாயம் பண்ணிக் கொண்டிருக்கிறார். என்னைவிட அதிகமாக அவருக்குத்தான் தெரியும். நானோ எதையும் கண்ணால் பார்க்கவே இல்லை... எதையுமே பார்க்கவில்லை.. வெண்பனியைத் தவிர" என்றார்.

"நாங்கள் என்ன சொல்ல வந்தோம் என்றால்.. என்று சங்கோசத்துடன் இழுத்தாள் புவிப்பௌதிகயியலரின் மனைவி. "விஷயம் என்னவென்றால் எனக்கு ஒரு தோழி இருந்தாள். அவளும் இதே மாதிரித்தான் குழந்தை பெற்றாள், நிலைமையும் இது போலத்தான் இருந்தது. அந்தப் பிரசவத்தின் விபரம் எல்லாம் எனக்குத் தெரியும்" சொல்லட்டுமா? ஒருவேளை உங்களுக்கு உதவியாயிருக்கும்!..

மருத்துவர் முகத்தைச் சுளித்தார்.

"ஏனம்மா, உங்களுக்கு என்ன வந்தது? பிரசவிப்பவள் உங்கள் தோழி அல்லவே! நீங்கள் எதற்காக இப்படி?" என்றார்.

"அதற்காக இப்படியா? ஏன் இந்த மாதிரிப் பேசுகிறீர்கள்?" என்று அப்பெண் வியப்புடன் சொன்னாள்.

"இதற்குள் வானொலி இயக்குநர் வெள்ளரி நிலத்திலிருந்து வந்த பதிலைக் குறித்துக் கொண்டு வந்து கொடுத்தான். செய்தி நல்லதா, கெட்டதா என்பது அவனுக்குத் தெரியாது. மருத்துவச் சொற்கள் அவனுக்கு விளங்கவில்லை. எனினும் பதில் கெட்டது எனப் புரிந்து கொண்டவன் போல அதற்குள்ளாகவே சஞ்சலப்படலானான்.

மருத்துவர் படித்துப் பார்த்துவிட்டு முறுவலித்தார். "ஓகோ, அப்படியா? கருப்பை வாய் இரண்டரை விரற்கிடை திறந்திருக்கிறதா, பரவாயில்லை, அதற்கென்ன? பிராக்ஸ்டன்-ஹிக்ஸ் முறைப்படி குழந்தையைத் திருப்பிவிடுவோம்" என்றார்.

வானொலிப் பெட்டிக்கு அருகே வந்தார். யாரோ


1940களில் பயன்படுத்தப்பட்ட வானொலி செய்திப் பரிமாற்ற இயந்திரம்

ஒருவன் அவர் உட்கார்வதற்காக நாற்காலியை நகர்த்தினான். உறுதியான கணம் வந்துவிட்டது என்று எல்லோரும் எப்படியோ உடன் அறிந்து கொண்டார்கள். இயக்குநரின் முகம் வெளிறியது.

நிறைய ஆட்கள் குழுமியிருந்த போதிலும் அறையில் ஒரே நிசப்தம், ஆச்சரியமூட்டும் மௌனம் நிலவியது. ஆயினும் கட்சிச் செயலாளன் "உஷ்" என்று சீறினான். நம்பிக்கையும் அச்சமும் கவலையும் கொண்ட விழிகளுடன் அனைவரும் மருத்துவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

(அடுத்த இதழில் முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்பூத்த கடல் கொள்ளையர்கள்

கடற் கொள்ளையர்கள் எப்போது தோன்றினார்கள் என்பதை சொல்லமுடியாது. கடந்த வரலாற்றுக் காலம் முழுவதிலும் இப்போதும் கடற்கொள்ளையர்கள் இருக்கிறார்கள். முற்காலத்தில் கடற்கொள்ளையர்கள் வீரர்கள் எனவும் மதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மக்கள் வெறுக்கவில்லை. படிப்படியாக நாகரீகமடைந்த மக்கள் கடற்கொள்ளையில் ஈடுபடுவது ஒரு தவறான செயல் என்பதை உணரத் தொடங்கினார்கள்.

சோமாலியா என்ற நாடு மிகவும் வறுமையான நிலையில் உள்ளது. சோமாலிய நாட்டு கடற்கொள்ளையரே தற்போதும் வேறு நாட்டுக் கப்பல்களை மறித்து கொள்ளையிடுவதுடன் மாலுமிகளை பணயக் கைதிகளாக வைத்து பல்வேறு நாடுகளிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு விடுவித்திருக்கிறார்கள். இதைவிட எமக்குத் தெரிந்தவரையில், இலங்கையில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் குழுக்கள் மற்றொரு குழுவினரை கடலில் மறித்து கொள்ளையிட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன. புலிகள் இரண்டு தடைவைகள் வேறு நாட்டுக் கப்பல்களை கடத்திக் கொள்ளையிட்டுள்ளார்கள். ஆயினும் இங்கு நாம் குறிப்பிடப்படுவது பண்டைய கால கடற்கொள்ளையர்கள் பற்றியதுதான்.



வணிகர்களைக் கொள்ளையடித்து வாழ்க்கை நடத்திய வைக்கிங்குகள் என்னும் கடற்கொள்ளையர் இருந்தனர். இவர்களுக்குத் தலைவன் ஒருவனும் இருந்தான். ஒரு காலத்தில் இவர்கள் கடற்போரில் பல சாதனைகளைப் புரிந்துள்ளார்கள். கப்பல் கட்டும் கலையில் பால்டிக் நாடுகளில் வசித்த வைக்கிங்குகள் திறமைபெற்றவர்களாக விளங்கினர். இவர்களின் கப்பல்களின் இரு முனைகளும் பறவைகளின் தலைகளைச் சின்னமாகக் கொண்டிருந்தன. வைக்கிங்குகளின் தலைவன் இறந்துவிட்டால் அவனது உடலோடு மரக்கலத்தையும் சேர்த்துப் புதைக்கும் வழக்கம் அவர்களிடம் இருந்தது.

சட்டத்தை மீறுபவர்களை இளந்தலைமுறையினர் பொதுவாகவே வீரர்களாக எண்ணுவதுண்டு. அவ்வாறே பண்டைய காலங்களிலும் கடற்கொள்ளையர்கள், இன்னொரு நாட்டை சூறையாடுபவர்கள், பெரும் கொள்ளைக் கூட்டங்களைக் கூட மக்கள் வீரர்களாக மதித்து ஆர்வம் காட்டியிருக்கிறார்கள்.

கடற் கொள்ளையர்களின் வரலாறுகள் ஆவணங்களாகியுள்ளன. அவற்றை நாம் கூட ஆர்வத்துடன் படிக்கிறோம். கொள்ளையர்கள் பொதுவாக ஒரு அமைப்பாக செயற்பட்டார்கள். மேலிருந்து கீழாக நிர்வாக நடைமுறையைக் கொண்டிருந்தார்கள். கொடி, நடையுடை பாவனைகள் மூலம் தமக்கென அடையாளத்தை வைத்திருந்தார்கள். ஒழுங்கு, கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தார்கள். அவற்றை மீறுபவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையான தண்டனைகளை விதித்தார்கள்.

பதினேழு - பதினெட்டாம் நூற்றாண்டுகள், வரலாற்றாளர்களால் கடல் கொள்ளையின் பொற்காலம் என்றழைக்கப்படுகின்றன. அமெரிக்கக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்ட இருநூறு ஆண்டுகளுக்குள், ஐரோப்பிய நாடுகள் அங்கே பல காலனிகளை உருவாக்கி தங்கள் மக்களைக் குடியேற்றின. பெரும் பரப்பளவில், பண்ணைகளும் தோட்டங்களும் உருவாக்கப்பட்டு, பருத்தி, கரும்பு போன்றவை பயிரிடப்பட்டன.


பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின், போர்ச்சுகல் போன்ற அனைத்து முன்னணி ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவில் காலனிகள் இருந்தன. காலனிகளுக்கும் ஐரோப்பாவுக்கும் நடுவே அட்லாண்டிக் கடல் இருந்தது. கப்பல்களின் மூலமே வாணிபம் நடைபெற்றது. இத்தகைய வாணிபக் கப்பல்களைக் கொள்ளையடித்து வாழ்ந்தவர்களே கடல் கொள்ளையர்கள். இவர்களைப் பற்றிய பிரசித்திபெற்ற பல கதைகள், திரைப்படங்கள், நாடகங்கள் உள்ளன.

சாதாரண கடற்கொள்ளைக்காரன் குறுகிய காலத்திலே பெரும் செல்வந்தனாகிவிட வேண்டும் என்ற ஆசை கொண்டவன். இத்தகையவர்கள் நன்கு அமைந்த குழுக்களில் செயற்பட்டுக் கொலைகாரர்கள் என்ற வரிசையில் இடம்பெற்றவர்கள்.

மத்தியதரைக் கடலில் கொள்ளைத் தொழிலில் ஈடுபட்ட கடற் கொள்ளையர்கள் குழுக்களாக அமைந்து செயற்பட்டார்கள். உலகையே எதிர்த்துப் போரிட்டதாக அவர்கள் பெருமை பேசிவந்த போதிலும், அவர்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் மதித்துக் கொண்டதில்லை.

பிரிட்ஸ்மென் என்று அழைக்கப்பட்ட கப்டன் ஜான் ஆவெரி கடற் கொள்ளையர்களில் புகழ்பெற்ற ஒருவன். 1665ஆம் ஆண்டில் பிறந்தவன். அவன் வணிகக் கப்பல் ஒன்றில் பணியாற்றியபோது அங்கு கலகம் ஏற்படுத்திக் கப்டனாகப் பதவி உயர்வு பெற்றான்.

ஒருமுறை கிரேட் மொகல் என்ற பெரும் செல்வந்தக் கப்பலைக் கைப்பற்றினான். அக் கப்பலில் மொகலாய மன்னனின் இளம் மகளும் இருந்தாள். அவளை அக்கப்பலுடன் மடகாஸ்கருக்கு அழைத்துச் சென்று அங்கு மன்னனாகி வாழ்க்கை நடத்தினான். 1696ஆம் ஆண்டில் அவன் பாஸ்டன் கவர்னருக்கு இலஞ்சம் கொடுத்து கடலில் கொள்ளையடித்த பெரும் பொருட்களுடன் அங்கு இறங்கி விற்பனை செய்வதற்கு அனுமதி பெற்றான். பிரிஸ்டாலில் வணிகர்கள் சிலர் அவனை ஏமாற்றி அவனிடமிருந்த பொருட்கள் எல்லாவற்றையும் பறித்துக் கொள்ளவே அவன் வறுமையில் வாடி இறந்தான். அவனுடைய வாழ்க்கை அடிப்படையாகக் கொண்டு "வெற்றிகரமான கடல் கொள்ளையன்" என்ற நாடகத்தை சார்லல் ஜான்சன் என்பவர் எழுத்தினார்.



கடற் கொள்ளையக் குழுவின் கொடிகள்

கடற்கொள்ளையர்களில் புகழ்பெற்ற மற்றொருவன் பாத்தலோமி ராபர்ட்ஸ். 1682ஆம் ஆண்டு லண்டனில் பிறந்த ராபர்ட்ஸ் 1722ஆம் ஆண்டு கடற்போர் ஒன்றில் இறந்தான். தனது வாழ்நாளில் கடற்கொள்ளையின் மூலம் 400 வாணிபக் கப்பல்களைக் கைப்பற்றியுள்ளான். கட்டுப்பாடு மிக்கவனாக விளங்கிய இவன் ஒழுக்கத்தலும் சிறந்தவனாகத் திகழ்ந்தான். இவன் மது அருந்தியதில்லை. தனது தனது கப்பலில் பெண்களையும் சூதாட்டக்காரர்களையும் இவன் அனுமதிப்பதில்லை. இவனுடைய கதையை அடிப்படையாகக் கொண்டதே "ராபர்ட்ஸ் வியூகம்" என்ற திரைப்படம்.

கடற்கொள்ளைக்காரர்களின் வீர சாகசக் கதைகளைப் போன்று தற்காலத்தில் விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் உலகில் பல்வேறு நாடுகளில் நடைபெறும் மக்கள் விரோதப் போராட்டங்களிலும் எமக்கு கவர்ச்சி உண்டு. நாகரீகமடைந்த சமுதாயத்திலும் கொல்வதும், அடிப்பதும், கொள்ளையடிப்பதும் வீரமிக்க செயலாகவே பார்க்கப்படுகிறது. இத்தகைய உணர்வை ஊக்குவிப்பதில் ஊடகங்கள் குறிப்பாக ஊடக வியாபாரிகள் பெரும் பங்கு வகிக்கிறார்கள்■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ஜனநாயகவாதியின்

**புத்திமதி**



மேடை எனும் தொட்டிலிலே
மக்களை இட்டு
தேர்தலெனும் தாலாட்டு
பாடி முடிந்தது
ஆறு ஆண்டு தூங்க வேண்டும்
அரை நடுவில் எழுந்தால்
தாறு மாறு தான் நடக்கும்
எதற்கு விழிப்பு?


உறங்க என்று எத்தனையோ
உபகதைகள் சொன்னோமோ
உறங்கிவிட்டு இடையினிலே
எழுந்ததேன் நீ
அறம் பிறழ்ந்து போனோமென்று
அஞ்சினையோ., இல்லை
உறங்க வைக்கச் சொன்ன கதை
உனக்குப் பிடிக்கலையோ?

இறங்கி வந்து அம்புலி மண்
இங்கு தவழவில்லையே யென்று
நிறம் சிவந்து கேட்பதெல்லாம்
நிகழ்தல் கூடா
சிரம் குழம்பக் கேள்வியெல்லாம்
கேட்கக் கூடா
பரம் பொருளை நம்புதல் போல்
எம்மை நம்பும்

விலை உயர்ந்ததா? அதைச் சும்மா
குறித்து வைத்துக் கொள்
வேலை போனால் மறந்திடாமல்
எழுதி வைத்துக் கொள்
இறந்திடாமல் நீ இருந்தால்
அடுத்த தேர்தலில்
மறந்திடாமல் அதனைக் கேள்
பதில்கள் சொல்வோம்

## கவிஞர் சுபத்திரன்

தங்கவடிவேல் எனும் இயற்பெயர் கொண்ட கவிஞர் சுபத்திரன் 1935ஆம் ஆண்டு மட்டக்களப்பில் பிறந்தவர். 1979ஆம் ஆண்டு அகாலமரணமடைந்தார். அவர் தனது குறுகிய வாழ்நாளில்



தான் வரித்துக்கொண்ட இடதுசாரிக் கொள்கையில் சற்றும் பிறளாதவராக வாழ்ந்தவர்.

யாழ்ப்பாணத்தில் 1960களின் பிற் பகுதியில் தீண்டாமைக்கெதிரான போராட்டங்கள் நடைபெற்றது. 1969இல் நிகழ்ந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன மாநாட்டில், சுபத்திரனின் "இரத்தக் கடன்" என்ற கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டது. இத் தொகுப்பில் தீண்டாமைக்கெதிரான கவிதைகள் இடம்பெற்றிருந்தன.

அரசியல் கவிதைகள் மற்றும் உள்ளுணர்வுக் கவிதைகளையும் அவர் எழுதியிருந்தார். சுபத்திரன் எழுதிய நூற்றுக் கணக்கான கவிதைகளில் இது ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் மூன்று வருடங்களில் முகநூல் கவர்ச்சி இழக்கும்
### பிறின்ஸ்டன் ஆராய்ச்சியாளர்கள் கணிப்பு




வேகமாக மாறி வரும் இன்றைய காலகட்டத்தில் மக்கள் தங்களிடையே தகவல்களை பறிமாறிக்கொள்ள வசதியாக சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த சமூக வலைத்தளங்களில் மிகவும் பிரபலமானதாக அறியப்படும் பேஸ்புக் எனப்படும் முகநூல் வலைத்தளம் கடந்த பத்து வருடங்களாக மக்களை சுற்றிவளைத்துப் பிடித்து வைத்திருக்கிறது.

இன்றைய நிலையில் மாற்றத்தை தேடி ஓடும் மக்கள் பேஸ்புக் மீதான ஆர்வத்தை கைவிட ஆரம்பித்திருக்கின்றனர். எனவே, 2017ஆம் ஆண்டில் அது தன் பயனர்களை பெரும் அளவில் இழக்கும் என பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஏனைய சமுக வலைத்தளங்களின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்த்து ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள், கொள்ளை நோயைப் போல் பேஸ்புக் சமூக வலைத்தளமும் முடிவுக்கு வரும் என்று வாதிடுகின்றனர்.

பேஸ்புக் சமூக வலைத்தளமானது, ஏனைய தளங்களைவிட அதிக காலம் உபயோகிக்கப்பட்டு வருகிறது. எனினும் இந்த வளர்ச்சியானது குறையத் தொடங்கி அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் தனது 80 சதவீத பயனர்களை பேஸ்புக் இழக்கும் நிலை வரும் என்று பிரின்ஸ்டன் ஆராய்சியாளர்கள் கணித்துள்ளனர்.

முகநூல் மூலம் அரபு வசந்தம் வீரியம் பெற்றதாக சிலர் சொல்கிறார்கள். இலங்கை போன்ற நாடுகளில் இளைஞர், யுவதிகளின் அமைதியைக் கெடுத்து, பெற்றோரை வருந்தச் செய்யும் இந்த முகநூலின் வரலாறு எப்படி அமையப்போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## முதலாளித்துவ தேசம் உருவானது எப்படி?

புராதனக் கூட்டமைப்பு சமுதாயம் சிதைவுற்று தேசிய இனங்கள் உருவாகின. குலம், குடிமக்கள் அமைப்புகளைப் பின்பற்றி உருவான அமைப்பே தேசிய இனம். முன்னேற்றமடைந்த அடிமை உடைமை அரசுகளில், அடிமை உடைமை அமைப்புகள் தோன்றிய காலத்திலேயே தேசிய இனங்களும் அங்கு வளர்ச்சிபெற்றன. நிலப்பிரபுத்துவம் வளர்ச்சி பெற்ற காலத்தில், ஆசிய ஐரோப்பாவின் பல நாடுகளில் தேசிய இனங்கள் உருவாகின.

முதலாளித்துவ உறவுகள் தோன்றியதும் அப்போதிருந்த தேசிய இனங்களின் அடிப்படையில், பொருளாதாரக் கூட்டு நலன்களையும் அரசியல் மத்தியத்துவத்தையும் ஆதாரமாகக் கொண்டு தேசங்கள் நிறுவப்பட்டன. ஒரு நாட்டில் ஒரு மொழியும் ஒரு பண்பாடும் தோன்றின. அது பல வர்க்கங்களும் வகுப்புகளையும் கொண்ட அமைப்பாகவும் உருவாகின. அன்றைய நிலையில், முதலாளித்துவ வர்க்கமே அரசியல், பொருளாதார துறைகளில் ஆளுமையைக் கொண்டிருந்தது. அதனால் முதலாளித்துவ தேசமே உருவானது. அன்றைய நாடுகளின் சித்தாந்தமும் முதலாளித்துவ சித்தாந்தமாகவே இருந்தது.

## சீன-இந்திய யுத்தம்



சீன இந்திய யுத்தம் கடந்த 1962ஆம் ஆண்டு இடம்பெற்றது. சரியாக ஒரு மாதம் இந்த யுத்தம் நீடித்தது. அக்டோபர் மாதம் இருபதாம் திகதி ஆரம்பித்த இந்த மோதல், நவம்பர் இருபதாம் திகதி சீனாவின் யுத்த நிறுத்த அறிவிப்போடு முடிவுக்கு வந்தது.

லடாக் மற்றும் மக்மோகன் எல்லைப் பகுதியிலேயே யுத்தம் இடம்பெற்றது. சீனா உரிமை கோரும் இந்தப் பகுதிகளிலிருந்து யுத்த நிறுத்த அறிவிப்போடு சீனப் படைகள் பின்வாங்கிக் கொண்டன. இமாலய எல்லைப் பகுதிகள் சீனாவுக்குச் சொந்தமா? இந்தியாவுக்குச் சொந்தமா? என்ற பிரச்சினையே இந்த மோதலுக்கான அடிப்படைக் காரணம். இருந்தாலும் 1959இல் இடம்பெற்ற திபேத்திய எழுச்சியை அடுத்து சீன-இந்திய எல்லையில் அவ்வப்போது மோதல் சம்பவங்கள் பல இடம்பெற்றிருக்கின்றன.

சுமார் 3225 கிலோமீற்றர் நீளமான இமாலய எல்லைப் பகுதிப் பிரதேசங்களுக்கு இரு நாடுகளும் உரிமை கோரியமையே யுத்தத்துக்கு அடிப்படைக் காரணியாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் 78-80 வீதம் நைட்ரஜன் உள்ளது

## நாம் அதிக விலையான உரங்களைப் பயன்படுத்துவது சரியா?

வளி மண்டலத்தில் 78-80 வீதம் நைட்ரஜன் வாயு காணப்படுகின்றது. வானில் தோன்றும் மின்னலின்போது மிக அதிகமாக ஆற்றல் வெளிப்படுகிறது. இவ்வாற்றலின் உதவியுடன் காற்றில் உள்ள நைட்ரஜன் அதன் ஒட்சைடுகளாக மாறும். அவை மழை நீரில் கரைந்து அமில மழையாகின்றன. அமில மழை மண்ணில் விழுந்து நைட்ரேட்டுகளாக மாறுகின்றன.

விலங்குகள் தாவரங்களை உண்ணும்பொழுது இந்த சேர்மங்கள் விலங்குகளின் உடலுக்கு இடமாற்றம் அடைகின்றன. ஆனால் தாவரங்களும் விலங்குகளும் இறக்கும்பொழுது அவற்றின் உடல்களை மண்ணில் உள்ள பக்டீரியாக்கள் சிதைந்து அவற்றிலிருந்து நைட்ரஜனை மீண்டும் வளிமண்டலத்துக்கே அனுப்புகின்றன. இவ்வாறாக சுழற்றி முறையில் நைட்ரஜன் மீண்டும் வளிமண்டலத்திற்கே சென்றுவிடுகிறது.

வளி மண்டலத்தில் உள்ள நைட்ரஜன் மண்ணில் கரையக்கூடிய நைட்ரேட்டுகளாக நிலை நிறுத்தப்படுவதற்கு நைட்ரஜன் நிலை நிறுத்தம் என்று பெயர். இந்த நைட்ரேட்டுகள் தாவரங்களால் உறிஞ்சப்பட்டு அவைகளுக்குத் தேவையான புரதங்கள் மற்றும் பிற நைட்ரஜன் சேர்மங்கள் தயாரிக்கப்படுகின்றன.

பூமியின் வளிமண்டலம், மிகுதியான நைட்ரஜன் மூலமாக இருந்தபோதிலும், ஒப்பீட்டளவில் பெரும்பாலானவை தாவரங்களால் பயன்படுத்த முடியாதவையாக இருக்கின்றன. வாயுவாக இருக்கும் நைட்ரஜனை வாழும் உயிரினங்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் மாற்றுவதற்கு இரசாயன செயல்முறையாக்கம் அல்லது இயற்கை நிலைப்படுத்துதல் (பாக்டீரியாக்கள் சார்ந்த நிலை மாற்றம் போன்ற செயல்முறைகள்) அவசியமாக இருக்கிறது.

தாவரங்களின் வேர் முடிச்சுகளில் ரைசோபியம் பக்டீரியாக்கள் வாழ்கின்றன. இந்த வகை பக்டீரியாக்கள் வளி மண்டலத்தில் உள்ள நைட்ரஜனை தாவரங்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவான நைட்ரஜன்களாக மாற்றுகின்றன. நெல் வயல்களில் காணப்படும் நீலப்பச்சைப் பாசிகளும் நைட்ரஜனை நிலை நிறுத்தச் செய்கின்றன.

அதிகரித்த நைட்ரஜன் உரங்களின் பயன்பாட்டினால் நாம் எமது ஆதாரத்தையே ஆட்டம் காணச் செய்கிறோம் என்பதை மறந்துவிடுகிறோம். அதிகரித்த நைட்ரஜன் பயிர், நிலம், நீர், கடல் அனைத்தையும் பாழ்படுத்துகிறது. அதிக உரப் பாவனையினால் அதிகமாகும் நைட்ரஜன், தரைமட்ட மற்றும் நிலத்தடி நீர் மாசு, கடல் இறப்புப் பகுதி ஏற்படுதல் மற்றும் புவி வெப்பமடைதலை அதிகரிக்கச் செய்தல் உட்பட எமது இனிய சுற்றுச்சூழலை கசப்பாக மாற்றிவிடுகிறது.

இனியும் நாம் அதிக விலையும் நாசமும் செய்யும் உரப் பாவனைக்கு அடிமையாகப் போகிறோமா? அல்லது நுண்ணுயிர் அங்கிகளைப் பெருக்குவதன் மூலம் எமது மண்ணிற்கு வளம் சேர்க்கப் போகிறோமா? நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் அனைத்து விவசாயிகளும் விவசாயத் திணைக்களமும் என்பதை வலிறுத்த விரும்புகிறார்கள் நாட்டின் அபிவிருத்தியில் அக்கறையுள்ள சில விவசாயிகள்.

# வேம்பு

வேம்பு மரம் இலங்கை, இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அதிகம் காணப்படுகிறது. இது மருந்துப்பொருள், பூச்சிக் கொல்லி, பூஞ்சாணக் கொல்லி மற்றும் உரமாகவும் பயன்படுவதால் சர்வதேச அளவில் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

1994ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த ருசு. கிரேஸ் அன் கோ மற்றும் யு.எஸ். டி. ஏ என்ற உர நிறுவனங்களுக்கு ஐரோப்பிய காப்புரிமை நிறுவனம் வேம்பு விதையிலிருந்து பூஞ்சாணக் கொல்லி தயாரிக்கும் உரிமையை அளித்தது.

இதை எதிர்த்து இந்தியாவின் அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி இயக்குநர் டாக்டர். வந்தன சிவா என்பவர் இரு ஆதாரங்களைச் சமர்ப்பித்தார். வேம்பு விதையை இந்திய விவசாயிகள் பூஞ்சாணம் மற்றும் பூச்சிக் கொல்லி மேலாண்மைக்கு பயன்படுத்தியுள்ளதையும், இரு இந்திய அறிவியலாளர்கள் வேம்பின் பூஞ்சாணத் தாக்குதல் பற்றி ஆராய்ச்சி செய்த கட்டுரைகளையும் சமர்பித்தார். இதன் பின்னர் ஐரோப்பிய காப்புரிமை நிறுவனம் தான் வழங்கிய காப்புரிமையை 2005ஆம் ஆண்டில், இரத்து செய்தது.

### காப்புரிமை பெறுவதன் பயன்கள்

*காப்புரிமை உரிமையாளரின் கண்டுபிடிப்பிற்கு பாதுகாப்பளிக்கிறது. அதன் பயனை அவர் முழுமையாக அடைய உதவுகிறது. பிறர் துர்ப்பிரயோகம் செய்வதைத் தடுக்கிறது. உரிமையாளரின் பொருளாதாரத்தை உயர்த்துகிறது. காப்புரிமை பெறப்படாத பொருட்களை யார் வேண்டுமானாலும் வணிக ரீதியாகப் பயன்படுத்த முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹா! ஹா.. ஹி..



சோதிடர்:

5ஆம் வீடு சந்திரன், 6ஆம் வீடு குரு, 7ஆம் வீடு ஒருவருமில்லை....

வழிப்போக்கன்:

ஐயா! தயவுசெய்து 7ஆம் வீட்டை எனக்கு வாடகைக்கு தருவீங்களோ? காலையிலிருந்து வீடு தேடி அலையிறன் ஐயா!

சோதிடர்: ? ? ? ?



**விமல் வீரவன்ச:**

வட மாகாண சபையால் இலங்கைக்கு ஆபத்து!

**ஜனாதிபதி:**

உம்மட வாயையே இந்த நாடு பொறுத்துக் கொண்டு இருக்குது!

**பலசரக்கு வியாபாரிகள் சங்கம்:**

ஐயா! காலாவதியான பொருட்கள் விவகார அமைச்சு ஒன்றை உருவாக்கி அமைச்சர் ஒருவரை நியமித்தால் நல்லது.

**ஜனாதிபதி:** ஏன் அப்படி?

**பலசரக்கு வியாபாரிகள் சங்கம்:**

பருப்பு, சீனி வாங்குவதென்றால் தண்ணீரில் போட்டு கழுவிக் காட்டினால்தான் வாங்குவம் என்டல்லோ வாடிக்கையாளர் சொல்லினம்.

நோயாளி:

வைத்தியரே! நான் முழங்கால் வலியால் அவதிப்படுகிறேன். ஏதாவது மூலிகை எண்ணெய் கொடுத்தால் நல்லது.

சித்த வைத்தியர்:

மன்னிக்கவும். நான் இப்போது வைத்தியம் செய்வதில்லை. வேறு வைத்தியரிடம் போங்கள். நான் கஞ்சா செய்கையில் ஈடுபடுகிறேன்.

நோயாளி:

வருமானம் என்ன மாதிரி?

சித்த வைத்தியர்:

மதுவை விட கஞ்சா ஆபத்தானதில்லை என்று ஒபாமாவே சொல்லியிருக்கிறார். எதிர்காலத்தில் ஏற்றுமதியும் செய்யலாம்.

## என்னடா உலகம் இது.....?



பிரதீப்: பொய் சொல்லாதே! பெரியவர்கள் சொல்கிறதைக் கேட்டு நட! தங்கச்சியோட சண்டை பிடிக்காத! எண்டெல்லாம் அப்பா ராத்திரி எனக்கு சொல்லிக் கொண்டிருந்தார்.

தனுஷ்: நல்லது தானே சொல்லியிருக்கிறார். எங்கட அப்பாவும் எனக்கு அடிக்கடி இந்தப் புத்திமதிகள் சொல்கிறவர்.

பிரதீப்: தாத்தா ஏதாவது செய்யாதே என்று சொன்னாலும் அப்பா செய்யிறவர். பிறகு தாத்தாவிட்டச் செய்யேல்லை என்று பொய் சொல்லுவார். அத்தையோட சண்டை பிடிச்சு இப்ப கதைக்கிறதே இல்லை.

தனுஷ்: ஓமடா. எங்கட அப்பாவும் தாத்தாவிட்ட, அம்மாவிட்ட பொய் சொல்லுவார். பக்கத்து வீட்டு ராஜன் மாமாவோட ஏதாவது பிழை கண்டுபிடிச்சு சண்டை பிடிச்சுக் கொண்டேயிருப்பார்.

பிரதீப்: சின்னப் பிள்ளையள் பொய் சொல்லக் கூடாது என்றும் அப்பா சொல்லிறவர்.

தனுஷ்: ஓமடா. அம்மா சொல்லிறவ, அப்பா பொறாமை, எரிச்சலிலை சண்டை பிடிக்கிறாராம். நாங்கள் சின்னப் பிள்ளையள் அப்படியெல்லாமம் இருக்கக்கூடாதாம்.

பிரதீப்: அப்படியெண்டால், நாங்கள் அப்பாவளவு வளர்ந்து பெரியாளாகி வேலைக்குப் போன பிறகு பொய் சொல்லலாமோ?, சண்டை பிடிக்கலாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களையும் வாழவிடுங்கள்!




கடும் உறைபனி சூழ்ந்த ஆர்க்டிக் பகுதியில் காணப்படும் இவற்றின் வாழ்நாள் ஏறத்தரி 25 ஆண்டுகள். இது இறைச்சி உண்ணும் ஊனுண்ணிப் பாலூட்டி. நீரிலும் நிலத்திலும் வேட்டையாடவல்லது. வளர்ந்த ஆண் கரடி 400 முதல் 600 கிலோகிராம் எடையுடையது. பெண் கரடிகள் 200 முதல் 300 கி.கிராம் எடையுடையவை. 240 நாட்களாகும். பொதுவாக இரண்டு குட்டிகள் பிறக்கின்றன. உலகில் ஏறத்தாழ 20ஆயிரம் பனிக் கரடிகள் உள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.


நீலமஞ்சள் பெருங்கிளி தென் அமெரிக்கக் காடுகளில் காணப்படுகின்றன. 76 முதல் 83 செ.மீ நீளமும் 900 முதல் 1300 கிராம் எடை வரையும் வளரக்கூடியது.

இப்பறவை பார்ப்பதற்கு அழகாக நீல இறக்கை வாலுடனும் கருநீல கன்னமும் உடலின் அடிப்பகுதி பொன்மஞ்சளாகவும் இருக்கும். இதன் நெற்றி பச்சைநிறத்திலும் அலகு கறுப்பாகவும் இருக்கும்.




இப்பறவைகள் பொதுவாக வாழ்நாள் முழுவதும் ஓரிணையுடன் வாழ்கின்றன. மரப்பொந்துகளில் கூடுகட்டி வாழ்கின்றன. பெண் கிளியானது இரண்டிலிருந்து மூன்று முட்டைகள் வரை இடும். 28 நாட்கள் அம்முட்டைகளை அடைகாக்கும். இப்பறவைகள் இவற்றின் அழகான தோற்றத்தினாலும் இவற்றின் பேசும் ஆற்றலினாலும் ஆர்வமூட்டுகின்றன.

## சிவிங்கிப்புலி



சிவிங்கிப்புலி பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த ஊனுண்ணி வகையைச் சேர்ந்தபாலூட்டி விலங்காகும். இது நிலத்தில் வாழும் விலங்குகளிலேயே மிகவும் வேகமாக ஓடக்கூடியதாகும். இதனால் மணிக்கு 105 கிமீ (65 மைல்) வேகத்துக்கு மேல் ஓட முடியும்.

இதன் உடல் முழுவதும் 2 முதல் 3 செமீ அளவுள்ள வட்ட வடிவ கருப்புப் புள்ளிகள் காணப்படும். கீழ் வயிற்றுப் பகுதியில் புள்ளிகளின்றி வெள்ளை நிறத்தில் இருக்கும். வயதுவந்த ஒரு சிவிங்கிப்புலி 40 முதல் 65 கிகி எடையும் 112 முதல் 135 செமீ நீளமான உடலும் 84 செமீ நீளமுடைய வாலும் கொண்டிருக்கும். ஆண் சிவிங்கிப்புலிகள் பெண் சிவிங்கிப்புலிகளை விட சற்றுப் பெரிய தலையை உடையதாய் இருக்கும்.

பெண் சிவிங்கிப்புலிகள் 20 முதல் 22 மாதங்களில் இனப்பெருக்கம் செய்யும் பருவத்தை எட்டுகின்றன. ஆண் சிவிங்கிப்புலிகள் 12 மாதங்களிலேயே இப்பருவத்தை எட்டி விடுகின்றன. பெண் சிவிங்கிப்புலியின் கர்ப்பகாலம் 98 நாட்கள் ஆகும். சிவிங்கிப்புலி இப்போது இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் அற்றுப்போய்விட்டது. ஆபிரிக்க கண்டத்தில் அழிந்துவரும் உயிரினமாக வகைப்படுத்தப்பட்டு வேட்டையாடுவது தடை செய்யப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகள்
கண்காணிப்பகம்
கண்களை
மூடிக்கொண்ட
நாட்கள் அவை...

கழுத்தை வெட்டிக் கொல்லலாம்
பெண்களை நிர்வாணமாக்கி
ஊர் இரசிக்க வைக்கலாம்,
சமயத்தின் பேரால்,
சாதியின் பேரால்
அப்பாவிகள் மீது எதுவும்.. அது
உங்கள் விருப்பம்!

"எல்லாம் நீதிமன்றத் தீர்ப்பு"
நாம் தலையிடுவது தப்பு
நாடுகளின் இறைமை
அதை நாம் மீற மாட்டோம்!

குண்டுபோட அனுமதி வழங்கிவிட்டு,
கொன்றுவிட்டாய்! கொன்றுவிட்டாய்!
எனக் கூச்சல் போடும்
ஐ.நா.வே
இன்னுமா உன் வேஷம்
கலையவில்லை!

மனோஷா

## அன்று 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி



16 வயது சிறுமி றிஷானா நபீக். தனது குடும்பத்தின் வறுமையைப் போக்க உழைக்க விரும்பினாள். தனது குடும்பத்தின் வறுமையிலிருந்து மீள அவளுக்கு உள்ளூரில் எந்த வாய்ப்பும் கிடைக்கவில்லை. சவுதி அரேபியாவுக்கு சென்றாள்.

அந்தச் சிறுமிக்கு கிடைத்த வேலை, பச்சைக் குழந்தையை பராமரிப்பது. அவள் குழந்தைக்குப் பால் புகட்டியபோது, பால் புரைக்கேறி குழந்தை இறந்துவிட்டது. அதற்கு றிஷானவே காரணம் என சவுதி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. றிஷானா நபீக் பார்வையாளர்கள் முன்னிலையில் தலை வெட்டிக் கொல்லப்பட்டாள்.

ஐ.நா.மனித உரிமைகள் காப்பகம் றிஷானாவைக் காப்பாற்றவில்லை. சர்வ வல்லமை பொருந்திய அமெரிக்காவும் சவுதியின் தீர்ப்பை மதித்தது. தனது பிரஜையைக் காப்பாற்ற முடியாத கையாலாகாத்தனத்துடன் இலங்கையும் வாயை மூடிக்கொண்டது.

சவுதியிலிருந்து இலங்கைப் பணிப்பெண்கள், சடலமாகவும், சித்திரவதைக்குள்ளாகியும் திரும்பி வருகிறார்கள். சித்திரவதைக்குள்ளாகும் பெண்கள் நாட்டுக்குத் திரும்பி வர முயற்சித்தால் சவுதி சட்டப்படி தண்டனைக்குள்ளாக வேண்டி நேரிடும். இதற்குப் பின்னரும், சவுதிக்குப் பணிப்பெண்கள் அனுப்பப்படுவது இன்றுவரை நிறுத்தப்படவுமில்லை.

## பாரத தேசமே தலையைக் குனிந்துகொள்!

இந்தியாவின் மேற்குவங்க மாநிலத்தில் பிர்மன் என்ற கிராமம். அங்குள்ள மக்களுக்கு இந்திய நீதித்துறை கட்டப் பஞ்சாயத்து மூலமே நீதி வழங்குகிறது. அந்தக் கிராமத்தில் வசித்த 20 வயது பெண் வேறு மதத்தைச் சேர்ந்த இளைஞனைக் காதலித்து திருமணம் செய்ய முயற்சித்துள்ளார். அதற்காக பஞ்சாயத்து தலைவர் வழங்கிய நீதி. "13 ஆண்கள் சேர்ந்து அந்தப் இளம் பெண்ணை பாலியல் வல்லுறவு செய்து மகிழ்ச்சியடையுங்கள் என்பது" இச் சம்பவம் கடந்த 20ஆம் திகதி நடந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே சம்பந்தப்பட்டவர்களை பொலிசார் கைது செய்துள்ளனர். தற்போது அந்தப் பெண்ணையும் குடும்பத்தவரையும் தமது கிராமத்திற்குள் வரவேண்டாம் என பிர்மம் கிராமத்தவர் கூறியுள்ளனர். 2010ஆம் ஆண்டில் பிர்பம் என்ற இந்தக் கிராமத்தில் குறைந்தது 3 பெண்களையாவது நிர்வாணமாக கிராமத்தினர் முன்னர் நடக்க கிராம பெரியவர்கள் உத்தரவிட்டதாக. பொலிசார் கூறுகின்றனர். இந்திய நீதித்துறை என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய் சொல்ல வேண்டாம்!

எமது சகோதர மொழியான சிங்களத்தில் பல இலக்கியப் படைப்புகளுக்கு சொந்தக்காரரான திரு.ஜயத்திலக்க கம்மல்லவீர அவர்களின் சிறுகதை தொகுதியிலிருந்து ஒரு கதை. சிங்களத்திலிருந்து மொழிபெயர்ப்பு செய்தவர் திக்குவல்ல கமால். "இன உணர்வுகள் அதிக வலுப்பெறும்போது மனித உணர்வுகள் நசுக்கப்படும் என்பதே கருத்துநிலையாகவுள்ளது"

நான் சிவரமணிக்கு அவளது பெயரை சிங்களத்தில் எழுதச் சொல்லிக் கொடுத்தேன்.

சி வ ர ம ணி

அவளது மென்மையான கைவிரல்கள் வலிக்கும் அளவுக்கு எனது வலது கையால் அழுத்தியபடி "ம" எழுதும் விதத்தை சொல்லிக் கொடுக்கையில் "ஓம் ஓம் ஓம் உங்க பாஷை எனக்கு விளங்குது" என்று சொல்லுமாப்போல் சிவரமணி என்னை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

'ம - ம இரண்டு ம - மம'

'மம சிவரமணி'

'நான் சிவரமணி'

'மம சிவரமணி'

'நான் சிவரமணியை'

'ம்.. ம் நான் சிவரமணியைக் காதலிக்கிறேன்'

என் கண்களை நோக்கிய அவளது பார்வை வீச்சு இறுகி நின்றது.

'ஹ்'

'? ?......?'

'பொய் சொல்ல வேண்டாம்'

'நான் பொய் சொல்வதில்லை'

'நீங்க எல்லோருமே சொல்வது பொய்' என்ற சிவரமணி பேனாவை மேசைமீது வைத்துவிட்டு பின் பக்கம் சாய்ந்து கதிரைக்குப் பலம்பொடுத்து அவளது பார்வையை தொலைவில் எங்கோ பாழடைந்த உலகமொன்றுக்குள் செலுத்தி அதில்



லயித்தாள்.

ஒரு நாளும் வாய் திறந்து சொல்லாத போதும் சிவரமணி என்னைக் காதலிப்பது எனக்குத் தெரியும். அந்த அன்பு பயத்தாலும் சந்தேகத்தாலும் அவளது கண்மடல்களுக்குள் மறைந்திருந்ததை நான் அவதானித்துள்ளேன்.

'யூ ஆ ஹேன்ட்ஸம்' உண்மைதான் நிலைக்கண்ணாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை எப்பொழுதும் எனக்குச் சொல்லிக் கொண்டிருக்கும்.

'சிவரமணி அழகானவள்'

'பொய்'

அந்த அழகிய சிவரமணி எனக்கே பொருத்தமானவள். அவளைப் போன்ற இளம் யுவதியொருத்தி எந்த அங்கலட்சணமுமில்லாத சிவதாஸன் போன்ற முரட்டு மனிதனுக்கு எவ்வகையிலும் பொருத்தமேயில்லை.

இருந்தும் அந்த அழகிய சிவரமணி எந்தப் பொருத்தப்பாடுமில்லாத சிவதாஸனுடன்தான் சென்றாள்.

சிவரமணி எங்கள் அலுவலகத்தில் தொழில் பார்ப்பதற்காக கொழும்புக்கு வரவில்லை. தனதுயிரைக் காப்பாற்றிக் கொள்ளவே வந்தாள். சிவதாஸனும் அப்படித்தான்.

சிவரமணிக்கும் என்னைப் போல் நிரந்தரமான தொழில்தான் கிடைத்தது. இருந்தும் அவள் வேலை செய்ததும், சாப்பிட்டதும், குடித்ததும் வந்து போனதும் மட்டுமல்ல, கதைத்தது கூட தற்காலிக அடிப்படையில்தான். எந்த விடயத்திலும் ஒட்டுறவில்லை. தங்கிநிற்காத பாங்கு தற்காலிக தன்மையினால்தான்.

நாங்கள் யுத்தத்தினால் அநாதையாகிப்போன பிள்ளைகளின் சுகநலனுக்கான நிறுவனமொன்றில் வேலை செய்தோம். அந்த அகதி முகாம் களுக்குப் போய் அந்தப் பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்களைத் தேடிப் பார்த்தோம். எனக்கந்தப் பிள்ளைகளைப் பார்க்கும்போது பொறுக்கமுடியாத உணர்வேற்படுகிறது. நாங்கள் கொண்டுபோகும் உணவு, ஆடையணிகள், புத்தகங்கள் என்பவற்றைப் பகிர்ந்து கொடுத்தபின் அந்தப் பிள்ளைகளில் ஓரிருவரை அருகே அழைத்து அவர்களது தலையைத் தடவுவேன். ஆனால் சிவரமணியோ கொண்டுவந்ததைப் பகிர்ந்துவிட்டு விரைவாக அவர்களிடமிருந்து விலகிவிடுவாள். தொலைவிலிருந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவளது உணர்வு எங்களைவிட அதிகமென்பதை நான் விளங்கிக் கொண்டேன்.

ஒருநாள் என்னைக்கூட அதே பார்வையில் பார்த்துக் கொண்டிருந்த விதத்தை நான் கண்டேன். அப்பொழுது எனக்குள்ளும் அகதியுணர்வே மேலிட்டது. உண்மையான யுத்த அகதியான சிவதாஸனை அவள் அவ்வாறாகப் பார்ப்பதை நான் ஒருநாளும் காணவில்லை. சிவரமணி சிவதாஸனை எவ்வாறான வகையில் பார்த்தாள் என்பதை என்னால் நினைவூட்ட முடியவில்லை. அப்படியொன்று எனது ஞாபக ஏட்டில் பதிவாகியதில்லை.

சிவரமணியின் தாய் அவர்களது வீட்டின்மீது விழுந்த செல் தாக்குதலில் இறந்து போனதையும், ஒரே தம்பி காணாமல் போனதையும் அந்தக் கவலையில் தந்தை நோய்வாய்ப்பட்டிருப்பதையும் நான் எனது அம்மா, அப்பாவிடம் எடுத்துக் கூறினேன்.

'மகனே! இனி நீ அந்தப் பிள்ளையைக் கல்யாணம் கட்டவா எண்ணியிருக்கிறாய்?' அம்மா மிகுந்த உணர்ச்சிவசப்பட்டவராகக் கேட்டாள். எனது அம்மா நடுநிலைப் போக்கானவர் என்பதை நன்கறிந்திருந்த நான் அம்மா உணர்ச்சிவசப்பட்டது எனக்காவல்ல என்பதை விளங்கிக் கொண்டேன்.

'உங்க எதிர்காலம்பற்றி முடிவெடுக்க வேண்டியது நீங்கதான். நன்றாக யோசித்துப் பார்த்து ஒரு முடிவெடுங்க'

அப்பா பெரும்பாலும் மென்மையானவர். இருந்தும் மற்றைய நாட்களைவிட ஆழமான குரலில் சொன்னார்.

"ஐ வில் மெரி யூ"

நான் சொற்களாலும் தொட்டும் சிவரமணியிடம் சொன்னேன்.

அவள் நான் பற்றிய கைகளை விடுவித்துக் கொள்ள முயற்சிக்காமல் "நடக்காத விஷயங்களைப் பேசவேண்டாம்" என்று எனக்கு நன்கு விளங்கக் கூடிய சிங்களத்திலேயே சொன்னாள்.

எங்களோடு கொழும்பில் வாழ்வதற்கு அவசியமான சொற்ப சிங்களத்தை கற்றுக்கொள்ள அவளுக்கு ஆறு மாதத்திற்கும் குறைந்த காலமே எடுத்தது. நானும்கூட அந்தக் காலத்திற்குள் மிகுந்த சிரமத்தோடு தமிழ் சொற்கள் சிலவற்றைக் கற்றுக் கொண்டேன்.

"ஒயா ஹரி லஸ்ஸனய். நீங்கள் மிகவும் அழகானவர்"

மம ஒயாட்ட ஆதரெய் - நான் உங்களைக் காதலிக்கிறேன்

"எய் அண்டன்னே?" - ஏன் அழுகிறீங்க?

"அப்பி பத்திமு"-நாம் கலியாணம் கட்டுவோம்

சிவதாஸன் முதன்முதலில் எங்கள் அலுவலகத்திற்கு வந்த சந்தர்ப்பத்தில் நான் சிவரமணியிடம் தமிழ் கற்க முயற்சித்துக் கொண்டிருந்தேன்.

"உங்களுக்கு தமிழ் படிக்க வேண்டிய தேவையிருந்தால் நான் படிப்பிக்கிறேன். நான் ஒரு காலத்தில் ஆசிரியராக வேலை செய்தேன்" சிவதாஸன் ஆங்கிலத்தில் இவ்வாறு எனக்குச் சொன்னான்.

"அப்படியென்றால் நான் உங்களுக்கு சிங்களம் கற்பிக்கிறேன்" நான் பதிலாகச் சொன்னேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை அவசியமில்லை. நான் கனடா போவதற்காக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன்"

"கனடாவுக்கா?" சிவரமணி கண்களை விரித்தபடி கேட்டாள்.

"ஓம் எனது தம்பிமார் இருவர் அங்க இருக்காங்கள" சிவதாஸன் எங்கள் இருவருக்கும் சொன்னான்.

"உக்காருங்க" சிவரமணி அவனைத் தனது மேசை முன்னாசனத்திற்கு அழைத்தாள்.

அதன் பின்னர் அவர்கள் நீண்ட நேரம் தமிழில் கதைத்துக் கொண்டிருந்ததை நான் அவதானித்துக் கொண்டிருந்தேன். புத்துயிர் பெற்றதைப் போன்று சிவரமணி தொடர்ந்து வேகமாகக் கதைத்தாள். எனக்கு எதுவுமே விளங்கவில்லை.

அன்று வேலை முடிந்தபின் முன்பு போல பஸ்ஸில் ஏற்றிவிடுவதற்குப் பதிலாக, அவளோடு தெஹிவளையில் அவள் தங்குமிடம் வரையில் சென்று சேர்த்துவிட்டேன். பஸ் வண்டியில் அமர்ந்து செல்கையில் அவளது இடக்கை விரல்களை தொடர்ந்து தடவிக் கொண்டிருந்தேன். அவள் யன்னலுக்கு வெளியேயான உலகைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான் சிவதாஸனிடம் தமிழ் நன்றாகக் கற்றுக் கொள்கிறேன். சிவரமணிக்கு சிங்களம் பேச கற்றுத் தருகிறேன். அப்போது நாங்கள் கல்யாணம் செய்துகொண்டு அங்கோ, இங்கோ சந்தோஷமாக வாழமுடியும்.

அந்நாட்களில் எனது உண்மையான தாழ்மையான சிந்தனை அப்படியாகவிருந்தது.

ஒருநாள், நாங்கள் வேலைவிட்டு கிருலப்பனை பஸ் நிலையத்தில் நிற்கும்போதே அந்தச் சத்தம் கேட்டது. சந்தேகமில்லாமல் அது குண்டுவெடிப்புச் சத்தமென்பதை புரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு எங்கள் அனைவருக்கும் அறிவிருந்தது. எமது சுற்றாடல் எறும்புக் கூட்டுக்குத் தீ வைத்தது போல் குழம்பியது. சிவரமணி முதற் தடவையாக எனது கையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள். அவளது நெற்றியிலுள்ள பொட்டைத் துடைத்துவிட பொக்கட்டிலிருந்த கைக்குட்டை எனது கைக்கு வந்தபோதும், மிகுந்த சிரமத்தோடு நான் அந்தக் கையைத் தடுத்துக் கொண்டேன். அவள் என் கையை விடாமலே பிடித்துக் கொண்டிருந்தாள். பாதையில் அங்குமிங்கும் ஓடும் பஸ்களில் தொங்கிக் கொண்டு செல்லும் மனிதர்கள் எங்கள் இருவரையும் பார்த்தனர். இருதயம் இவ்வளவு வேகமாகத் துடிப்பதை முன்பு நான் அனுபவித்ததில்லை.

'மஹரகம' சரியாக அரச மரத்துக்கு முன்னால்....

இருபது முப்பது பேர் சரி'

இந்த இடத்தில் இப்படி நிற்பது ஆபத்தானது. என்னதான் செய்யலாம்? ஒன்றுமே விளங்கவில்லை. நான் பாதை நெடுக வேகமாக நடக்கத் தொடங்கினேன். சிவரமணி என் கையைப் பற்றிப் பிடித்ததை விடாமல் இழுபட்டு வந்தாள். அவ்வாறு போகும்போதே பாதையில் ஓடும் அத்தனை முச்சக்கர வண்டிகளுக்கும் கைகாட்டினேன். ஒன்று எங்களருகே வேகத்தைக் குறைத்தது. நான் உடனே அதற்குள் புகுந்து கொண்டேன். எனது பின்னால் சிவரமணியும் நுழைந்து கொண்டாள்.

"தெஹிவளைக்கு, தெஹிவளை சந்திக்கு"

"மஹரகமையிலாமென்ன?"

"ஓம் மஹரகமையிலாம். நிறையப் பேர் செத்திட்டாங்களோ?" நான் அவனுக்குப் பதில் கொடுத்துக்கொண்டு கேட்டேன்.

"எப்படியோ தெரியாது சேர்"

"நீங்க முஸ்லிமா?"

"இல்லை"

"தமிழ்?"

"பிறந்தது கொழும்பில்"

"பயமில்லையா?"

"நாங்க யாருக்கும் பிழை செய்யவில்லை சேர்"

"அது சரி"

எனக்கு 83 கறுப்பு யூலை ஞாபகம் வந்தது. பாதையில் போகும் வாகனங்களை நிறுத்தி வாளால் வெட்டி தீ வைத்தார்கள்.

"இந்த நோனாவ தெஹிவளையில் விட உங்களால் முடியுமா?"

எனது இடதுகை மணிக்கட்டு கடுமையாக நெருக்கப்பட்டது விளங்கியது.

"பிரச்சினையில்ல சேர்"

"அப்படியென்றா நான் இறங்கினால் பரவாயில்லையா?"

"சேர் எங்க போகணும்?"

"கம்பளைக்கு"

"ஐயோ சேர் ரொம்பத் தூரம் சரி இறங்கி ஓடுங்க"

"சரி நீங்க போங்க! கவனம்" அவள் சொன்னாள்.

நான் முச்சக்கர வண்டியிலிருந்து இறங்கினேன். "டேக் கெயர்"

ஐயோ! அப்பாவி அவளுக்கு எந்தத் தொல்லையும் நடக்காதிருக்கட்டும்.

இன்னொரு நாள், கடந்த மாத முன்னேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கையைத் தயார்ப்படுத்தி முடிக்க வேண்டியிருந்ததால், நானும் சிவரமணியும் காரியாலய நேரத்தின் பின்னரும் கொஞ்ச நேரம் வேலை செய்தோம். வெடிச் சத்தம் சரியாக 5.10இற்குக் கேட்டது. அதன் எதிரொலி ஐந்தாறு நிமிடங்கள் எங்கள் காதின் அடியாளம் வரை சென்றது. மேசையின் இரு பக்கமாகவும் அமர்ந்திருந்த நாங்கள் பரஸ்பரம் முகம் பார்த்தபடி சிலையாகிப் போனோம். எனதுடலில் தலையுச்சியிலிருந்து கால்கைகளின் விரல் நுனிவரை விறைப்புப் பரவியதை உணர்ந்தேன்.

"குண்டு எங்கே வெடித்தது? எத்தனை பேர் உருண்டார்கள்? ஊரடங்குச் சட்டம் பிறப்பித்துவிட்டார்களா?"

பாதை நெடுக அங்குமிங்குமாக ஓடும் மனிதர்களின் மனதில் இவ்வேளை சுற்றிச் சுழலும் கேள்வியை நானறிவேன்.

ஆனால் என் மனதில் எழுந்த கடுமையான கேள்வி அதுவல்ல. "இப்பொழுது நான் எப்படி சிவரமணியை தெஹிவளைக்குக் கொண்டுபோய் விடுவேன்?"

எனக்கு மீண்டும் 83 ஞாபகம் வந்தது. வாள், பொல்லு, பெற்றோல் பேணி என்பவற்றை கையிலெடுத்த மனிதர்கள் பாதையில் இறங்கி நின்றனர். "இறங்கடா வெளியே நீ தான்டா பேயா.. இனத்தைக் காட்டிக் கொடுப்பது"

அவதாரமொன்று இறங்கியது போன்று எனக்கும் சிவரமணிக்குமிடையே சிவதாஸன் தோன்றினான்.

"நான் பாதையில் நின்றேன். வெடிச் சத்தம் கேட்கும்போது எனக்கு இவவை ஞாபகம் வந்தது. நான் உங்களைக் கூட்டிக்கொண்டு போறன். கெதிப்பண்ணுங்க. நாங்க போவம்" அவன் தொடர்ச்சியாக ஆங்கிலத்தில் சொல்லிக்கொண்டு சென்றான்.

"நீங்கள்?" சிவரமணியின் பயந்த கண்கள் என்னிடம் கேட்டன.

"சரி. நான் எப்படியாவது போறன். நீங்கள் சிவதாஸனோட போங்க."

எந்தப் பக்கம் போவதென்று நிச்சயமில்லாமல், ஹோன் ஒலித்தபடி வீதிச் சட்டம் அனைத்தையும் மீறிக்கொண்டு ஓடும் வாகனங்களில் ஒன்றுகூட கைநீட்டும் எவருக்காகவும் நிறுத்தாததால் நூற்றுக் கணக்கானவர்களின் உடலில் மோதிக் கொண்டு, அந்தப் பக்கமாகவும், இந்தப் பக்கமாகவும் தள்ளாடியபடி அங்குமிங்கும் நுழைந்து சென்று மருதானை புகையிரதநிலையம் வரை வேக நடையில் செல்ல வேண்டி நேர்ந்தது. நான் புகையிரத பெட்டியொன்றில் வாயிலண்டை கட்டியிருந்த மனிதத் தேன்கூட்டில் தொங்கியபடி வீட்டுக்குச் சென்றேன்.

கொழும்பில் தங்குவதுகூட பாதுகாப்பற்றதாகக் கருதிய அவர்கள் இருவரும் வவுனியாவுக்கு தற்காலிகமாக வசிக்கச் சென்று இப்போதைக்கு இரண்டு வருடங்களாகிவிட்டன. வவுனியா சென்று அடுத்த நாளே அவர்கள் இருவரும் திருமணம் செய்துகொண்டதாகவும் எனக்கு சிவதாஸன் கடிதம் எழுதியிருந்தான். இருந்தும் இப்பொழுது யுத்தம் முடிந்துள்ளதால் விருப்பமாயின் வவுனியாவுக்கு வந்து செல்லுமாறு கேட்டு, சென்றவாரம் எனக்குக் கிடைத்த இரண்டு வரிக் கடிதத்தை சிவரமணியே எழுதியிருந்தாள். அந்த ஆங்கிய வாக்கியங்கள் இரண்டின் கீழாக "சிவரமணி" என்று அவளுக்கு நான் கற்பித்த சிங்களத்திலேயே கையொப்பமிட்டிருந்தாள்.

உங்களைக் காணக் கிடைத்தது பெரிய சந்தோஷம். கடைசி நேரத்தில் எங்கள் இரண்டு பேருக்குமே விசா கிடைச்சிருக்கு அடுத்த வாரம் நாங்கள் கனடா போறம்

சிவதாஸனின் வதனம் சுதந்திரச் சிரிப்பால் ஒளி பெற்றது. நான் அவர்கள் வாழும் சிறிய அறைத்துண்டில் சிறிய கதிரையொன்றில் குறுகிப் போய் அமர்ந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அறையை இரண்டாகப் பிரித்துக் குறுக்கே போடப்பட்டிருந்த திரைக்கு அப்பால் குழந்தையொன்றின் அழுகுரல் கேட்டது.

குழந்தையை அணைத்தபடி என்முன்னே தோன்றினாள் சிவரமணி. இப்பொழுது இரண்டு மடங்கு அழகாகவிருந்தாள். என்னால் அவளது முகத்தைப் பார்க்க முடியவில்லை. நான் அவளது மென்மையான பாதங்களைப் பார்த்தேன்.

எனக்குத் திடீரென்று இந்தச் சந்தர்ப்பத்தோடு எந்தவித சம்பந்தமுமில்லாத ஒரு விடயம் ஞாபகம் வந்தது.

"இப்பொழுது சிவரமணியின் பாதங்கள் வியர்ப்பதில்லையா?"

"இல்லை!" அவள் கேட்டும் கேட்காத சோகக் குரலில் சொன்னாள்.

சிவரமணி எங்களோடு வேலை செய்த காலத்தில் அவ்வப்போது ஹேண்பேக்கிலிருந்து பெரிய கைக்குட்டையொன்றை எடுத்து கதிரைக்கு கீழால் கைவிட்டு தனது இரு பாதங்களையும் துடைத்துக் கொள்வாள். அவை வியர்வையினால் ஈரமாவதால்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறமும் சட்டமும்

## வேலைவாய்ப்பு விளம்பரங்கள்



தொழில் தேடி அலையும் இளைஞர், யுவதிகள் தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகும் வேலைவாய்ப்பு விளம்பரங் களைக் கண்டதும் அதைப் பெற்றுக் கொள்வதற்காக முந்திக் கொள்கிறார்கள். சில விளம்பரங்களில் தொழில் நிறுவனம் பற்றிய எந்த விபரங்களும் குறிப்பிடப்பட்டிருப்பதில்லை. கைத் தொலைபேசி இலக்கம் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருக்கும்.

வேலை தேடுபவர்கள் உடனடியாகவே அந்தத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்கிறார்கள். பத்திரிகையில் வரும் விளம்பரத்திற்கு உத்தரவாதம் உண்டு என நம்புகிறார்கள். பல்வேறு இழப்புகளைச் சந்தித்த பின்னரே தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து கொள்கிறார்கள்.

கைத்தொலைபேசியின் வழியாக பலர் மிகவும் எச்சரிக்கையான முறையில் மோசடிகளைச் செய்கிறார்கள். இத்தகைய மோசடிகள் பற்றிய செய்தியை வெளியிடும் அதே பத்திரிகைகள் வியாபார நோக்கினை மட்டும் கொண்டு விளம்பரங்களைப் பிரசுரிக்கிறார்கள். வேலைவாய்ப்பு விளம்பரம் ஒன்றினைப் பிரசுரிக்கும்போது, எந்த இடத்தில்? எத்தகைய வேலைக்காக? ஆட்களைத் தேடுகிறார்கள் என்பது அவசியமானது. ஒரு நிறுவனத்திற்கு அத்தகைய பொறுப்புணர்வு இருக்க வேண்டும்.

## வாசகர்களே!

நீங்கள் தொழில் செய்யும் இடங்களிலோ அல்லது வீட்டிலோ, சமூகத்திலோ உங்கள் உரிமைகள் மீறப்படுவதாக அல்லது துர்ப்பிரயோகம் செய்யப்படுவதாக, நீங்கள் உணர்ந்தால் அதனை எமக்கு எழுதி அனுப்பி வையுங்கள். விஷயம் உண்மையானதாகவும் நியாயமானதாகவும் இருக்கும் பட்சத்தில், உங்களை அடையாளம் காட்டாமலே உங்கள் பிரச்சினையை நாம் வெளிப்படுத்துவோம். தயவுசெய்து எந்தவித கற்பனையும் இல்லாமல், உண்மையானவற்றை மட்டும் எழுதி அனுப்பவும். இரகசியம் பேணப்படும்.

தபால் முகவரி:
பனங்கூடல் சஞ்சிகை
"எனது உரிமை"
ஜீவ பவனம்
மல்வம், உடுவில்
panangkoodal@gmail.com

## மனிதனின் தார்மீகம்

மனிதனின் தார்மீகம் எது வரை செல்லும் என்பதை எடுத்துச் சொல்லும் ஒரு கதை இது.

"மூன்றாவது நவீன் எனும் பங்குச் சந்தைத் தரகன்" சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை பெற்று குணமாகி வரும் இளம் நவீன், அதே ஆஸ்பத்திரியில் தனது பாட்டியை எலும்பு முறிவிற்காக அனுமதிக்க நேர்கிறது. சமூக ஆர்வலரான அவனது பாட்டிக்கும் அவனுக்கும் கருத்து மோதல் ஏற்படுகிறது.

"வெறும் பணமும் அந்தஸ்தும் மட்டும் ஒருவனை முழுமையாக்காது" என்ற அவனது பாட்டியின் குற்றசாட்டு அவனைச் சீண்டுகிறது. தற்செயலாக அதே ஆஸ்பத்திரியில், சிறுநீரகத்தைத் திருட்டுக் கொடுத்த ஒரு அப்பாவி கூலியாளைப் பற்றி அவனுக்குத் தெரிய வருகிறது. முதலில் தனக்கு அந்த ஏழையினுடைய சிறுநீரகம் பொருத்தப்படவில்லை என்று உறுதிபடுத்திக் கொண்டு, அது சென்று சேர்ந்த இடத்தை பின் தொடர்கிறான்.

ஏழைகளிடமிருந்து அவர்களுக்குத் தெரியாமல் திருடி எடுத்த சிறுநீரகங்களுக்கு, அதிக பணம் தரும் வெளி நாட்டவர்களுக்கு விற்கப்படுவது பற்றிய ஒரு நாட்டின் நிதர்சனம் காட்டப்படுகிறது. வெகுதூரம் சென்று அச்சிறுநீரகம் பொருத்தப்பட்ட நபரை சந்திக்கிறான்.

அத்தனை எளிமையாக தீர்த்துவிடக் கூடிய தார்மீக சிக்கல் இல்லை அது என உணர்கிறான். குற்றவுணர்வால் பீடிக்கப்படுகிறார் அம்மனிதர். ஆனால், பெற்ற சிறுநீரகத்தைத் திருப்பித் தர யாரால்தான் முடியும்? பாதிக்கப்பட்ட அந்த ஏழைக்கு அவர் பண உதவி செய்ய ஒப்புக்கொள்கிறார். அதுவரை நடந்ததே அவனது வாழ்க்கைப் பாதையை மாற்றிவிடுகிறது.

மனிதனின் தார்மீகம் அவனது மனதின் எல்லைக்குள் இருப்பதுதானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலகரின் "பசு பாதுகாப்பு பிரச்சாரச் சங்கம்" இந்து–முஸ்லிம் கலவரத்தைத் தூண்டியது

அண்மைக்காலங்களில் எமது நாட்டில் மத ஸ்தாபனங்கள் தாக்கப்படுவதும், மத நம்பிக்கைகளுக்கெதிரான நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. இந்த நாட்டை சீரழித்து வந்த ஒரு ஆயுதப்போர் முடிவுக்கு வந்த நிலையில் இவ்வாறான உணர்ச்சி யூட்டும் சம்பவங்கள் நிகழத்தப்படுகின்றன. இவை மக்களைக் கலவரப்படுத்துகின்றன.

ஆயுத மோதல் நடைபெற்ற காலத்தில் மத ஸ்தலங்கள் இரு தரப்பினராலும் தாக்கப்பட்டிருக்கின்றன. அந்த சம்பவங்கள் பரஸ்பர பழிவாங்கும் தாக்குதல்களாகவே அமைந்தன. மத சகிப்பின்மையால் அவை நடைபெறவில்லை என்பதே உண்மை.



பாலகங்காதர திலகர் –இந்தியா



பொதுபல சேனாவின் தலைவர்–இலங்கை

எமது நாட்டில் பசுக் கொலையை எதிர்த்து தற்போது களமிறங்கியுள்ளவர்கள் பொதுபலசேனா என்ற பௌத்த அடிப்படைவாத அமைப்பு. அதேநேரம், இந்து சமயத்தவரின் புனித விலங்காக பசு உள்ளது.

ஜீவகாருண்ய அடிப்படையில் மிருக வதைக்கு எதிராக நடத்தப்படும் போராட்டங்கள் மத எதிர்ப்புணர்வை வளர்க்கக்கூடாது என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

1893ஆம் ஆண்டு இந்தியாவில் "பசு பாதுகாப்பு பிரச்சாரச் சங்கம்" என்றொரு அமைப்பு மராட்டியர்களால் உருவாக்கப்பட்டது. அதற்கு தலைமை தாங்கியவர் இந்திய தேசிய காங்கிரஸின் ஆரம்பகாலத் தலைவர்களில் ஒருவரும், சுதந்திரப் போராட்ட தியாகியுமான திலகர். அப்போது மாட்டிறைச்சியை உண்பவர்கள் வெள்ளைக்காரர்களாகவும், கசாப்புக் கடைக்காரர்கள் முஸ்லிம்களாகவும் இருந்தார்கள். பசு பாதுகாப்பு பிரச்சாரச் சங்கத்தினர் நடத்திய போராட்டம் இறுதியில், பம்பாய் தொழிலாளர்களிடையே இந்து-முஸ்லிம் கலவரத்தை ஏற்படுத்தியது. யாழ்ப்பாணத்தில் சைவ சமயத்தையும் தமிழையும் போற்றி வளர்த்த ஆறுமுகநாவலர் சாதிக் கட்டமைப்பை இறுக்கமாக்கி பிரசாரப்படுத்தினார். அவருக்காகவும் யாழ்ப்பாணத்தில் சிலைகள் அமைக்கப்படுகின்றன.

காலனித்துவ காலத்தில் கிறிஸ்தவ, கத்தோலிக்க மதங்கள் ஆக்கிரமிப்பாளர்களின் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால், மதத்தின் பெயரால் யுத்தமும், தீவிரவாதமும், ஆக்கிரமிப்பும், அடக்குமுறையும் இன்னமும் தொடர்கின்றமை மனித இனத்தின் வளர்ச்சியின்மையையே காட்டுகின்றது.

# ஒரு பெண் எம்.பி.க்கும் பெயர் "யாழ்தேவி"



1956இல் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்த ரயில் சேவைக்கு யாழ்தேவி எனப் பெயரிடப்பட்டது. அக்காலப் பகுதியில் ஒரு பெண் எம்.பி.க்கும் "யாழ் தேவி" என்ற பெயரைச் சூட்டிச் சிங்கள இனவாதிகள் கேலி செய்தனர்.


தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்று அன்றே வலியுறுத்தியதால் திருமதி விவியன் குணவர்த்தனவையே இவ்வாறு கேலி செய்தனர்.

இவர் இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர். பாராளுமன்றத் தேர்தலில் அதிக தடவை போட்டியிட்ட பெண் என்ற சாதனைக்குரியவர். இவர் கொழும்பு வடக்குத் தொகுதியில் போட்டியிட்டே முதலில் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். எட்டுத் தட்வைகள் போட்டியிட்ட இவர், மூன்று தடவைகள் மட்டுமே எம்.பி. யாகத் தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புழுக்கொடியல் மா பான்கேக்



**தேவையான பொருட்கள்:**

கோதுமை மா - 2 சுண்டு
புழுக்கொடியல் மா- 1/2 சுண்டு
முட்டை 2
பால் 1 பைந்
ஒரு தேக்கரண்டி அப்பச் சோடா, ஒரு மேசைக்கரண்டி நெய் அல்லது மாஜரீன்,
சிறிதளவு உப்பு

**செய்முறை:**

கோதுமை மாவையும் புழுக்கொடியல் மாவையும் அரித்து ஒரு பாத்திரத்திற்குள் இடவும். இரண்டு முட்டைகளையும் பாலையும் அரித்து வைத்த மாவுடன் சேர்த்து ஒரு கூழ்போல ஆக்கிக் கொள்ளவும். அதற்குள் உப்பையும் அப்பச் சோடாவையும் சேர்க்கவும். தோசைக் கல்லை அடுப்பில் வைத்து வழமையாகத் தோசை வார்ப்பது போல வார்த்து எடுக்கவும். பின்பு சூடாக இருக்கும்போதே உள் நிரப்பும் பொருட்களைக் கொண்டு நிரப்பி உருட்டி வைக்கவும்.

**நிரப்பு பொருட்கள்:**

அரைமூடி தேங்காய் துருவல், பனங்கட்டி அரைக்கிலோ, ஏலக்காய்த்தூள், நிறம்

**செய்முறை:**

தேங்காய்த் துருவல், தூளாக்கிய பனங்கட்டி ஏலக் காய்த்தூள் அத்துடன் நிறம் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து வைக்கவும்.




## வெய்யிலில் உங்கள் மேனி வாடாமலிருக்க நெல்லிக்காய்

நெல்லிக்காயின் மகிமை பற்றி அநேகமான எல்லோரும் அறிந்திருந்தாலும் நெல்லிக்காயைத் தேடி உண்பதில் அதிகம் நாட்டம் காட்டுவதில்லை. தற்போது நெல்லிக்காய் காலம் ஆரம்பமாகிவிட்டது. கச்சான் கடலை விற்பவர்கள் நெல்லிக்காயையும் வைத்திருக்கிறார்கள். பழக்கடைகள் சிலவற்றிலும், சந்தையிலும் நெல்லிக்காய் விற்பனைக்குள்ளது.

நெல்லிக்காயில் கல்சியம், உயிர்சத்து-சி, புரதம் போன்ற சத்துக்களுடன் டேனின், ஃப்ளேவனாய்ட்ஸ், லாஜிக் அசிட் போன்ற துணை சத்துப் பொருட்களும் இருக்கின்றன.

வெயில் காலத்துக்கு, உடலுக்கும் கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரும் குணமுடையது. வைரஸ் மூலம் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்தும்.

உயிர்சத்து-சி அதிகமாக நெல்லிக்காயில் இருப்பதால் காய்கறியில் இருக்கும் இரும்புச் சத்தை ஈர்த்து உடலுக்குக் கொடுக்கும். இரத்த சோகைக்கும் நெல்லிக்காய் நல்ல மருந்து.

நெல்லிக்காயுடன் புதினா, இஞ்சி, எலுமிச்சை சேர்த்து பழரசமாக்கி அருந்தினால் வயிற்றுக் கோளாறுகள் நீங்கும்.

நெல்லிக்காயுடன் சீரகம், வெள்ளைப்பூடு, சின்ன வெங்காயம் போன்றவற்றைச் சேர்த்து துவையல் செய்து சாப்பிட்டால், இரத்தத்தில் கொழுப்பின் அளவு சீராகும். கொழுப்பைக் கட்டுப்படுத்துவதால் இதய சம்பந்தமான நோய்கள் வராமல் தடுக்கும்.

நெல்லிக்காய் தலைமுடியைக் கருமையாக செழிப்பாக வளரவைக்கும் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று நெல்லிக்காயாவது ஒருவர் சாப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகக் கல் நோய்க்கு மருந்து வாழைத்தண்டு

சித்தமருத்துவரிடம் கேட்டால் வாழைத் தண்டுச்சாறு தான் மருந்து என்று சொல்வார்கள் ஆனால் வாழைத்தண்டின் சாறு குடித்தால் குணம் கிடைக்காது, ஏன் என்றால் சித்தர்களின் பாடல்களில் ஒரு பெயருக்கு பல அர்த்தம் இருக்கும். சித்த மருத்துவத்தில் குறிப்பாக அகத்தியர் தன்னுடைய நூலின் ஒரு பாடலில் சிறுநீரகக் கல்லடைப்புக்கு மருந்து சொல்கிறார்.

வாழையின் இரத்தம் தான் மருந்து. அந்த இரத்தத்தை எடுத்துப் பயன்படுத்தக் கூடாது. அப்படியானால் எப்படிப் பயன்படுத்துவது? "சூரியன் மறைந்த பின்னே செய்வாய் கண்ணே, சூரியன் உதிக்கும் முன்னே முடிப்பாய் கண்ணே. வெட்டிய வாழை வான் பார்க்க வேண்டும், பனியும் சாறுடன் சேர வேண்டும்" என்கிறார்.

சூரியன் மறைந்த பின்னர், வாழைக்கன்று ஒன்றின் மேல் பாகத்தை வெட்டி நடுவில் இருக்கும் உட்குருத்தை வெட்டி வெளியே வீசிவிட்டு உள்ளே ஒரு குழி போல் ஆக்க வேண்டும். இந்தக் குழியின் அளவு ஒரு சாண் அளவு இருக்க வேண்டும். மறுநாள் அதிகாலை சூரியன் உதிக்கும் முன், வெட்டப்பட்ட வாழையில் நிரம்பியிருக்கும்சாற்றை, ஒரு உறிஞ்சு குழல் மூலம் குடிக்க வேண்டும். இரண்டு மணித் தியாலங்களின் பின்னர் அரை லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து மூன்று நாட்கள் செய்து வர சிறுநீரகக் கல் கரைந்து வெளியேறி விடுவதை அவதானிப்பீர்கள் என சொல்லப்பட்டுள்ளது.

வாழைத்தண்டு சாப்பிடுவது உடலுக்கு நல்லது என்றே கூறப் படுகிறது. எனினும் எதனையும் அளவுக்கு மீறி செய்வது ஆரோக்கி யத்தைக் கெடுக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

*சித்த மருத்துவம் என்ன சொல்கிறது?*

# நீரிழிவு நோய்

நீரிழிவு நோய் என்பது மேகங்கள் 21 ஒன்றான மது மேகம் என்று சித்த வைத்தியத்தில் அழைக்கப்படுகிறது. மேகங்கள் வானத்தில் ஒரு இடத்தில் நில்லாமல் எப்படி நிலையில்லாது அலைகிறதோ அதே போல நீரிழிவு வியாதியும் உடலில் பல இடங்களில் பல விதமான பிரச்சினையான குணம் குறிகளை வெளிப்படுத்தும்.

சிறு நீரில் சீனி வெளியேறுவதால், சிறு நீர்ப் புற வழிகளில் கிருமித் தொற்று , ஆண்குறி , பெண்குறிகளில் அரிப்பு , மற்றும் சிவந்து போதல் , எரிச்சல் , போன்றவை உண்டாகும். கால்களில் நமைச்சல், ஊசி வைத்து குத்துவது போல சுரீர்-சுரீர் என்ற வலிகள், கால்களில் உணர்வு குன்றுவது, பெரு விரல்களில் ஆறாத புண், கால் பாதம் முழுவதும் ஆறாத ரணம் சிறு நீரக செயலிழப்பு, மண்ணீரல் கல்லீரல் பாதிப்பு. சீனி போன்ற பொருட்களால் இரத்தம் அசுத்தமடைவதால் இரத்தம் கெட்டிப்பட்டு இதயம் அந்தக் கெட்டியான-அசுத்தமான இரத்தத்தை உடல் முழுவதும் அனுப்ப மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகுவதால் இரத்த அழுத்தம் அதிகரித்து பக்க வாதம் வருதல், கண்களில் அழுத்தம் அதிகரித்தல், குளுக்கோமா, உடல் சூடாகுதல், அந்தச் சூட்டைத் தணிக்க உடல் சேர்த்து வைக்கும் சளியால் சைனஸ், முன்பக்க பின்பக்க தலைவலி கழுத்து வலி, செர்விகல் ஸ்பாண்டிலோசிஸ் என்னும் கழுத்து எலும்புத் தேய்வு, அதன் விளைவாக தலைச் சுற்றல், அதிக தாகம், அதிக பசி, அதிக சிறு நீர் கழித்தல், உடலெங்கும் சொல்ல முடியாத அளவு வலி, உடலில் எங்கு காயம் பட்டாலும் ஆறாத நிலை இவை போல இன்னும் பல நேரிடும்.

நம் உடலில் உள்ள இரத்தச் சிவப்பணுக்களில் உள்ள ஹீமோ குளோபின் , நுரையீரல்களுக்குச் சென்று ஒட்சிசனை எடுத்துக் கொண்டு ஆக்ஸி-ஹீமோகுளோபின் ஆக மாறி மீண்டும் நம் தசையில், உடலில் உள்ள செல்களுக்கு ஒட்சிசனைக் கொடுத்துவிட்டு மீண்டும் ஹீமோகுளோபின் ஆக மாற வேண்டும். ஆனால் சீனியின் அளவு அதிகரிப்பால் இந்த ஹீமோ குளோபினைச் சுற்றி சீனி ஒட்டிப்பிடித்துக் கொள்வதால் நுரையீரல்களுக்குச் சென்று ஒட்சிசனை எடுத்துக் கொண்டு ஆக்ஸி-ஹீமோ குளோபின் ஆக மாறுவதைத் தடுத்துவிடுகிறது.

எனவே இரத்தம் நுரையீரல்களுக்கு போனாலும், பிறகு அங்கிருந்து உடலெங்கும் பரப்பப்பட்டாலும் பிராண வாயுவான ஒட்சிசனை நுரையீரலில் இருந்து எடுக்கும், பின் உடல் அணுக்களுக்கு கொடுக்கும் பணியைச் செய்யாமல் ஒப்புக்கு ஓடிக் கொண்டேயிருக்கும். விளைவு உடலெங்கும் உள்ள செல் அணுக்களுக்கு சரியாக ஒட்சிசன் கிடைக்காமல் செல்கள் சாகும். இதனால்தான் சர்க்கரை வியாதிக்காரர்கள் உடல் மெலிந்து போவது நிகழ்கிறது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா விமர்சனம்

மூட நம்பிக்கைகளால் பெரும்பாலான மக்கள் துன்பங்களை அனுபவித்தபோதும், ஏழைகள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு கிராமத்தில் சாமியார்களால் அநாதைகளாக்கப்பட்ட சிறுவர்களின் போராட்டமே மூலக் கதை. ஒவ்வொருவரின் கதையும் தனியாகக் காட்டப்படுகிறது.

புதிய இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் மிகவும் திறம்பட செயற்பட்டிருக்கிறார். சங்ககிரிக்கு அப்பாலிருக்கும் ஒரு சிறிய கிராமம் செட்டிபட்டி. அங்கு சொந்தக்காரர்களான 103 பேரும், அலெக்ஸாண்டர், பவனா, சத்தியராஜ் இந்தப் படத்தில் நடித்திருக்கிறார்கள். கிராமத்தின் மனிதர்கள், அவர்களின் பழக்க வழக்கங்கள் எதுவும் மிகைப்படுத்தப்படாமல் இயல்பாகக் காட்டப்படுகிறது. யாரும் கமராவுக்காக நடிக்கவில்லை, கற்பனையல்ல உண்மை இது என்கிறார்கள்.

**கதை, வசனம், இயக்கம்**
**சங்ககிரி ராஜ்குமார்**



ஒரேயொரு காதல் டூயட் பாட்டு படத்துடன் ஒட்டாமல் நின்றதை அவதானிக்க முடிகிறது. அப்படியொரு பாடல் காட்சியை சேர்க்கவேண்டிய அவசியம் இயக்குநருக்கு இருந்திருக்கிறது. ஆனால் அதை இயல்பாகப் பொருத்த முடியவில்லை. இருந்தும் கவித்துவம் கெடாமல் காதல் காட்சிகளை அமைத்திருப்பதற்கு பாராட்ட வேண்டும். உதாரணமாக இரண்டு புறாக்கள் மின்சாரக் கம்பியில் சந்திப்பதும் அந்தப் புறாக்களை தங்களைப் போன்று உருவகப்படுத்தி அவர்கள் பேசுவதும் முடிவில் புறாக்கள் இறந்துவிட "தமிழ்" என்ற அந்தப் பெண் அழுவதும்.




சோதிடக்காரரின் வாக்கைக் கேட்டு பேரன் தற்கொலை செய்ய பேத்தியார் பைத்தியமாகி அலைகிறார். பைத்தியம் பிடித்தவர்களை சினிமா எப்படிக் காட்டுமோ அப்படியில்லாமல் நெஞ்சை உருக்கும் அவவின் கதறல். சோதிடரான தனது கணவனால் பலர் பாதிக்கப்பட்டதைக் கூறி கணவன் காணாமல் போனது பற்றி தனக்கு எந்தவித வருத்தமும் இல்லை என்பதையும் கூறும் தைரியம் ஒரு கிராமத்துப் பெண்ணுக்கே உள்ளது.

உயிருக்குப் போராடும் தன் மகனைக் காக்க, வீதிகளில் பணம் கேட்டு அலையும் அந்த தெருக்கூத்துக் கலைஞன், தான் சொல்வது உண்மை என்பதை நம்பவைக்க, கூத்து கட்டிப் பாடி அழும் காட்சியில் பக்கத்தில் அமர்ந்திருந்த பலரது கண்களில் கண்ணீர் வழிந்ததைப் பார்க்க முடிந்தது.

பூசாரிகள், சோதிடர்கள், மூட நம்பிக்கைகளால் சாக்கடையான இந்த சமூகத்தின் இருட்டுப் பக்கத்தை முடிந்தவரை வெளிச்சம் போட்டுக் காட்டிய படம். மூட நம்பிக்கைக்கெதிரான சிறுவர்களின் போராட்டம் வெறும் கற்பனையல்ல. நடைமுறையில் சாத்தியமானதே. கதையமைப்பு, காட்சியமைப்பு, நடிப்பு, இசை, ஒளியமைப்பு யாவற்றிலுமே சோடை போகாது சமூகத்தின் கண்களைத் திறக்க வைக்கும் இந்தத் திரைப்படம். சாமியார்கள், சோதிடர்கள், அவதாரங்களால் சாதாரண கூலித் தொழிலாளி முதல் நாட்டை ஆளும் அதிபர்கள் வரை ஆட்டிப் படைக்கப்படுகிறார்கள். கடவுளை மறுக்கும் பெரியாரின் கட்சியிலிருந்து வரும் சத்தியராஜின் வசனங்கள் சிலருக்கு இடைஞ்சல் ஏற்படுத்தினாலும் இன்றைய காலத்திற்கு அவசியமானதே இந்தத் திரைப்படம்.



செட்டிபட்டி கிராமத்திலுள்ள இயக்குநர் ராஜ்குமாரின் உறவினர்கள் 103 பேர் வெங்காயம் படத்தில் நடிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சினிமா விமர்சனம் - சினிமா விமர்சனம் - சினிமா விமர்சனம் - சினிமா விமர்சனம்

# துன்பத்திற்கு மருந்தாகும் நகைச்சுவைக் கலைஞர்கள்

ஒரு நகைச்சுவை நடிகர் பாடிய 'சோக கீதங்கள்' பெரிய அளவில் ரசிக்கப்பட்டன. "பிறக்கும்போதும் அழுகிறான்.. இறக்கும்போதும் அழுகிறான்.." என்ற பாடலை ரசிக்காதவர் யாருமில்லை எனலாம். இன்றும் கூட மெல்லிசை நிகழ்ச்சிகளில் சந்திரபாபுவின் பாடல்கள் பாடப்படுகின்றன.

இலங்கைக்கு சந்திரபாபு வருகைதந்திருந்தபோது, இலங்கை வானொலி அவரிடம் பேட்டி கண்டது. அப்போது 'உலகத்திலேயே சிறந்த நடிகர் யார்?' என அவரிடம் கேள்வி கேட்கப்பட்டபோது, 'There is only one சந்திரபாபு. அடுத்து சிவாஜி கணேசன் நல்லா நடிக்கிறான்' என்று பேட்டி கொடுத்திருந்தார். இது சந்திரபாபுவின் தன்னம்பிக்கையை எடுத்துக்காட்டியது.

நடிகை சாவித்திரி ஒருமுறை இந்தோனேசியாவுக்கு போயிருந்தபோது, அதிபரின் வற்புறுத்தலால் மது அருந்திய சாவித்திரி, அதன்பிறகு மதுவுக்கு அடிமையாகிவிட்டார். மாலை நேரங்களில் மது அருந்த சாவித்திரிக்கு 'கம்பெனி' கொடுத்தவர் சந்திரபாபுதான்.



'சாவித்திரியால் சந்திரபாபு கெட்டான்', 'சந்திரபாபுவால் சாவித்திரி கெட்டாள்' என்றும் சொல்லப்பட்டது.

ஒருவரைப் பற்றி விமர்சனம் செய்யும்போது, வரும் பின் விளைவுகளைப் பற்றி அவர் யோசித்தது இல்லை. சந்திரபாபு ஒரு பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்தார். அந்த பேட்டி, அவருக்கு திரை உலகில், பலரது வெறுப்பைச் சம்பாதித்துக் கொடுத்தது. அந்தப் பேட்டியில்...

கே: ஜெமினி கணேசன் பத்தி என்ன நினைக்கிறிங்க?

பதில்: அவன் என்னோட ஆதி கால நண்பன். திருவல்லிகேணியில குப்புமுத்து முதலி தெருவில ஒரு மாடியில நான் குடியிருந்தேன். அப்ப அவன் 'தாய் உள்ளம்' படத்துல நடிச்சிகிட்டிருந்தான். அவனுக்கு நான் காமெடி எப்படி பண்ணனும், பேத்தாஸ்னா எப்படி பண்ணனும், லவ் சீன எப்படி பண்ணனும்னு நடிச்சி காட்டினேன். அடே அம்பி, இத்தனை வருஷம் ஆச்சேடா, இன்னும் நடிப்புல எந்த முன்னேற்றத்தையும் காணுமேடா. நீ போன ஜென்மத்துல வட்டிக் கடை வச்சிருந்திருப்படா, படுபாவி.

கே: சிவாஜி கணேசன் பத்தி உங்க அபிப்பிராயம் என்ன?

பதில்: அவர் நல்ல நடிகர். பட், அவரை சுத்தி காக்கா கூட்டம் ஜாஸ்தி இருக்கு. அந்த ஜால்ரா கூட்டம் போயிடிச்சின்னா அவர் தேறுவார்.

கே: எம்ஜிஆர். பத்தி உங்க அபிப்பிராயம் என்ன?

பதில்: அவர் கோடம்பாக்கத்துல ஒரு ஆஸ்பத்திரி கட்டுறதா கேள்விப்பட்டேன். பேசாம கம்பவுண்டரா போகலாம்.

சந்திரபாபு, மிகக் குறுகிய காலத்தில் திரையுலகில் அளப்பரிய சாதனைகள் செய்துவிட்டு இறந்துபோனார்.




ஜெக ஜால புஜ பல தெனாலிராமன்

தற்காலத்தில் நாம் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த சிறந்த நகைச்சுவைக் கலைஞன் வடிவேலு. தமிழக அரசியலும் தமிழ் சினிமாவும் இரண்டறக் கலந்துவிட்ட நியைில், எதிர்த்தரப்பிற்கான தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட வடிவேலு தமிழக சினிமா உலகத்தால் பழிவாங்கப்பட்டுவிட்டார்.

வடிவேலு இல்லாமல் நஷ்டப்பட்டது துன்பத்தில் வாழும் மனிதர்கள்தான். மனநோயாளிகளும் கூட வடிவேலுவின் நகைச்சுவையால் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். வடிவேலு மீண்டும் சினிமாவில் வருகிறார் என்பது உலகின் கோடிக்கணக்கான இரசிகர்களுக்கு மகிழ்ச்சியளித்துள்ளது. "ஜெக ஜால புஜ பல தெனாலிராமன்" படத்தில் 46 மனைவிகளுடன் தோன்றும் வடிவேலின் நகைச்சுவையை இரசிக்கத் தயாராகுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குறை ஒன்றும்
இல்லை உனக்கென்ன வெட்கம்
கறை போன்றதல்ல நம்வாழ்வில் துக்கம்
இறைவனே எம்பக்கம்
இருக்கின்றான் எனும் போது
பொறை கொண்டு எவர் எதிர்ப் பக்கம்

கய்து (கைது) தான் செய்திடுமா உன்னை
இங்கு சோதனை
எய்து தான் வீழ்த்திடலாம் வந்த மன வேதனை
நோய்துதான் போகாமல்
நிமிர்ந்து நில்! நேர் கொண்டே
செய்து தான் காட்டிடலாம் இவ்வுலகில் சாதனை

கற்றாலும் உனக்கு கூடாது அல்வழி
பெற்றாலும் சிலது கேளாது சொல்வழி
நத்தாரும் பொங்கலும்
நமக்காய்ச் செலவிழுப்போர்
செத்தாலும் எமக்கு காட்டுவார் நல்வழி

காத்தே நமக்காய் நிறைப்பார் நெல்லை - முகம்
பூத்தே உனக்காய் பொறுப்பார் தொல்லை
சேர்த்தே வைத்துப்
புண்ணியம் தந்திடும்
மூத்தோர் நமக்காய் உரைப்பார் சொல்லை

பசுவைத்தான் தின்றிடுமா பார்ப்பனின் விருப்பு
காசுதான் வென்றிடுமா பேரமக்கள் இருப்பு
ஏசுகின்ற போதும் - அவர்
உற்றதுணை எங்களிற்கே
சிசுவைத்தான் தின்றிடுமா கருப்பையின் நெருப்பு.

**க.அபராசுதன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பனை அபிவிருத்திச் சபை
# Palmyrah Development Board

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

## பனை அபிவிருத்திச் சபையின் "கற்பகம்" நிலையங்களில் விற்பனைக்குள்ள பிரதான பனம் பொருள் உற்பத்திகள்

- பனம் கோடியல்
- பனம் பானம்
- பனங்களி
- பனங்கட்டி
- பனம்பாணி
- பனாட்டு
- பாணிப்பனாட்டு
- கல்லாக்காரம்
- பனங்காய்ப் பலகாரம்
- ஒடியல்
- ஒடியல்மா
- புழுக்கொடியல்
- புழுக்கொடியல் மா
- பாம்போஷா
- கைவினைப் பொருட்கள்
- தும்பு உற்பத்திப் பொருட்கள்
- பற்பசை
- மற்றும் ஏனைய பனை சார்ந்த உற்பத்திகள்




பனை சார்ந்த உற்பத்தி பொருட்கள் அதி உயர் தரத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றன



மேலதிக விபரங்களுக்கு:-

பனை அபிவிருத்திச் சபை
தலைமை அலுவலகம்:-
தேசிய வீடமைப்பு செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2222034, தொலைநகல்: 021-2224154
மின்னஞ்சல்: slpdbho@yahoo.com, info@katpahacholai.com
இணையம்: www.katpahachcholai.com

நகர அலுவலகம்:-
இல.244, காலி வீதி, கொழும்பு - 04.
தொலைபேசி: 011-2586820, தொலைநகல்:011-2553697
மின்னஞ்சல்: slpalmyrah@yahoo.com

### பனைமரம் தறித்தல் தண்டனைக்குரிய குற்றம்

452ஆம் அத்தியாயமான மரங்களைத் தறித்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1962 ஒக்டோபர் 13ஆந் திகதிய 13,348ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிலுள்ள அட்டவணை, 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அதில் பலாமரம், ஈரப்பலா மற்றும் பனைமரம் தறித்தல் தண்டனைக்குரிய குற்றம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ANDRA Printers, Jaffna - 021-221 7279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org